# செந்தமிழ்

# இலக்கியக் கலம்பகம்

முதற் புத்தகம்—நான்காம் பாரம்

தொகுத்தோர் :

**வித்துவான் அன்பு. கணபதி**

தமிழாசிரியர்

பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, சென்னை.

**த. சே. உமாபதி, B. A., L. T.**

தலைமை ஆசிரியர்

நவாப். ஸி. அப்துல் ஹகீம் நடுநிலைப்பள்ளி, சென்னை.

---

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப் பள்ளித்
தலைமையாசிரியர்

**ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.**

அவர்கள் முன்னுரையுடன் கூடியது.

---

**உமாதேவன் & கம்பெனி**

நூற்பதிப்பாளர்

185, லிங்கச் செட்டித் தெரு, சென்னை.

பதிப்புரிமை] 1941 [விலை 12 அணா

முதற் பதிப்பு—1941.

Kesari Printing Works, Madras

# முன்னுரை

---

தமிழ்த் தொண்டில் ஆழ்ந்துள்ள தோழர்கள் திரு. வித்துவான் அன்பு கணபதி அவர்களும், திரு. த. சே. உமாபதி, பி. ஏ. எல். டி., அவர்களும் உண்மைத் தமிழ் ஆர்வத்துடன் தொகுத்துப் பதிப்பித்துள்ள செந்தமிழ் இலக்கியக் கலம்பகத்தின் இவ்விரு புத்தகங்களும் அவற்றின் பெயருக்கேற்ப நானுவித அரிய இலக்கிய மணிகள் பொதிந்து மிளிர்கின்றன. அம்மணிகளை இயற்றியுள்ள தமிழாசிரியர்களின் மாண்பே இத்தொகுதிகளுக்குப் பீடும் பெரும் பயனும் நல்குவதாகும். அம்மாண்பின் மணம் தமிழ் இளைஞர்கள் புலனுக்கும் எட்டி இன்பமளிக்கும் வண்ணம் அவர்களின் செம் மொழிகளைத் தளையவிழ்த்துத் தூசு தட்டித் துப்புரவான வகையில் சமர்ப்பித்தல் ஒரு சிறந்த தமிழ்த் தொண்டேயாம். அதனை இப் பதிப்பாசிரியர்கள் சீரிய முறையில் மேற்கொண்டு திறம்படச் செய் துள்ளனர் என்பது இப்புத்தகங்களை ஒரு தரம் புரட்டிப் பார்க்கும் போதே விளங்குகிறது.

இவற்றைப் பாடபுத்தகங்களாகக் கொண்டு தங்கள் தமிழறி வைப் பெருக்கிக் கொள்ள நேரும் இளைஞர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையிலும், தமிழ் இலக்கியப் பயிற்சியில் மனந்தோய்ந்து நிற்பார்கள் என்பது திண்ணம்.

பச்சையப்பன் கலாசாலை, சென்னை.
7—2—41.

**ம. சண்முகசுந்தரம்,**
எம். ஏ., எல் டி.,
தலைமையாசிரியர்.

---

# நூன் முகம்

இன்று நம் செந்தமிழ் நாட்டில் யாண்டும் தமிழ் முழக்கம் கேட்கின்றது. தமிழ் மக்கட்குத் தாய்மொழியிடத்து ஊக்கம் பிறந்துளது. அரசியலார் நாட்டமும் நம் அருந்தமிழ்மீது சிறிது திரும்பியுளது. கல்லூரிகளில் தமிழ் வளர்ச்சி கருதி, வித்துவான், B. O. L., முதலிய வகுப்புக்கள் தோன்றியுள்ளன. இங்ஙிலையில் உயர்தர வகுப்புக்களிலேயே மாணவர் தமிழ் நூல் துறைகள் பலவற்றினும் சிறிது படிந்தெழுதல், அவர்க்குத் தமிழ் மொழியில் உலையா ஊக்கமளிக்க உதவி புரியுமென்பது எமது துணிபு. இந்நோக்கம் முற்றுப் பெறும் வகையில் இந்நூல்வரிசை அமைக்கப்பெற்றுளது.

செய்யுட் பகுதியில் பழையனவும், புதியனவுமான பனுவல்கள் பலவற்றினின்றும் ஒவ்வோர் அகப்பை அள்ளிச் சேர்த்தும், உரை நடைப் பகுதியில் பழைய, புதிய வசன நடைகளை மாணவர்க்கு அறிமுகப்படுத்தும் கருத்துக்கொண்டு சென்ற நூற்றுண்டிலும், இந்நூற்றுண்டிலும், வாழ்ந்தோரும், வாழ்வோருமான புலவர்களின் பல் பொருளுணர்த்தும் உயரிய கட்டுரைகள் பலவற்றைச் சேர்த்தும் இந் நூல் வரிசையினைச் சமைத்துள்ளோம். இக்கட்டுரைகளின் முறை வைப்பும், அவற்றின் ஆசிரியர்களின் காலம்பற்றியே அமைக்கப்பட்டுளது. இக்கட்டுரைகள் வசன நடையின் வளர்ச்சியில் காலக்கிரமத்தில் தோன்றியுள்ள மாறுபாடுகளை மாணவர் அறிந்து நடை பழகப் பெரிதுந் துணையாக இருக்கும் என்று கருதுகிறோம். கட்டுரையாசிரியர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பல்வகை நூல்களும், பாக்களும், பொருள்களும் இந்நூல் வரிசையின்கண் விரவி வருதலின் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டுளது.

கலாசாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும், பிறரும் இந்நூல் வரிசையினை உவகையுடன் ஏற்று எங்கள் ஊக்கத்திற்கு ஆக்கம் அளிக்கக் கோருகிறோம்.

இந்நூல் வரிசை, இவற்றைக் கற்கும் மாணவர்கட்குத் தமிழ் மொழியில் ஊக்கமும் பற்றும் உண்டாதற்கு உறுதுணையாயிருக்குமேல், அதுவே எங்கள் உழைப்பின் உண்மைப் பயனெனக்கொண்டு உவகை எய்துவோம்.

அன்பு. கணபதி
த. சே. உமாபதி

# நன்றியுரை

இந்நூலுக்கெனத் தங்கள் உயரிய கட்டுரைகளை அன்புடன் அளித்த அறிஞர்களான மகாவித்துவான். ரா. இராகவையங்கார், இராவ்சாகிப். மு. இராகவையங்கார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. பரலி-சு. நெல்லையப்பர், இராவ்சாகிப். S. வையாபுரிப் பிள்ளை, திரு. P. N. அப்புஸ்வாமி அய்யர், திரு. R. P. சேதுப் பிள்ளை, வித்துவான் மு. வரதராசனார் ஆகியோர்க்கும், 'தமிழ்ச் சங்கங்களும் அவற்றின் வேலைகளும்' என்ற கட்டுரைக்கு உரிமைதந்த திரு. T. K. இராஜேசுவரன் அவர்கட்கும், 'ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள்' என்ற கட்டுரைக்கு உரிமைதந்த வி. சூ. சுவாமிநாதன் கம்பெனி உரிமையாளர்க்கும், 'பிருதிவி ராஜன்' என்ற நாடகப் பகுதிக்கு உரிமை தந்த குமாரசாமி நாயுடு & சன்ஸ் உரிமையாளர்க்கும், திரு. கா. ந. தணிகைவேள் முதலியார் அவர்கட்கும், 'இலக்கியம்' என்ற கட்டுரைக்கு உரிமையளித்த திரு. மணி—கோடீசுவரன், B.A., L.T., அவர்கட்கும், தமது செய்யுட்களைச் சேர்த்துக்கொள்ள உரிமை அளித்த திரு. வி. கலியாணசுந்தரனார், புதுவை பாரதிதாசர், வித்துவான் - ரா. நடேச நாயகர், திரு. தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியோர்கட்கும்; கலைமகள், செந்தமிழ்ச் செல்வி வெளியீடுகளின் நிருவாகிகட்கும்; பிற அறிஞர்கட்கும், செய்யுட்பகுதி முழுமைக்கும் ஒப்புநோக்குதல் முதலிய திருத்தங்கள் செய்துதவிய நண்பர், வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், இந்நூலைப் பாராட்டி மிகுந்த ஆர்வத்துடன் முன்னுரை கொடுத்துதவிய அறிஞர் ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கட்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றியை உரிமைப் படுத்துகிறோம்.

**அன்பு - கணபதி.**

**த. சே. உமாபதி.**

# உள்ளுறை

## செய்யுட் பகுதி

பக்கம்.

I. வணக்கமும் வாழ்த்தும்

i கடவுள் ... ... 1

ii தமிழ் ... ... 7

iii பாரத நாடு ... ... 9

iv தமிழ் நாடு ... ... 10

II. நீதி

1. அறநெறிச் சாரம் ... ... 11

2. பழமொழி நானூறு ... ... 12

3. நாலடியார் ... ... 13

4. சிறுபஞ்ச மூலம் .. ... 14

5. ஆசாரக் கோவை ... ... 15

6. தினகர வெண்பா .... .... 16

III. செய்யுட் கதைகள்

1. நளவெண்பா - கலிநீங்கு காண்டம் ... 17

2. திருவிளையாடற் புராணம்—இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் ... ... 23

3. செவ்வந்திப் புராணம்—தாயான சருக்கம் ... 30

4. தேம்பாவணி—மகவருள் படலம் ... 35

IV. சங்கச் செய்யுட்கள் ... ... 37

V. வருணனை ... ... 39

VI. பல்வகைப் பிரபந்தங்கள்

1. பிள்ளைத் தமிழ் ... ... 42

2. பரணி ... ... 44

| | | | |
|---|---|---|---|
| | 3. தூது | ... ... | 47 |
| | 4. கலம்பகம் | ... ... | 49 |
| | 5. அம்மானை | ... ... | 50 |
| | 6. ஊசல் | ... ... | 51 |
| | 7. குறவஞ்சி | ... ... | 52 |
| | 8. பள்ளு | ... ... | 53 |
| VII. | மொழி பெயர்ப்பு | | |
| | 1. மேகத்தின் சுய சரிதை | ... ... | 54 |
| | 2. நிலா | ... ... | 55 |
| VIII. | சீட்டுக்கவி | ... ... | 56 |
| IX. | தனிப் பாடல்கள் | ... ... | 57 |
| X. | சந்தப்பா | ... ... | 58 |

## உரை நடைப் பகுதி

---


1. மனுச்சோழன் ... ... 59
   —சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்
2. கல்வி ... ... 64
   —திரு. ச. வேதநாயகம் பிள்ளை
3. தமிழ்ச்சங்கங்களும் அவற்றின் வேலைகளும் ... 67
   —திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை, B. A.
4. ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள் ... 73
   —திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B. A.
5. கடவுள் வழிபாடும் சமய உணர்ச்சியும் ... 78
   —சேது சமஸ்தான மகா வித்துவான்
   ரா. இராகவையங்கார் தமிழாராய்ச்சிக் கழக ஆசிரியர்,
   அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
6. பிருதிவிராஜன் (ஒரு நாடகம்) ... ... 82
   —திரு. கா. ரா. நமச்சிவாய முதலியார்
7. பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள் ... 88
   —இராவ்சாகிப் மு. இராகவையங்கார், சென்னை
8. கோயிலும் குறிகளும் ... ... 94
   —திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T.
   கல்வியதிகாரி, செங்கற்பட்டு மாவட்டம்
9. இலக்கியம் ... ... 100
   —மணி. திருநாவுக்கரசு முதலியார்
10. அரவிந்தர் கடிதம் (மொழி பெயர்ப்பு) ... ... 106
   —திரு. பாலி. சு. நெல்லையப்பர்

11. அகராதி ... ... 109

*—இராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை B A., B L.*

*தமிழாராய்ச்சித் துறைத் தலைவர்,*

*சென்னைப் பல்கலைக் கழகம்*

12. கடல் ... ... 116

*—திரு. P. N. அப்புஸ்வாமி அய்யர், B. A., B. L.*

13. வீணைக் கொடியோன் ... ... 121

*—திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., B. L.*

*தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,*

*சென்னைப் பல்கலைக் கழகம்*

14. நாலந்தாப் பல்கலைக் கழகம் ... ... 127

*—வித்துவான் மு. வரதராசனார் B. O. L.,*

*தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை*

15. கப்பலோட்டிய தமிழன் ... ... 131

*—T. S. உமாபதி, B. A., L. T.*

16. கிராமம்: பண்டும் இன்றும் ... ... 139

*—வித்துவான் அன்பு. கணபதி*

# திரிகூடம்



மலை

பொன்மலைக்குமோர் முதுமலை; புதுமையாற் புதுமலை; கயிலாய
நன்மலைக்கொரு துணைமலை; உவரிசூழ் ஞாலமேல் வளர்ந்தோங்கும்
பன்மலைக்குமோர் தலைமலை; திசைதொறும் பசுந்தமிழ் மணம்நாறும்
தென்மலைக்கொரு வடமலை சிவபிரான் திருமலைத் **திரிகூடம்.**

அருவி

மொய்யலைத்தெண் டிரைக்கடன்மேல் வால்நீட்டி,
முதுதரைமேற் படிவங் காட்டிச்
சையமுடி தொடுத்தனந்த மணிமுடிகள்
கவித்ததலை **அருவி** மேனாள்
வையந்தாங் கியசேடன் வானகந்தாங்
குறநிமிர்ந்த வகையா மன்றி,
வெய்யமருத் துடனிகலி மேருவின்மேல்
முடிகவித்த விசய மாமால்.

# செந்தமிழ் இலக்கியக் கலம்பகம்

## முதற் புத்தகம்

## செய்யுட் பகுதி

# I. வணக்கமும் வாழ்த்தும்

## i. கடவுள்

### 1. தேவாரம்

தேவாரம் என்னும் சொல்லை தே + ஆரம் எனப் பிரித்துக் கடவுளுக்கு அணியப்படும் பாமாலை என்று பொருள் கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய நால்வரும் சைவ சமய குரவராவர். இவர்களுள் முதல் மூவர் அருளிச்செய்த பாக்கள் தேவாரம் என்றும், மாணிக்கவாசகர் அருளிச் செய்த பாக்கள் திருவாசகம் என்றும் பெயர் பெறும்.

கீழ் வரும் செய்யுள் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்தது. திருஞான சம்பந்தர் சீகாழியில் அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவரது தந்தையாரின் பெயர் சிவபாதவிருதயர் என்பது; தாயார் பகவதியார். சம்பந்தர் ஆதி சைவர். இவரது காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டு என்பர்.

நனவினுங் கனவினு நம்பா வுன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்!
புனல்விரி நருங்கொன் றைப்போ தணிந்த
கனலெ ரியனல் புல்குகை யவனே!
இதுவோவெமை யாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோஉன தின்அரு ளாவடுதுறை அரனே! 1

கீழ் வரும் செய்யுளை அருளியவர் திருநாவுக்கரசு நாயனார். இவருக்கு அப்பர், வாகீசர் முதலிய வேறு பெயர்களும் உண்டு. இவர் நடுநாட்டில் திரு ஆமூர் என்னும் ஊரில், வேளாண் குலத்தில் உதித்தவர். இவரது தந்தையார் பெயர் புகழனார்; தாயார் மாதினியார். இவர் மத உண்மைகளை ஆராய விருப்புற்றுச் சைவ சமயத்தைவிட்டுச் சமண சமயத்தைத் தழுவினார். தமக்கு வந்த சூலைநோய் நீங்காமையால் மறுபடியும் சைவரானார். இவரது காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர்.

மனமெனும் தோணி பற்றி மதிஎனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகட லோடும் போது,
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய ஒண்ணா(து);
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே! 2

கீழ் வரும் செய்யுள் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்தது. இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில், அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சடையனார்; தாயார் பெயர் இசைஞானியார். இவர் ஆதி சைவர். இவரது பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர் என்பது. இவரது காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாய் இருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாளரின் துணிபு.

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத,
அவனைக் காப்பது காரண மாக,
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்கு;உன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீ!எனை நமன்தமர் நலியில்,
'இவன்மற்(று) என்னடி யான்,'என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே! 3

## 2. திருவாசகம்

கீழ் வரும் செய்யுள் திருவாசகத்திலுள்ளது. திரு + வாசகம் என்னும் தொடருக்கு 'அழகிய சொற்கள்' என்பது பொருள். பக்திச் சுவை நிறைந்த திருவாசகம் என்னும் இந்நூல் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகரால் அருளப் பெற்றது. இவர் பாண்டி நாட்டில் திருவாதவூரில், அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் சம்புபாதசிருதர்; தாயார் ஞானவதியார். இவரது காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். இவர் இயற்றிய வேறு நூல் திருக்கோவையார்.

'வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே!' எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணா யண்ணா!
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாம்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. 4

## 3. நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்

கீழ் வரும் செய்யுள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளது. திருமாலின் அடியவர்களான ஆழ்வார் பன்னிருவர் பாடிய துதிப்பாக்களின் தொகுதிக்கு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் என்பது பெயர். இச்செய்யுள் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்தது. இவர் சோழ நாட்டிலே உள்ள திருக் குறையலூரிலே, கள்ளர் மரபிலே, சோழ மன்னரின் தானைத் தலைவரான நீலர் என்பவருக்குத் திருக்குமாரராய் அவதரித்தார். பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், முதலியன இவர் இயற்றியவை. இவரது காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டாகும்.

திருநெடுந்தாண்டகம்

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்

காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணி னேனே. 5

## 4. திருவேங்கடத்தந்தாதி

*கீழ் வரும் செய்யுள் திருவேங்கடத்தந்தாதியில் உள்ளது. இந் நூலை இயற்றியவர் அழகிய மணவாளதாசர் என்கின்ற திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார் என்பவர். இவர் சோழ நாட்டில் திருமங்கை என்னும் திருப்பதியில், அந்தணர் மரபில், ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் அவதரித்தவர். இவரது காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டு.*

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் தனிநெஞ்சமே
வடமா மலையும், திருப்பாற் கடலும்,வை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. 6

## 5. தாயுமானவர் பாடல்

*கீழ் வரும் செய்யுள் தாயுமானவரால் இயற்றப்பெற்றது. இவர் சோழ நாட்டில் திருமறைக்காட்டில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றினர். இவரது தந்தையார் பெயர் கேடிலியப்பப்பிள்ளை. இவரது சமயம் சைவம். இவர் காலம் கி. பி. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி.*

சாதிகுலம், பிறப்பிறப்புப், பந்தமுத்தி, அருவுருவத்
தன்மை, நாமம்
ஏதுமின்றி, எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யும்
சோதியை,மாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம். 7

## 6. திருவருட்பா

கீழ் வரும் செய்யுள் திருவருட்பாவிலுள்ளது. திருவருளின் திறத்தால் பாடப்பட்ட பாக்களின் தொகுதியாகிய இந்நூலுக்குத் திருவருட்பா எனப் பெயர் வழங்குவதாயிற்று. இதை இயற்றியவர் சிதம்பரம் இராமலிங்க அடிகள். இவர், சிதம்பரத்தை அடுத்த மருதூரில்; கருணீகர் குலத்திலே இராமைய பிள்ளை என்பவருக்கும் சின்னம்மையாருக்கும் பிறந்தார்; சென்னையில் தம் தமயனார் சபாபதி பிள்ளையுடன் வாழ்ந்தார். இவரது சமயம் சைவம். இவரது காலம் கி. பி. 1823 முதல் கி. பி. 1873 வரை.

உலகமெலாந் தனிநிறைந்த உண்மை யாகி,
யோகியர்தம் அநுபவத்தி னுவப்பா யென்றும்
கலகமுறா உபசாந்த நிலைய தாகி,
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி,
விலகலுறா நிபிடஆ னந்த மாகி,
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி,
இலகுபரா பரமாய்ச்சிற் பரமா யன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே! 8

## 7. பொது

கீழ் வரும் செய்யுள் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்களால் இயற்றப்பெற்றது. [இவரது வரலாற்றுக் குறிப்பைப் 10-ஆம் பக்கத்திற் காண்க.]

மண்புனல்தீ வளிவெளியாய் மன்னிநிற்குந் தெய்வம்;
மதிகதிராய் மன்னுயிராய் மகிழ்விக்குந் தெய்வம்;
கண்முதலாம் உறுப்புயிர்க்குக் கதிக்கின்ற தெய்வம்;
கருத்தினிலே கோயில்கொண்டு காக்கின்ற தெய்வம்;
எண்ணெழுத்தால் ஏழிசையால் இசைப்பயனுந் தெய்வம்;
எம்மறையுங் குருவழியே இயம்புகின்ற தெய்வம்;
உண்மைஅறி வானந்த உருவான தெய்வம்;
ஒருநெறியாம் பொதுமையிலே ஓங்குதெய்வம் ஒன்றே. 9

## 8. தேம்பாவணி

தேம்பா அணி என்பது வாடாத மலர்மாலை என்று பொருள் படும். இதை இயற்றியவர் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர். இவர் ஐரோப்பாவில் உள்ள இத்தாலிய நாட்டினர்; ரோமன் கத்தோலிக் மதத்தினர்; தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றவர்; தமிழ் அகராதிக்குத் தந்தை இவரே. தமிழ் உரை நடைக்கும் வழிகாட்டி. கவி இயற்றுவதில் திறம்படைத்தவர். தொன்னூல், சதுரகராதி, அவிவேக பூரண குருகதை முதலியன இவரால் இயற்றப்பெற்ற பிறநூல்கள். இவர் 1746-ஆம் ஆண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் விண்ணக மெய்தினார்.

நீர்பாய் உலகிற்கு உயிரோய்நீ;
　　நிமிர்வீட்டு உலகிற்கு உயிரோய்நீ;
சீர்பாய் பாவிற்கு உரையோய்நீ;
　　திறன்கொண்டு ஆள்வார்க்கு அடலோய்நீ;
ஏர்பாய் இரவிக்கு ஒளியோய்நீ;
　　எம்மேல் இரங்கிப் பிறந்தனை;நாம்
சூர்பாய் துகளற்று உய்வதற்குன்
　　துணைத்தாள் தொழும்பண்பு உரையாயோ! 10

தேறும் தயையின் முனிவோய்நீ;
　　சினத்திற்கு அருள்செய் கனிவோய்நீ;
கூறும் கலையற்று உணர்வோய்நீ;
　　கூறும் தொனியற்று உரைப்போய்நீ;
மாறும் பொருள்யா விலுநின்றே
　　மாறா நிலைகொள் மரபோய்நீ;
ஈறும் தவிர்த்துன் புகழ்க்கடலாழ்ந்து
　　எனக்கே கரைகாட் டருளாயோ! 11

## ii. தமிழ்

### 1. தமிழின் சிறப்பு

கீழ் வரும் செய்யுள் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களால் இயற்றப்பெற்றது. இவர் செங்கற்பட்டு ஜில்லாவில் மணிமங்கலத்தில் சைவ வேளாளர் குலத்தில் 1888-ஆம் ஆண்டில் பிறந்தார்; இவர் பூவை கலியாண சுந்தர அடிகள், மறைமலை அடிகள் ஆகியவர்களிடம் தமிழ் பயின்றார்; பல பாட நூல்கள் இயற்றியுள்ளார்; பல கட்டுரைகள் எழுதியுள்ளார்; அரிய சில தனிப்பாடல்களும் பாடியுள்ளார். இவர் 1931-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

ஆதியில் உலகம் முழுதும் உலவிய
அமிழ்தெனுந் தமிழ்மொழியே!
மாதொரு பாகன் மகிழ்ந்தெமக் கீந்த
மதுரத் தமிழ்மொழியே!
அன்று முதலா இன்று வரையில்
அழியாத் தமிழ்மொழியே!
என்றும் இளமை குன்று தழகுடன்
இலங்குந் தமிழ்மொழியே! 1

கீழ் வரும் செய்யுள் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்களால் இயற்றப்பெற்றது. இவர் வட ஆற்காடு ஜில்லாவில் காவேரிப்பாக்கத்தில் 1876-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தையார் உபாத்தியாயர் இராமசாமி முதலியார் என்பவர். நமச்சிவாய முதலியார் திருமயிலை மகா வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றார். இவர் பல அரிய வசன நூல்களும், பாட புத்தகங்களும், நாடகங்களும், தனிப் பாடல்களும் இயற்றியுள்ளார். இவர் 1936-ஆம் ஆண்டில் விண்ணுலகேகினார்.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!

வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகண்ணு வயங்குநன் மொழியே!
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே! 2

## 2. தமிழ் இலக்கியம்

கீழ் வரும் பாட்டு தேசிக விநாயகம் பிள்ளையவர்களால் இயற்றப் பெற்றது. இவர் 1876-ஆம் ஆண்டில் சுசீந்திரத்தை அடுத்த தேரூரில் பிறந்தார். இவரது தந்தையார் சிவதாணுப் பிள்ளை என்பவர்; தாயார் ஆதிலட்சுமியம்மாள். தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் ஆங்கிலமும் தமிழும் நன்கு பயின்றவர். பாரதியாரின் பாடல்களைப் போன்ற பல பாடல்களை இவர் பாடியுள்ளார். அவற்றின் தொகுதிக்கு மலரும் மாலையும் என்பது பெயர். இப்போது இவர் தாம் வகித்து வந்த ஆசிரியத் தொழிலினின்றும் ஓய்வு பெற்றுள்ளார்.

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே. 1

பாவின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவமே. 2

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. 3

கற்றவர் மெச்சும் கலித்தொகை—யாமின்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே. 4

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும்—அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே. 5

## iii. பாரத நாடு

கீழ் வரும் பாடல்கள் சி. சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப் பெற்றவை. இவர் திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரத்தில், 1882-ஆம் ஆண்டில், அந்தணர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சின்னசாமி ஐயர்; தாயார் இலட்சுமியம்மாள். இவர் சிறந்த தேசாபிமானி; தமிழிலும், ஆங்கிலம் வடமொழி முதலிய பிற மொழிகளிலும் வல்லவர்; உணர்ச்சி ததும்பும் பாட்டுகள் இயற்றுவதில் ஈடற்றவர். இவர் 1921-ஆம் ஆண்டில் இவ்வுலகை நீத்தார். இவர் ஞானரதம் முதலிய பல அரிய உரை நடை நூல்களும், கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

மன்னும் இமயமலை எங்கள் மலையே;
　　மாநில மீததுபோற் பிறிதிலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே;
　　இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே!
பன்னரும் உபநிட நூல்எங்கள் நூலே;
　　பார்மிசை ஏதொரு நூல்இது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே;
　　போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே! 1

பாரத வீரர் மலிந்தநன் னாடு;
　　மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு;
நாரத கானம் நலந்திகழ் நாடு;
　　நல்லன யாவையும் நாடுறு நாடு;
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு;
　　புத்தர் பிரானருள் பொங்கிய நாடு;
பாரத நாடு பழம்பெரு நாடே!
　　பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே! 2

---

## IV. தமிழ் நாடு

*கீழ் வரும் செய்யுட்கள் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களால் இயற்றப்பெற்றன. இவர் திருவேற்காட்டிற்கு அருகிலுள்ள துள்ளம் என்னும் ஊரில், 1883-ஆம் ஆண்டில் பிறந்தவர்; சைவ வேளாளர். திருவாரூர் விருத்தாசல முதலியார், சின்னம்மாள் என்பவர் இவரது பெற்றோர் ஆவர். இவர் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய பல செய்யுட்களை இயற்றியுள்ளார்.*

வேங்கடமே தென்குமரி வேலைஎல்லை நாடு;
மென்மைகன்னி இனிமைகனி மேன்மைமொழி நாடு;
தேங்கமழும் பொதிகைமலை தென்றல்உமிழ் நாடு;
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு;
பாங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு;
பாவளர்ந்த வைகையொடு பழம்பொருனை நாடு;
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு;
சிற்றோடை கால்பரந்த செய்யதமிழ் நாடே! 1

புறமுதுகை முதியவளும் போற்றாத நாடு;
புதல்வனைத்தாய் மகிழ்வுடனே போர்க்கனுப்பும் நாடு;
நிறவெள்ளி வீதிஅவ்வை நேர்எயினி நாடு;
நிறைஒழுக்கக் கண்ணகியின் நீதிநிலை நாடு;
திறநடன மாதவியின் தெய்வஇசை நாடு;
சேய்மணிமே கலைஅறத்துச் செல்வம்உற்ற நாடு;
நறவுமொழிப் புனிதவதி நங்கையாண்டாள் நாடு;
ஞானமங்கை மங்கம்மாள் நல்லதமிழ் நாடே! 2

# II நீதி

## 1 அறநெறிச் சாரம்

*இந்நூல் முனைப்பாடியார் என்பவரால் இயற்றப்பட்டது. முனைப்பாடியார் ஜைன சமயத்தவர்; திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்தவர்; இவரது காலம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பர்.*

ஒழுக்கம்

*மக்க ளுடம்பு பெறற்கரிது; பெற்றபின்*
*மக்க ளறியு மறிவரிது;—மக்கள்*
*அறிவறிந்தா ரென்பா ரறத்தின் வழுவார்;*
*நெறிதலை நின்றொழுகு வார்.* 1

ஈகை

*செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து, செவ்வியராய்ப்*
*பல்கிளையும் வாடாமல் பாத்துண்டு,—நல்லன*
*தான மறவாத தன்மையோர்க்(கு) அஃதென்ப*
*யானைமேற் பெற்ற தவிசு.* 2

புலனடக்கல்

*நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே!*
*பின்னையான் யாரைப் பெறுகிற்பென்?—நின்னை*
*அறப்பெறு கிற்பெனேல் பெற்றேன்;மற் றீண்டே*
*துறக்கந் திறப்பதோர் தாழ்.* 3

வீட்டுலகமெய்தல்

*பண்ணமை யாழ்குழல் கீதமென் றின்னன*
*நண்ணி நயப்ப செவியல்ல;—திண்ணிதின்*
*வெட்டென்ற சொன்னீக்கி விண்ணொடு வீட்டின்பம்*
*கட்டுரை கேட்ட செவி.* 4

மதுபானம்

*ஒளியும், ஒளிசான்ற செய்கையும், சான்றோர்*
*தெளிவுடைய னென்றுரைக்குந் தேசும்,—களியென்னுங்*
*கட்டுரையாற் கோது படுமேல், இவையெல்லாம்*
*விட்டொழியும் வேறாய் விரைந்து.* 5

## 2. பழமொழி நானூறு

*இந்நூல் ஒவ்வொரு பழமொழியை ஈற்றிற்கொண்ட நானூறு வெண்பாக்களையுடையது. இதன் ஆசிரியர் முன்றுரையரையனார் என்பவர். இவர் முன்றுறை என்னும் ஊரையாண்ட ஒரு குறுநில மன்னர். இவர் கடைச்சங்க காலத்தவர். இந்நூல் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டிருப்பதால், இதன் பெருமையும் தொன்மையும் நன்கு விளங்கும்.*

உயிர்கள் இனிது வாழ்தற்கு அமைச்சர் காரணம்

*மனத்தினும் வாயினும் மெய்யினும் செய்கை*
*அனைத்தினும் ஆன்றவிந்தா ராகி—நினைத்திருந்*
*தொன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனின்,*
*சென்று படுமாம் உயிர்.* 1

உறவினர் உரைக்கும் உறுதியைக் கேட்டல்

*உளைய உரைத்து விடினும் உறுதி*
*கிளைகள்வாய்க் கேட்பது நன்றே:—விளைவயலுள்*
*பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!*
*தாய்மிதித்த ஆகா முடம்.* 2

கல்லாரிடம் கட்டுரைத்தல் பொல்லாதாம்

*கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்*
*பொல்லாத தில்லை யொருவற்கு;—நல்லாய்!*
*இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை*
*ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.* 3

உறவினர் செய்வதை உற்றார் செய்க

*தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்*
*என்ன படினும் அவர்செய்வ செய்வதே.*
*இன்னொலி வெற்ப! இடரென்னை? துன்னூசி*
*போம்வழி போகு மிழை.* 4

சான்றோர் பொறையின் அளவு

முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ?—இன்னிசை
யாழின்வண் டார்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை இருகால் குலை? 5

## 3. நாலடியார்

நாலடியார் என்னும் நீதிநூல் ஜைன முனிவர் பலரால் செய்யப்பட்டது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நாலடியார், நான்மணிக்கடிகை, இனியது நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாம். நாலடியார், திருக்குறளோடொப்ப எண்ணும் பெருமை வாய்ந்தது. இதை, 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி,' என்பதனால் அறிக. 'நாலடி நானூறு' என்னும் வேறு பெயரும் நாலடியாருக்கு உண்டு. நான்கு அடிகள் உள்ள வெண்பாக்கள் நானூறு உடைமையின் இஃது இப்பெயர் பெற்றது. நாலடியாரில் உள்ள செய்யுட்களை அதிகார அடைவுபட வகுத்தவர் பதுமனார். இவர் இந்நூலுக்குப் பொழிப்புரையும் எழுதியுள்ளார். ஆனால், அஃது இன்னும் அச்சில் வந்திலது.

பேதைமை

ஆகா தெனினும், அகத்துநெய் யுண்டாகின்,
போகா தெறும்பு புறஞ்சுற்றும்:—யாதும்
கொடாஅ ரெனினும், உடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர். 1

யாக்கை நிலையாமை

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை;— 'இன்னினியே
நின்றான், இருந்தான், கிடந்தான்,தன் கேளலறச்
சென்றான்!' எனப்படுத லான். 2

அறிவுடைமை

வேம்பி னிலையுட் கனியினும், வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம் :—ஆங்கே
இனந்தீ தெனினும், இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது. 3

நல்லினம் சேர்தல்

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி,
நெறியல்ல செய்தொழுகி யவ்வும்—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே, வெயில்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு. 4

மானம்

மல்லல்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாம்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்;
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். 5

## 4. சிறு பஞ்சமூலம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது ஒன்று. இதை இயற்றியவர் காரியாசான். இவர் ஜைனர். சிறு மல்லிவேர், பெரு மல்லிவேர், சிறுவழுதுணைவேர், கண்டங்கத்தரிவேர், நெருஞ்சில்வேர் ஆகிய ஐந்து மூலங்களும் எவ்வாறு மக்களின் பிணிகளைத் தீர்க்கின்றனவோ, அவ்வாறே இந்நூலின்கண் உள்ள செய்யுட்களில் காணப்படும் ஐந்தைந்து விஷயங்களும் ஆன்மாவைப் பீடிக்கும் நோயைப் போக்குவதால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது.

பேரின்பம் பயக்கத் தக்கன

நீரறம் நன்று ; நிழல்நன்று ; தன்னில்லுள்
பாரறம் நன்று;பாத்து உண்பானேற்—பேரறம்
நன்று ; தளிசாலை நாட்டற் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன். 1

தேவரால் துதிக்கத் தக்கவன் இன்னவன் என்பது

கழிந்தவை தானிரங்கான், கைவாரா நச்சான்,
இழிந்தவை யின்புறான், இல்லார்—மொழிந்தவை
மென்மொழியால் உண்ணெகிழ்ந்(து) ஈவானேல் விண்ணோரால்
இன்மொழியால் ஏத்தப் படும். 2

இன்னவற்றிற்கு இன்னவை கூற்றமெனல்

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்;நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம்; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம்; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு;
நாவிற்கு நன்றல் வசை. 3

## 5. ஆசாரக் கோவை

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதில் நூறு பாக்கள் உண்டு. அவை மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களைக் கூறுகின்றன. இந்நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் என்பவர். இவரது சமயம் சைவம்; காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பர்.

ஆசார வித்து

நன்றி யறிதல், பொறையுடைமை, இன்சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ(டு)
ஒப்புர வாற்ற அறிதல், அறிவுடைமை,
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

ஒழுக்கம் பிழையாதவர் எய்துபவை

பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு,
நிலக்கிழமை, மீக்கூற்றம், கல்வி,நோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். 2

புகத் தகாவிடங்கள்

சூதர் கழகம், அரவம் அருக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர்: புகுபவேல்
ஏதம் பலவும் தரும். 3

## 6. தினகர வெண்பா

இந்நூல் 133-வெண்பாக்களால் இயன்றது. இதன்கண் திருக்குறளின் ஒவ்வோரதிகாரத்தினின்றும் ஒவ்வொரு குறளை எடுத்துத் தாம் இயற்றிய வெண்பாக்கள் ஒவ்வொன்றின் பின்பாதியாக அமைத்துள்ளார் இந்நூலாசிரியர். இவர்பெயர் நாகராஜன் என்பது. அச்சுதேந்திர மன்னரது மந்திரியாய் இருந்த தினகரன் இந்நூலுக்குப் பாட்டுடைத் தலைவனவன்.

இன்னா செய்யாமை

குற்றமிகச் செய்தாரைக் கொல்லாமற் கொல்லவொரு
சிற்றறிவா ளுண்டே, தினகரா!—உற்றதுகேள் :
இன்னாசெய் தாரை யொறுத்தல், அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 1

புறங்கூறாமை

ஏதிலார் பொல்லாங் கெடுத்துரைப்பார் ; தம்முடைய
தீது குறியார், தினகரா!—யாதும்
பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். 2

பயனில சொல்லாமை

ஓர்ந்துணர்ந்து கொண்டு,பய னுண்டாக வோர்வசனந்
தேர்ந்துசொல்ல வேண்டும், தினகரா!—சோர்ந்த
பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 3

# III. செய்யுட் கதைகள்

## 1. நளவெண்பா

### கலி நீங்கு காண்டம்

நளவெண்பா என்பது, 'நளனது சரித்திரத்தைக் கூறும் வெண்பாக்களினாலாகிய நூல்' எனப் பொருள்படும். நளவெண்பாவை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை மண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரில் வேளாண் மரபிற் பிறந்தவர். இவரது சமயம் வைஷ்ணவம். இவர் பாண்டியன் அவைக்களத்துப் புலவரா யிருந்தார் என்றும், பின்னர்ச் சோழநாட்டுக்குப் பாண்டியனால் அனுப் பப்பட்டாரென்றும், அங்கு ஒட்டக்கூத்தரால் பல இன்னல்களுக்கு ஆளானார் என்றும் கதைகள் கூறும்.

புகழேந்தியார் மள்ளுவநாட்டில் முரணை என்னும் நகரில் ஆட்சி புரிந்துவந்த சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனால் ஆதரிக்கப்பெற்று, நளவெண்பாவைப் பாடி அரங்கேற்றினார். இவர் வெண்பாப் பாடுத லில் வல்லவர் என்பது, 'வெண்பாவிற் புகழேந்தி' என்பதனால் அறியப்படும். இவரது காலம் ஏழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது.

[கானகத்தில் தமயந்தியை விட்டுப் பிரிந்த நளன், கார்க் கோடகனால் கடியுண்டு, உருமாறி, அயோத்தி நாட்டை அடைந் தான்.]

முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னாட் டரசு. 1

'மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்(று)
ஊன்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றோய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமின்,' என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று. 2

[அயோத்தி அரசன் ஏவலின்படி ஏவலாளர்கள் நளனைத் தம் அரசர்முன் அழைத்துச் சென்றனர்.]

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—'ஐயா! நீ
எத்தொழிற்கு மிக்கான்? யாதுன் பெயர்?' என்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு. 3

'அன்ன மிதிப்ப அலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன!
மடைத்தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன்யான்,' என்றான்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. 4

[விதர்ப்ப நாட்டில் இருந்த தமயந்தி, நளனைத் தேடி வரும்படி புரோகிதரை அனுப்ப, அவரும் அயோத்தி நகர் அடைந்தார்.]

மின்னாடு மால்வரையும், வேலையும், வேலைசூழ்
நன்னாடும், கானகமும் நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர். 5

'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தான்?' என்று
சாற்றினான்; அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான், வந்தான் எதிர். 6

'ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்:—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ'. 7

[அவ்வுரை கேட்ட அந்தணன் அவன்தான் நளன் என ஓர்ந்து, தமயந்திபாற் சென்று கூறலுற்றான்:]

'வாக்கினான் மன்னவனை யொப்பான்; மறித்தொருகால்
ஆக்கையே நோக்கி னவனல்லன்;—பூக்கமழும்
கூந்தலாய்! மற்றக் குலப்பாகன்,' என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்ப னெடுத்து. 8

"மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாள்,' என் றந்தண!நீ போயுரைத்தால்,—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன்,' என்றாள் புரிந்து. 9

'எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரம்,'என்(று)
அங்கோர் முரச மறைவித்தான் :—'செங்கோலாய்!
அந்நாளு நாளை யளவு,' என்றான் அந்தணன்போய்த்
தென்னாளுந் தாரானைச் சேர்ந்து. 10

'குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத ஏந்திழையா ளின்று—பறிபீறி
நெல்விற் பருவரா லோடு நெடுநாடா!
சொல்லப் படுமோவிச் சொல்!' 11

'முன்னை வினையான் முடிந்ததோ! மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ!—தன்மர்புக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட(து)
எவ்வாறு கொல்லோ இது!' 12

[தமயந்தியின் சுயம்வரத்திற்குச் செல்ல எண்ணிய இருது பன்னனுக்கு, வாகுகன் (நளன்) தேர்ப்பாகனாய் அமர்ந்து தேரோட்ட இசைந்தான்.]

'ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் ;—மற்றிதற்கே
போந்தேறுக,' என்றுரைத்தான் பொம்மென் றளிமுரல்த்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். 13

'மேலாடை வீழ்ந்த தெடு,'என்றான் ; அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர, வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 14

'இத்தாழ் பணையி லிருந்தான் றிக் காயெண்ணின்,
பத்தா யிரங்கோடி பார்,'என்ன,—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினன் தேவர் சவைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் தான். 15

ஏரடிப்பார் கோலெடுப்ப வின்றேன் றொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனுடன்—'தேரடுத்த
மாத்தொழிலு மித்தொழிலு மாற்றுதியோ?' என்றுரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து. 16

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி. 17

[விதர்ப்ப நாடடைந்ததும் நளன் மடைத்தொழில் புரிய மடைப்பள்ளி புகுந்தான்.]

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்,—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. 18

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்,—யாதும்
நிரப்பாம லெல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. 19

இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த [தொழில்கள்
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான்—'மடைத்-
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வா,'என்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து. 20

'கோதை நெடுவேற் குமரனையும், தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனுடு,' என்றாள்
விளையாடுங் கையாள் மதித்து. 21

மக்களைமுன் காணா, மனநடுங்கா, வெய்துயிரா,
புக்கெடுத்து வீரப் புயத்தணையா,—'மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர்! யார்மக்கள்?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 22

'மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னைதனைக் கான்விட் டவனேக,—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்,' என்றா ரழுது. 23

'உங்க ளரசொருவ னாள,நீ ரோடிப்போந்(து)
இங்க ணுறைத லிழுக்கன்றோ?—செங்கை
வளவரசே!' என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. 24

[மடைப்பள்ளியில் வாகுக (நளன்) னுக்கும் அவனுடைய மைந்தர்களுக்கும் நடந்த உரையாடலைப்பற்றித் தாதியர் சொல்லக்கேட்ட தமயந்தி, மடைத்தொழில் புரிபவன் நளனேயெனத்தேர்ந்து, தன் தந்தையிடம் அச்செய்தியைக் கூறலானாள்:]

'மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து,—மற்று
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான்,' என்றாள் குறித்து. 25

[வீமன் மடைப்பள்ளிக்குத்தானே சென்று உண்மையை நேரிற் கேட்டு அறியலானான்:]

'செவ்வாய் மொழிக்கும், செயலுக்கும், சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுரு!'என்னா—எவ்வாயும்
நோக்கினான்; நோக்கித் தெளிந்தான் றுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து. 26

'பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று,—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் னுரு.' 27

அரவரசன் றன்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்;— ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்குங்
கோத்தாய முன்னிழந்த கோ. 28

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து,—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து. 29

'உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரில்லை
இத்தலத்தின்' என்றிமையோ ரெம்மருங்கும்—கைத்தலத்தின்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 30

# 2. திருவிளையாடற் புராணம்

## இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

*திருவிளையாடற் புராணம், மதுரையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள் புரிந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறுவது. இப்புராணம், மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க்காண்டம் என்னும் மூன்று காண்டங்களையுடையது. இங்குத் தரப்பட்டுள்ள பகுதி, மூன்றுங் காண்டமாகிய திருவாலவாய்க் காண்டத்தில் உள்ளது. திருவிளையாடற்செய்திகளைக் கூறும் வேறு புராணங்களும் தமிழில் உண்டு. அவை திருவாலவாயுடையார் திருவிளையாடல், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் என்பன.*

*திருவிளையாடற் புராணத்திற்கு ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இதன் முதனூல் 'ஹாலாஸ்ய மஹாத்மியம்' என்னும் வடமொழிப் புராணம். பரஞ்சோதி முனிவர் வேளாண் குலத்தினர்; சிவ பக்தி மிக்கவர். பிற்காலச் செய்யுட்களில் இவர் செய்யுட்கள் சிறந்தனவாகக் கொள்ளப்படுகின்றன. இவர் முந்நூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர்.*

அத்தகைய பாண்டியருட் குலேசபாண்
டியனென்னு மரசன் தோள்மேல்
வைத்தவனி தலம்புரப்போன்; இலக்கணமும்
இலக்கியமும் வரம்பு கண்டோன்;
எத்தகைய பெருநூலு மெல்லைகண்டோன்
ஆதலினா லிவனுக் கேற
முத்தமிழோர் பயில்சங்கம் இடங்கொடுத்த(து);
அணையமணி முழவுத் தோளான் 1

கழிந்தபெருங் கேள்வியினன் எனக்கேட்டு,
முழுதுணர்ந்த கபிலன் தன்பால்
பொழிந்தபெருங் காதல்மிகு கேண்மையினன்
இடைக்காட்டுப் புலவன், 'தென்சொல்

மொழிந்தரசன் தனைக்காண்டும்,' எனத்தொடுத்த
பனுவலொடு மூரித் தீந்தேன்
வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத்
துரைப்பனுவல் வாசித் தானால். 2

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்தருந்த வல்லோன், உள்ளத்(து)
அழுக்காற்றால் சிரம்துளக்கான்; அகமகிழ்ச்சி
சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்;
எழுக்காயுந் திணிதோளான் ஒன்றுமுரை
யான் ;வாளா இருந்தான்; ஆய்ந்த
குழுக்காதல் நண்புடையான் தனைமானம்
புறம்தள்ளக் கோயில் புக்கான். 3

சந்நிதியில் வீழ்ந்தெழுந்து, 'தமிழறியும்
பெருமானே! தன்னைச் சார்ந்தோர்
நன்னிதியே! திருவால வாயுடைய
நாயகனே! நகுதார் வேம்பன்
பொன்னிதிபோல் அளவிறந்த கல்வியுமிக்(கு)
உளனென்று புகலக் கேட்டுச்
சொன்னிறையும் கவிதொடுத்தேன்; அவமதித்தான்—
சிறிதுமுடி துளக்கா னாகி. 4

'என்னைஇகழ்ந் தனனோ? சொல் வடிவாய்நின்
இடம்பிரியா இமயப் பாவை
தன்னையும், சொற் பொருளாய உன்னையுமே
இகழ்ந்தனன்; என் றனக்கியாது,' என்னா
முன்னைமொழிந்(து) இடைக்காடன் தணியாத
முனிவீர்ப்ப முந்திச் சென்றான்.
அன்னவுரை திருச்செவியின் ஊறுபா(டு)
எனவுறைப்ப அருளின் மூர்த்தி 5

போனஇடைக் காடனுக்கும், கபிலனுக்கும்
அகத்துவகை பொலியும் ஆற்றால்,
ஞானமய மாகியதன் இலிங்கஉரு
மறைத்துமையாள் நங்கை யோடும்,
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன்
கோயிலினேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்(டு)
அங்கண்இனி தமர்ந்தான் மன்னோ. 6

சங்கவான் தமிழ்த்தெய்வப் புலவோரும்
உடனெழுந்து, சயில வேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோய்அங்
கிருந்தார்.அவ் வழிநாள் வைகல்
தங்குல்வாய் புலர்வரும் வைகறையில்
பள்ளிஉணர் காலத் தெய்தி
அங்கணா யகனடியார் சேவிப்பார்,
இலிங்கவுரு அங்குக் காணார். 7

'என்ன அதி சயமோஈ(து!) என்றயிர்த்தார்;
இரங்கினார்; 'இதனை ஓடி
மன்னவனுக் கறிவிப்பான் வேண்டும்,'எனப்
புறப்பட்டு வருவார்; ஆவி
அன்னவரைப் பிரிந்துறையும் அணங்கனையார்
எனவுமலர் அணங்கு நீத்த
பொன்னவிர்தா மரைஎனவும் புலம்படைந்து
பொலிவழிந்த புரமும் கண்டார். 8

அரசனிடைப் புகுந்துள்ளம் நடுநடுங்கி,
நாவுணங்கி, 'அரசே! யாமொன்(று)
உரைசெயஅஞ் சுதும்:உங்கள் நாயகனைத்
திருப்பள்ளி உணர்ச்சி நோக்கி
மறைமலர்ச்சே வடிபணியப் புகுந்தனமின்(று);
ஆங்கவன்தன் வடிவம் காணோம்;
புரமுநனி புலம்படைந்த(து),' என்றழல்வேல்
எனச்செவியில் புகுத்த லோடும், 9

வழுதிஅரி யணையிலிருந்(து) அடியிறவீழ்
பழுமரம்போல் மண்மேல் யாக்கை
பழுதுறவீழ்ந், துயிர்ஒடுங்க அறிவொடுங்கி,
மட்பாவை படிந்தாங்(கு) ஒல்லைப்
பொழுதுகிடந் தறிவுசிறி தியங்கஎழுந்(து),
அஞ்சலிக்கைப் போது கூப்பி,
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்(து), ‘அடியேன்
என்பிழைத்தேன் ? அண்ணல் ! அண்ணல் !’ 10

[என்று மனம் தளரும்போது]

சிலர்வந்து, ‘ மன்னா!ஓர் அதிசயங்கண்
டனம் வையைத் தென்சா ராக ;
அலர்வந்தோன் படைத்தநாள் முதலொருகா
லமுங்கண்ட தன்று ; கேள்வித்
தலைவந்த புலவரொடும் ஆலவாய்
உடையபிரான் தானே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண்(டு)
உறைகின்றான் மாதோ,’ என்றார். 11

அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்தீர்ப்ப
எழுந்தரசன் அச்சத்(து) ஆழ்ந்து,
தெவ்வர்முடித் தொகையிடறும் கழற்காலால்
நடந்தேகிச் செழுநீர் வையை
கௌவைநெடுந் திரைக்கரத்தால் கடிமலர்தூஉய்ப்
பணியத்தென் கரைமேல் வந்து
மௌவல்இள முகைமூரல் மாதினொடும்
இருக்கின்ற மணியைக் கண்டான். 12

படர்ந்துபணிந்(து) அன்புகுக்கும் கண்ணீர்சோர்ந்(து)
ஆனந்தப் பௌவத் தாழ்ந்து,
கிடந்தெழுந்து, நாக்குழறித் தடுமாறி,
நின்றிதனைக் கிளக்கும்: ‘ வேதம்
தொடர்ந்தறியா அடிசிவப்ப நகர்புலம்ப
உலகீன்ற தோகை யோடிங்(கு)
அடைந்தருளும் காரணமென் ? அடியேனாற்
பிழைஉளதோ ? ஐயா ! ஐயா ! 13

'அல்லதைஎன் தமரால்,என் பகைஞரால்,
கள்வரால், அரிய கானத்
தெல்லைவிலங் காதிகளால் இடையூறின்
தமிழ்நாட்டி லெய்திற் றாலோ?
தொல்லைமறை யவரொழுக்கம் குன்றினரோ?
தவ்ந்தருமம் சுருங்கிற் றாலோ?
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ?
யானறியேன் எந்தாய்! எந்தாய்! 14

'கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே
போற்றி!பெருங் கருணை போற்றி!
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே
போற்றி!அருள் விகிர்தா போற்றி!
புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன்
தேறாத புனிதா போற்றி!
வள்ளேறு சிறுகுழவி மதிநுதல்அங்
கயற்கண்ணி மணாள போற்றி! 15

'பாதமலர் இணைபோற்றி! பன்னிரண்டு
கையானைப் பயந்தாய் போற்றி!
வேதமுடி கடந்தபர ஞானத்தில்
ஆனந்த விளைவே போற்றி!
போதவடி வாய்நால்வர்க் கசைவிறந்து
நிறைந்தபரம் பொருளே போற்றி!
மாதவள நீறணிந்த மன்னா!அங்
கயற்கண்ணி மணாள போற்றி!' 16

தென்னவன் இன்ன வண்ணம்
ஏத்தினான்: செம்பொற் கூடல்
மன்னவன் கேட்டா காய
வாணியால், 'வையை நாட!
உன்னது சோத்தம் நாம்கேட்(டு)
உவந்தனம்; இனிய தாயிற்(று);
இன்னமொன் றுளது கேட்டி"
என்றன னருளிச் செய்வான்: 17

'ஓங்குதண் பணைசூழ் நீப
வனத்தைநீத் தொருபோ தேனும்
நீங்குவ மல்லேம் கண்டாய்;
ஆயினும், நீயும் வேறு
தீங்குளை அல்லை; காடன்
செய்யுளை இகழ்த லாலே
ஆங்கவ னிடத்தியாம் வைத்த
அருளினால் வந்தோம்,' என்று, 18

பெண்ணினைப் பாகம் கொண்ட
பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம்
மீனவன் கேட்டு, 'வானோர்
புண்ணிய! சிறியோர் குற்றம்
பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்(கு)' என்று
ஏத்தினன்; இறைஞ்சி னனே. 19

அடிபணிந் தேத்தி னனை
அருள்சுரந் தசையும் மின்னுக்
கொடிஅணி மனையிற் போக்கி,
கோமள வல்லி யோடும்
உடனுறை புலவ ரோடும்
ஒல்லைதன் கோயில் புக்கான்
வடதிரு ஆல வாயில்
வந்துவீற் றிருந்த வள்ளல். 20

மின்மதிச் சடையி னன்பின்
நடந்துபோய் விடைகொண் டேகும்
மன்னவன் தன்னைப் பாடி
வந்தவன் தன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர்
தம்மொடும் கொடுபோய், என்றும்
பொன்மகள் காணி கொண்ட
புரிசைசூழ் கோயில் புக்கான். 21

விதிமுறை கதலி பூகம்
கவரிவால் விதானம் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பம்
கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொன்
சேக்கைமேல் கற்றோர் சூழ,
மதிபுனை காடன் தன்னை
மங்கல அணிசெய் தேற்றி, 22

சிங்கமான் சுமந்த பொன்னம்
சேக்கைமே லிருந்து, வெள்ளைக்
கொங்கவிழ் தாமம் தூசு
குளிர்மணி ஆரம் தாங்கி,
மங்கல முழவம் ஆரப்ப,
மறையவர் ஆக்கம் கூற,
நங்கயர் பல்லாண் டேத்த,
நன்மொழிப் பனுவல் கேட்டு, 23

'புண்ணியப் புலவீர்! யானிப்
போழ்திடைக் காட னார்க்குப்
பண்ணிய குற்ற மெல்லாம்
பொறுக்க,'எனப் பரவித் தாழ்ந்தான்.
நுண்ணிய கேள்வி யோரும்,
'மன்ன! நீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள்
கோபத்தீத் தணிந்தது,' என்று, 24

'இன்னமும் ஆலவாய் எம்
இறையவன் கருணை நோக்கால்
பன்னரும் புகழ்மை குன்றாப்
பாக்கியம் உனக்குண் டாக!'
என்ன நல் ஆக்கம் கூறி
ஏகினா ராக, அந்தத்
தென்னவன் குலேசன் செய்த
தவமுருத் திரிந்தா லென்ன 25

[அரி மருத்தனன் என்னும் பாண்டியன் தோன்றினன்.]

# 3. செவ்வந்திப் புராணம்

## தாயான சருக்கம்

செவ்வந்திப்புராணம் என்பது திரிசிராப்பள்ளியில் திருக்கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தாயுமானவர் என்னும் திருநாமமுடைய செவ்வந்தீஸ்வரரின் பெருமைகளைக் கூறும் நூலாகும். இதை இயற்றியவர் சைவ எல்லப்ப நாவலர் என்பவர். இவர் சோழவள நாட்டிலுள்ள திருவெண்காட்டில் கார் காத்த வேளாளர் குலத்திலே பிறந்தவர். இவர் தருமபுர ஆதீனத்தில் தமிழ் இலக்கண இலக்கிய சைவ சித்தாந்த நூல்களை முறையே பயின்று, பெரும்புலவராய் விளங்கினார். திவ்யகவி சைவ எல்லப்ப நாவலர் என்னும் பட்டப் பெயர் அவ்வாதீனத்துப் பண்டார சந்நிதியால் இவர்க்கு அளிக்கப்பெற்றது. இவர் அருணாசலப் புராணம், திருவாரூர்க்கோவை, திருவருணையந்தாதி, திருவருணைக் கலம்பகம் முதலிய வேறு பல நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது பாடல்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் மலிந்தவை. இவர், பதினேழாம் நூற்றாண்டில் இருந்தவர் என்று சிலரும், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்று சிலரும் கூறுவர்.

ஏட விழ்ந்ததார்ப் பேதையர் மணல்களில் இழைத்த
வீட ழிந்திடப் பொருந்திரை நிரைகளை வெகுண்டு,
கூடி நின்றுநின் றரியநித் திலமணி கொண்டு
நாடி வேலையைத் தூர்த்திடும் செழும்புகார் நகரம். 1

சிவன ருள்பெறும் இயற்பகை நாயனார் சிறப்பால்
அவத ரித்ததும், அன்றியே பிள்ளைவந் தருளத்
தவமி ழைத்தமா நகர்மூன் றூங்குடித் தலைவர்
நவநி திக்கெலாம் பிறப்பிடம் செழும்புகார் நகரம். 2

அத்திரு நகரில் வாழும்
அரதன குத்தன் என்னும்
பித்திகை அலங்கல் மார்பன்
பெருங்குடி வணிகன் என்பான்

தத்தையே யனைய தேவி
தன்னுடன் செருக்கு நாளில்
புத்திர செல்வம் வேண்டிப்
புரிந்தனன் இறைவர் பூசை 3

[முன்னைய நல்வினை இன்மையால் ஆண்மகப்பேறு கிட்டாமல், இப் பிறவியில் புரிந்த இறைவர் பூசையின் பயனாய் ஒரு பெண் மகப்பேறு உண்டாயிற்று. அப் பெண் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து மணப்பருவம் எய்தினள்.]

அத்தனும் மகட்குத் தன்பேர்
அளித்தனன்; அதன்பின் னாகச்
சித்திர மயிலன் னாளைத்
திரிசிரா மலையில் வாழும்
மெய்த்தன குத்தன் என்னும்
பெருங்குடி வணிகன் வேட்டான்
மத்தகக் களிற்றோன் மானை
அளகையான் வரைந்த தென்ன. 4

[திருமணத்தின்பின் மாமனார் இல்லத்திற் சில நாட்கள் தங்கி இருந்த தனகுத்தன் தன்னுடைய ஊருக்குப் போக விழைந்து அதைத்தன் மாமனாருக்கு அறிவித்தான்.]

மணிமுத லியபல அளித்து மாதுலன்
இணைமலர்க் கரமெடுத்(து) ‘ஏகுக’ என்றனன்!
துணைவிதன் வருத்தமும் துயரும் மாற்றியே
வணிகனும் திரிசிரா மலையில் எய்தினான். 5

எய்தியங் கிருவரும் இயைந்து நல்லறம்
செய்தனர்; இளங்கொடி திரிசி ராமலை
மெய்யரை அன்பினால் வெள்ளி நாடொறும்
கைதொழப் புகுந்தனள் கணவன் ஏவலால். 6

இருவரும் இப்படி இயங்கும் நாளிலே
அரதன பாலனும் இறுதி யாயினன்;
உருகிய கிளைஞரிங் கோலை ஏவினர்;
மருகனும் மங்கையும் கண்டு மாழ்கினர். 7

தீயுறும் மயிலெனத் திரியும்; திண்கணை
பாயிளம் பிணையெனப் பதைக்கும்; பைந்தொடித்
தாயரை நினைந்திடும்; தனித்தி யோவெனும்
ஆயிரம் தாரையா யழுது விம்முமே. 8

[இவ்வாறு வருந்திய மனைவியைக் கணவன் இனிய சொற்களால் தேற்ற, அவளும் துயரம் நீங்கினள்.]

சீரிய விரதமும், விருந்தும், செய்கையும்,
ஊரியல் ஆண்மையும் ஒழுகு நாளிலே,
வாரயில் கவுத்துவ மணியை நேரெனக்
காரிகை வயிற்றிளங் கருப்பம் உற்றதே. 9

அன்னையும் மகள்செயல் அறிய வேண்டுமென்(று)
உன்னினள்; அப்பொழு துவரிநீ ரயில்
மின்னுயிர் பெருமுகில் தாரை வீழ்த்தன:
பொன்னியும் இருகரை புரண்டு வந்ததே. 10

ஆறது தடையினல் அன்னை ஏகுதல்
மாறினள்; அரதன வதிய றிந்திலள்;
பேறொடு பிறந்தகம் பெரிதுஞ் செய்திடக்
கூறரும் பொருளெலாம் கொண்டு செல்லுமே. 11

'பூளையின் சுமையெனக் குழல்பொ லிந்திடப்
பாளையங் குழலிதழ்ப் பவளச் சேடியர்
தோளையும் மணந்துவெண் துகிலை மேற்கொடு
நாளைவந் திடுமல தின்று நண்ணுமே. 12

'எதிர்நடந் தன்னையை இறுகப் புல்லுவோம்;
கதிநடந் திளைத்தசெங் கமலம் பற்றுவோம்;
மதிமுக வெயர்வெலாம் மாற்று வோம்,' என
அதிசய உணர்வினல் அனைத்தும் எண்ணினள். 13

மின்திகழ் மருங்குலாள் நினையும் வேளையில்,
தென்திசை விளங்கிய தேவர் நாயகன்,
குன்றெனும் நெடுஞ்சிலை கொண்ட நாயகன்,
மன்றலங் கருங்குழல் மடந்தை நாயகன், 14

முடித்த வெண்பிறை நிகரென வளர்ந்திடு முதுகில்
அடுத்த வெண்ணிலா வளர்ந்தபோல் நரைக்குழ லசையத்
திடத்தி னாலருள் நடத்துவோ மெனஒரு செங்கோல்
பிடித்த வாறென வேணுதண் டங்கையில் பிறங்க, 15

ஏட விழ்ந்தபூங் குழலிதன் விரதம்நன் றெனக்கொண்
டாடு மாறெனத் திருமுக மண்டலம் அசையச்
சூடு கங்கையின் திவலைபோல் நுதல்வெயர் துளிக்க,
நீடு கொன்றைபோல் ஒருப்பணி களத்திடை நிகழ, 16

நின்று நின்றுசென் றிளைப்புற, நெடிதுமூச் செறிய,
ஒன்று செங்கையிற் கழையின்மேல் உடலெலாம் ஒடுக்கிக்
கன்று மானையும் மழுவையும் விடையையும் கரந்து,
மன்றில் ஆடலும் ஒழிந்தவள் அன்னைபோல் வந்தான். 17

தூர வந்திடும் அவளைஈன் றவளெனத் துணிந்தாள்;
சேர வந்திடும் பொழுதினில் எழுந்தெதிர் சென்று,
பார வந்தனை புரிந்திரு பதங்களில் பணிந்தாள்;
ஆர வந்திரு கரங்களால் தழுவினள் அன்னை. 18

மோந்து கொண்டனள் உச்சியை; மோந்தனள் முகத்தை;
காந்த ளுந்தொழுங் கரங்களை அழுத்தினள் கண்ணில்;
பாய்ந்த கண்ணினீர் புலர்ந்திட அருள்மொழி பகர்ந்து,
சாய்ந்த கொம்புநேர் மகளுடன் இருந்தனள் தவிசில். 19

மற்றை நாளிலே உதரம்நொந் தழுங்கின மகளைப்
பெற்ற தாயெடுத் தணைத்து,மேல் தயிலமும் பெய்து,
முற்றும் அன்பினால் மருத்துவத் தொழில்எலாம் முடித்தாள்;
குற்றம் ஒன்றிலா மடந்தையும் பயந்தனள் குழவி. 20

குழவி ஈன்றவட் கருமருந் தெண்ணெயும் கொடுத்தே
எழுதி னத்தள(வு) இழைத்திடும் செயல்எலாம் இயற்றி,
அழகு தொட்டிலுள் துயிற்றி,அங் கொருமதி அளவாய்
மழக ளிற்றினை முருகவேள் எனும்படி வளர்த்தாள். 21

சிதலை, சிற்றெறும் பிளஞ்சினை, சிலையினுள் தேரை,
பதக மானிடர், இமையவர், இந்திரன், பதுமன்
முதலி னோர்தமை வளர்த்தருள் இறையெதிர் முகமாய்
மதலை யொன்றினை வளர்த்தது புதுமையோ மறையீர்! 22

மையு லாம்மழைக் கருமுகில் படத்தினை மாற்றித்
துய்ய வெண்முகில் படமெனும் விதானம்வான் துலக்கிற்(று);
ஐய நுண்ணிடை அரதன வதியையங் கறியப்
பைய வந்தனள் அவளைமெய் யாகமுன் பயந்தாள். 23

முன்னர் வந்திருந் தருளிய தாயெதிர் முகமாய்ப்
பின்னர் வந்ததாய் இருந்தனள்; அதிசயம் பிறந்த(து);
'அன்னை யாவள்!' என் றரதன வதிமருண் டடைந்தாள்;
மின்னை நேரென விசும்பிலே மறைந்தனன் விமலன். 24

அந்த ரத்திலோர் இருபது விற்கிடை அளவில்
மந்த ரப்பெருஞ் சிகரிமேல் வருமணி மலைபோல்
சுந்த ரத்தொளிர் விடையின்மேல் தோன்றினன் தோன்றல்;
இந்தி ரப்பெய ருடையவன் முதலினோ ரிறைஞ்ச, 25

வேத வேள்விஅந் தணர்கள்,பா சுபதர்,மா விரதர்,
ஆதி சைவர்கள் ஆதியா ஆலயம் அமைப்போர்,
காதல் ஐந்தெழுத் துரைப்பவர் அனைவரும் காணப்
பூத நாயகன் உடன்திருக் கோயிலுள் புகுந்தான். 26

நாயி னும்கடை யானவ ராயினும் நயந்தால்,
சேயி னும்பரி வாகவந் தருள்செயும் சிவனை
ஆயி ரம்பெய ருடையஅண் ணலையுல கனைத்தும்,
தாயி னல்லவன் நல்லவன்,' என்றனன் தழைக்க. 27

---

# 4. தேம்பாவணி

## மகவருள் படலம்

தேம்பாவணி என்னும் நூல் வீரமாமுனிவரால் இயற்றப் பெற்றது. இவருடைய வாழ்க்கைக் குறிப்பை 6-ஆம் பக்கம் காண்க.

*[இயேசு நாதரைக் கருவில் தாங்கிய மரியம்மையாரும், சூசையாரும் 'சீசர் அகஸ்டஸ்' ஆணைப்படி பெயரும் வரியும் கொடுக்கப் 'பெத்லேம்' நகரம் செல்கின்றனர்.]*

மண்சிறையை ஒழித்தவர்தம் வருத்தங் காண வழிமுடுகித்
தண்சிறைசெய் கடல்மூழ்கிப் பருதி யங்கள் தாழ்ந்தொளிப்ப,
ஒண்சிறைமொய் அளிகளழ, முளரி தன்தா துடன்றடைப்பக்
கண்சிறைசெய் கங்குலுற நகரிற் சென்றார் கருணைவலார். 1

சாதியினல் நிகர்க்கரிய மலர்மென் றாளின் தகுதிநலாள்
வீதியினல் எய்தியநோய் ஆற்ற வெஃகி, வெயில்மிடைந்த
ஓதியினை லுளத்துயர்ந்தோன் ஒதுங்குந் தன்மைத் துறையுளருள்
சோதியினை ல்விர்முகத்தி லுறவோர் கேட்டுத் துருவினனல். 2

நஞ்செஞ்சாக் காஞ்சிரங்காய் அழகென் றெண்ணி நச்சுவர்போல்
விஞ்செஞ்சா வினைபயக்கும் பொருளே வெஃகி, விழிகடந்த
மஞ்செஞ்சா அருட்செல்வம் எண்ண மூடர் வறியரென,
நெஞ்செஞ்சாத் திருவோரை எவரோ என்ற நீக்கினரால். 3

பொன்னன்ன பொலிந்தநகர் புடைகள் தோறும் புகுந்தின்னர்
மின்னன்ன விரைந்திரிய, உருமென் றன்னர் இடைந்துடற்றப்,
பின்னன்ன முகிலுறைபெய் யன்ன சூசை பெரிதழுது
முன்னன்ன நகருதவி உணர்ந்த பாலால் முழுதுளைந்தான். 4

'நான்செய்த குறைதானே! நகரே செய்த நவைதானே!
தான்செய்த விதிதானே! தரணி காக்கத் தற்பரனீங்(கு)
ஊன்செய்த உடலொடெழ இடமொன் றில்லை உலகில்,' எனத்
தேன்செய்த பூவுயர்த்தோன் அரற்றி விம்மித் திரிவானும். 5

'நிலத்தியல்பால் துளிநன்னீர் திரிந்த தோற்றம் நிகரெனச்,சேர்
குலத்தியல்பால்கிழமைநிலை திரிகுமென்றார் ; குறைகிளரென்
கிலத்தியல்பால் கிளைத்தன் இக் கேத மெல்லாம் கிடைத்துளைய,
நலத்தியல்பால் தகைநல்லாய்! வருந்தி என்னால் நகவானாய்.' 6

'உடைநகர்கண் வாழரசன் வறுமை நாடி உதிப்பச்சீர்
மிடைநகர்கண் பதியல்ல தென்றே வின்னார் விலகிளமக்(கு)
இடைநகர்கண் இடமின்றி இரிந்த தன்மை; இமிழிலினிப்
புடைநகர்கண் கண்டமுழை புணரப் போகிற் புரி(வு),'என்றான். 7

இத்தலை இவளும்நன் றென்று பேரொலி
மொய்த்தலை பெருங்கடல் நிகர்மூற் றார்கடந்(து),
அத்தலை யிருமையோர் அமரர் செய்யொளி
மைத்தலை நடுநிசி மயங்கப் போயினார். 8

கலங்கெழுந் திரைஎறி கடலெ னாநகர்
புலங்கெழு மிடைமனுப் புழுங்க லாமையும்
விலங்கெழு மிடமெனா வெறுத்த வம்முழை
நலங்கெழு மிறையவன் பிறப்ப நாடினான். 9

தணிவருஞ் சினத்தொடு தகைத்த கற்றினார்
அணிவரும் குணத்திலீங் கமல னாடிய
பணிவரும் இடிநலம் பயக்கின் றாரெனத்
துணிவரு மன்பெழுந்(து) ஆசி சொற்றினார். 10

எஃகெனப் பாய்ந்துள மிரிந்த வான்றுயர்
அஃகெனக் கண்படற் கமைதி,' என்றனள் ;
வெஃகெனத் துணைவியே விலகித் தானுநல்
இஃதெனத் தனித்திறை இறைஞ்சி நின்றனன். 11

உலக மூன்றினும் உவமை நீக்கிய
இலயை மூன்றினும் இழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் சிறப்ப ஈன்றனள். 12

# IV. சங்கச் செய்யுட்கள்

நமது தமிழகத்தில் பண்டைக்காலத்தில் தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தன என்று கூறப்படுகிறது. அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர் ஆகிய மூவரும் முறையே அவற்றின் தலைவர்களாய் இருந்து தமிழை வளர்த்தனர் என்றும், முதற்சங்க காலத்திலும் இடைச்சங்க காலத்திலும் எழுந்த தமிழ் நூல்கள் அழிந்துபட்டன என்றும், கடைச்சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் மட்டுமே இப்போது நமக்குக் கிடைத்துள்ளன என்றும் அறிகிறோம். கடைச்சங்கம் இருந்த காலம் கி. பி 2-ஆம் நூற்றாண்டு என்பது ஆராய்ச்சியாளரின் துணிபு. இச்சங்க காலத்தில் இருந்த புலவர்களாலும், அவர்கட்கு முன்னர் இருந்த புலவர்களாலும் அவ்வப்போது அகம், புறம் என்னும் பொருள்பற்றிப் பாடப்பெற்ற பாட்டுக்கள் பொருள், பாட்டு, அளவு என்பனபற்றிப் பல நூல்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. இவை எட்டுத் தொகை எனப்படும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத் தொகை நூல்களாம். இவையன்றி வேறு பல நூல்களும் உள. அவை பத்துப்பாட்டும், பதினேண் கீழ்க் கணக்குமாம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேற்கணக்கு நூல்கள் எனப்படும்.

கீழே தரப்பட்டுள்ள செய்யுட்கள் புறநானூற்றினின்றும் எடுக் கப்பட்டவை. புறம், புறப்பாட்டு என்பன புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்கள். புறநானூற்றுச் செய்யுட்களைப் பாடிய புலவர் அனைவரும் ஒரு காலத்தவரல்லர்; ஒரு நாட்டினரல்லர்; ஒரு குலத் தினரல்லர்; ஒரு மதத்தினரல்லர். அவருள் அந்தணர், அரசர், வேளாளர், வணிகர் முதலியோர் பலர்; பெண்பாலார் சிலர். புற நானூற்றுச் செய்யுட்களால் கடைச்சங்க காலத்தில் நமது நாட்டிற் காணப்பட்ட நாகரிகத்தை நன்கு அறியக்கூடும். புறப்பொருள் பற்றிய நானூறு செய்யுட்களைக்கொண்ட இந்நூல் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. புறப்பொருள் என்பது, அறத்தையும் பொருளையும் குறிக்கும்.

[நெடுமோன் அஞ்சியை ஔவையார் பாடியது]

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ!
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்!

அச்சொடு தாக்கிய பாருற்(று) இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொலிய
வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ !
எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும !
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே! 1

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே ;
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
'துய்ப்பேம்,' எனினே தப்புந பலவே. நக்கீரர் 2

[பெருஞ்சித்திரனார் வெளிமானுக்குச் சொல்லியது]

இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண்இனி; இரவலர்க்(கு)
ஈவோர் உண்மையும் காண்இனி; நின்ஊர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்;
கடுமான் தோன்றல்! செல்வல் யானே. 3

மீனுண் கொக்கின் தூவி யன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களி(று)எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே! கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே. 4

பூங்கணுத்திரையார்

# V. வருணனைப் பகுதி

## 1. நாடு

### பாண்டி நாடு

கீழ் வரும் செய்யுள் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப் பெற்றது. சிவப்பிரகாச சுவாமிகள் தொண்டைமண்டலத்தில் காஞ்சீ புரத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தார். இவர்தம் தந்தையார் குமார சுவாமி தேசிகர். சிவப்பிரகாசருக்கு வேலைய சுவாமி, கருணைப் பிரகாசர் என்னும் தம்பியரும், ஞானம்பிகை என்னும் தங்கையும் இருந்தனர். சோண சைல மாலை, திருவெங்கைக் கோவை, நால்வர் நான்மணிமாலை முதலிய பல அரிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். சீகாளத்திப் புராணத்தின் ஒரு பகுதியும் இவரால் செய்யப்பட்டது. இவர் சதுரகராதியின் ஆசிரியரான வீரமாமுனிவரின் காலத்தவர் என்பர்.

அமுதுறழ் தமிழ்,ஒண் முத்தம்,
    ஐயசந் தனம்,மெல் வாசம்
கமழ்குளிர் தென்ற லென்று
    கரையரும் பொருள்ப டாமல்,
இமிழ்கடல் வரைப்பெ லாந்தோன்(று)
    எண்பொருள் படுநா டெள்ளித்
தமிழ்முதல் பிறக்கு நாடாய்த்
    தயங்குமால் பாண்டி நாடு. 1

## 2. நகர்

### புகார் நகர்

கீழ்வரும் செய்யுள் சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பெற்றது. அருண்மொழித்தேவர் என்பது இவர்தம் இயற்பெயர். இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள குன்றத்தூரில், வேளாளர் குலத்தில், சேக்கிழார் குடியில் தோன்றினர். அநபாய சோழனுக்கு அமைச்சராயிருந்தார். இவரது சமயம் சைவம். பெரியபுராணம் என்னும் நூல் இவரால்

இயற்றப்பெற்றது. இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கூறுவர்.

சென்னி வெண்குடை நீடந பாயன்
திருக் குலம்புகழ் பெருக்கிய சிறப்பின்,
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர இயல்பினில் அளித்துப்
பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெரு தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம். 2

## 3. மலை

### குற்றால மலை

கீழ் வரும் செய்யுளை இயற்றியவர் திரிகூடராசப்பக் *கவிராயர் என்பவர். இவர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள மேலகரம் என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். திருக்குற்றாலத் தல புராணம், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருக்குற்றால யமகவந்தாதி, திருக்குற்றாலக் கோவை முதலிய பதினான்கு நூல்கள் இவர் இயற்றியவை. இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்று இருபது ஆண்டுகளுக்கு முன்னதென்பர்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்;
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்;
தேனருவி திரையெழும்பி வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே! 3

## 4. நதி

### கோதாவரி

*கீழ் வரும் செய்யுட்கள் கம்ப நாடரால் இயற்றப்பெற்றவை. கம்பர் சோழ நாட்டில் உள்ள திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் தோன்றியவர். இவர்தம் தந்தையார் ஆதித்தர் என்பவர். இவரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் ஆவர். இவரது சமயம் வைணவம். இராமாயணம், ஏரெழுபது, சடகோபரந்தாதி முதலியன இவர் இயற்றிய நூல்கள். இவரது காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. கி. பி. 9-ஆம் நூற்றாண்டென்பாரும் உளர்.*

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து, தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த **கோதா வரி**யினை வீரர் கண்டார். 4

## 5. சூரியோதயம்

மீனுடை எயிற்றுக் கங்குற் கனகனை வெகுண்டு வெய்ய
கானுடைக் கதிர்க ளென்னும் ஆயிரங் கரங்க ளோச்சித்
தானுடை உதய மென்னும் தமனியத் தறியி னின்று
மானுட மடங்க லென்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன். 5

## 6. சந்திரோதயம்

*கீழ் வரும் செய்யுளை இயற்றியவர் வில்லிபுத்தூராழ்வார். இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் பிறந்தவர்; ஆட்கொண்டான் என்ற கொங்கர்குலத் தலைவனால் ஆதரிக்கப்பட்டவர். இவர் மகா பாரதத்தைத் தமிழில் இயற்றியவர்; சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்.*

கானெலா மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயக்குந் தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற,
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா! 6

---

# VI. பல்வகைப் பிரபந்தங்கள்

## 1. பிள்ளைத் தமிழ்

பிள்ளைத் தமிழ் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது ஆண் பால் பிள்ளைத் தமிழ், பெண் பால் பிள்ளைத் தமிழ் என இரு வகைத்து. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்கள் ஆண் பால் பிள்ளைத் தமிழிலும், இவற்றுள் இறுதி மூன்றை நீக்கி அவற்றிற்குப் பதிலாக நீராடல், அம்மானை, ஊசல் என்னும் மூன்றையும் சேர்த்துப் பெண் பால் பிள்ளைத் தமிழிலும் கூறப்படும். கடவுளையேனும் பெரியோரையேனும் குழந்தையாகப் பாவித்து மேற்சொன்ன பருவங்கள் அமையப்பாடுவதே பிள்ளைத் தமிழ் எனப் படும்.

### (1) ஆண் பாற் பிள்ளைத் தமிழ்

கீழ் வரும் செய்யுள் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில் உள்ளது. இதை இயற்றியவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர். இவர் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள பொன் விளைந்த களத்தூருக் கருகில் இருக்கும் பூதூர் என்னும் சிற்றூரிற் பிறந்தார். இவர்தம் தந்தையார் வடுகநாத முதலியார் என்பவர். வீரராகவ முதலியார் பிறவிக் குருடர். இவர் ஆரூர் உலா, சேயூர்க் கலம்பகம், திருக்கழுக் குன்றப் புராணம், சந்திரவாணன் கோவை முதலிய வேறு பல நூல்களும் இயற்றியுள்ளார். இவரது சமயம் சைவம். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

முத்தப்பருவம்

மருவாய் வனசத் திறையவனைச்
சிறையுட் பிணித்த பருவத்தே,
மகரக் கடலே மூடுத்தபெரும்
புவனக் குருவாய் வருவார்க்கும்
குருவா யம்பொற் செவிதாழ்த்துக்
குடிலை உரைக்கும் படியுரைத்த
கொற்றங் கேட்டெம் பெருமாட்டி
நித்தங் களிக்குங் குலவிளக்கே!

அருவாய் மதனைப் பொருவார்க்கும்
அறியாப் பொருளை அறிவித்த
அமிர்தப் பவளம் இதுவோவென்(று)
அருகே தனது முகம்நீட்டித்
திருவாய் முத்தந் தருவாட்குத்
திருவாய் முத்தந் தருவாயே!
செய்கைக் கரசே! மயிற்கரசே!
திருவாய் முத்தந் தருவாயே!! 1

## (2) பெண்பாற் பிள்ளைத் தமிழ்

கீழ்வரும் செய்யுள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில் உள்ளது. இந்நூலை இயற்றியவர் சிவஞான முனிவர் ஆவர். இவரது பிறப்பிடம் பாண்டி நாட்டில் உள்ள விக்கிரம சிங்கபுரம்; தந்தையார் ஆனந்தக் கூத்தர்; தாயார் மயிலம்மையார்; சிவஞான முனிவர் வேளாளர் குலத்தவர்; சைவ சமயத்தவர்; இளமையிலேயே துறவு பூண்டவர், அகிலாண்டேச்வரி பதிகம், சோமேசர் முதுமொழி வெண்பா, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் இறுதி.

வாரானைப் பருவம்

அயில்கண் டனைஅஞ் சலித்தேத்தும்
அன்னை வருக! பெருங்கருணை
ஆழி வருக! தீவினையேம்
ஆவித் துணையே வருக! விடந்
துயில்கண் டனைஅம் பலத்தாட்டுஞ்
சுடர்பொற் கொடியே வருக! இளஞ்
சுகமே வருக! நறுங்குதலை
தோற்றுங் கிளவி யெனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும்
பசுங்கோ கிலமே வருக! என்றும்
பருகத் தெவிட்டாச் சுவைஅமுதப்
பாவாய் வருக! பசுந்தோகை
மயில்கண் டனைய இளஞ்சாயல்
மாதே வருக! வருகவே!!
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக! வருகவே!! 1

# 2. பரணி

## காளிக்குக் கூளி கூறியது

பரணியாவது, தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. இது போர்முகத்து ஆயிரம் யானைநிரையைக் கொன்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு, கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, பாலை நிலம், காளி கோயில், பேய்களோடு காளியும் காளியோடு பேய்களும் சொல்லல் முதலிய உறுப்புக்களை அமைத்துத் தலைவனுடைய பல வகைச் சிறப்புக்களையும் பல முகமாகப் புறப்பொருள் அமைதி தோன்றக் கலித்தாழிசையிற் பாடப்படும் பிரபந்தமாம். பரணின்மேல் இருந்துகொண்டு களப்போரினைக் கண்டுரைப்பதாகக் கருதப்படுதலின் இது இப்பெயர் பெற்றதென்பர். வேறு காரணங்களும் கூறுவதுண்டு. ஏனைப் பிரபந்தங்கள் போலப் பாட்டுடைத் தலைவன் பெயருடன் வழங்காமல், தோல்வியுற்றோரின் பெயருடன் சார்ந்தே இப்பிரபந்தம் வழங்கும்.

கீழ் வரும் செய்யுட்கள் தக்கயாகப் பரணியில், காளிக்குக் கூளி கூறிய பகுதியில் உள்ளவை. தக்க யாகப் பரணியை இயற்றியவர் ஒட்டக்கூத்தர். இவரது இயற்பெயர் கூத்தர் என்பது. இவர் கூத்த முதலியார் என்றும் வழங்கப்படுவார். இவர் பிறந்த ஊர் மலரி. இவர் விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவரின் அவைக் களப் புலவராய் விளங்கியவர். மூவருலா, ஈட்டி எழுபது முதலியன இவர் இயற்றிய பிற நூல்கள். இவரது காலம், 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

[தக்கன் யாகசாலையை அடைந்த தாட்சாயணி அங்கு அவமதிக்கப்பட்டுக் கோபமுற்றுத் திரும்பிக் கயிலையை அடைகின்றாள்.]

### தேவி கைலைக்குச் செல்லுதல்

என்றென்று வணங்கி வணங்கிவிடா(து)
எல்லாரு மிரப்ப இரப்பவதற்(கு)
ஒன்றுந்தணி வின்றிவி ரைந்துபிரான்
உறைகோநகர் புக்கனள் ஒண்ணுதலே. 1

தேவி விண்ணப்பஞ் செய்தல்

புக்குப்பெரு மானடி சேவடியிற்
பொன்மாமலர் கொண்டு புனைந்துபொலஞ்
செக்கர்ச்சடை யானெதிர் நின்றருளிச்
செய்தாளடை யத்தமர் செய்தனவே. 2

தேவியின் சினம்

தாய்தந்தை யெனத்தடை செய்வளினித்
தானேயென வேள்வி தகர்ப்பதுமேல்
நாதன்றிரு வுள்ள மெடுத்திலன்மற்(று)
அதுகண்டு முனிந்தனள் நாயகியே. 3

வேலெ டுத்திலர் அம்பு தொட்டிலர்
முயல கன்பெரு வெரின்மிசைக்
காலெ டுத்திலர் அகில முஞ்சுடு
கையெ டுத்திலர் ஐயரே. 4

தேவி பிரிந்து செல்லுதல்

கரந்த பாகமும் நின்ற பாகமும்
வேறு கொண்டமை காதலாள்
புரந்த பாகமும் அவற்கு விட்டிம
யம்பு கத்தனி போகவே. 5

சிவபெருமானுடைய சினம்

விட்ட பாகம் வலிந்து கண்டனர்
வேறு கண்டிலர் மெய்ப்படப்
பட்ட பாக மிரண்டு மங்கவர்
இல்லை யன்று படாதவே. 6

இந்த ளுடவி முன்சி வக்க
எரிந்த தொத்த(து) இருண்டதண்
சந்த ளுடவி வேறு பட்டது
தம்ம லைக்குளிர் சாரலே.

பைத்த பூணும் உயிர்ப்ப முன்றன
பண்டை உண்டியும் அவ்வழிக்
கைத்த தூழியில் ஆடு மஞ்சன
மூங்கி ளர்ந்து கனன்றதே. 8

மதியும் அன்றொரு தீவி ளைந்து
வளைந்து கொண்டது கங்கைமா
நதியும் வீசிய சீக ரங்களின்
வந்து வந்து நலிந்ததே. 9

நூடு மஞ்சன ஆறு சுட்டது
கண்ணி சுட்டது பண்டுதாம்
ஆடு மஞ்சன முங்கொ தித்த(து)
இருப்ப ரோதனி ஐயரே. 10

வீரபத்திர தேவர் தோற்றம்

அன்று வானவர் உய்ய ஐயர்
மிடற்ற டக்கிய ஆலமே
சென்று வானவர் உயிர்கொ ளத்திரு
வுள்ளம் வைத்தமை தெரியவே. 11

காலை நெற்றியின் அகில முஞ்சுடு
கனலி குறைபட இறைவர்தம்
மேலை நெற்றி விழிக்க வந்து
பணிந்து நின்றனன் வீரனே. 12

# 3. தூது

## தமிழ் விடு தூது

தமிழ் மொழியில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் தூது என்பதும் ஒன்று. அது தலைவன் தலைவியருள் ஒருவர் மற்றொருவர்பால் தமது வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப் பொருள்களையேனும் தூது அனுப்புவதாகப் பாவித்துப் பாடப்படுவது. தூதாகச் செல்லற்குரிய பொருள்கள் அன்னம், மயில், கிள்ளை, குயில், மேகம், தென்றல், பாங்கி என்ப. ஈண்டுத் தரப்பட்டுள்ள அடிகள் தமிழ் விடு தூதில் உள்ளவை. தமிழ் விடு தூதென்பது, மதுரைச் சோம சுந்தரக் கடவுள்பாற் காதல் கொண்ட ஒரு தலைவி தமிழை அவர் பால் தூது விடுத்ததாக இயற்றப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது விளங்கவில்லை.

ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருள் மாமுனியும்
தொல்காப் பியமொழிந்த தொன்முனியும்-மல்காச்சொல்

பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசுவைப் பன்னிரண்டு
சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும்—நேத்திரமாம்

தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்
ஆதி முனிவர் அனைவோரும்—சாதியுறும்

தந்திரத்தி னொலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தி னொலொழித்த வல்லோரும்—செந்தமிழிற்

பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும்—ஐயடிகள்

காடவரும் செஞ்சொற் கழறிற் றறிவாரும்
பாடவருந் தெய்வமொழிப் பாவலரும்—நாடவரும்

கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரும் நீயா யிருந்தமையால்,—சொல்லாரும்

என்னடிக ளே!உனைக்கண்(டு) ஏத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன்-பன்னியமென்

பஞ்சிபடா நூலே! பலர்நெருடாப் பாவே! கீண்(டு)
எஞ்சிஅழுக் கேறு இயற்கலையே!-விஞ்சுநிறம்

தோயாத செந்தமிழே! சொல்லே ருழுவரகம்
தீயாது சொல்விளையுஞ் செய்யுளே!—

*    *    *    *

—நல்லாள்

கருணைவிழி யாளங் கயற்கண்ணி தன்னோடு
அருள்புரிய வாழ்ந்திருக்கும் ஐயர்—திருமதுரை

தானேசி வராச தானியென்று வீற்றிருந்தால்
தேனேநம் பாக்கியத்தின் செய்தியே—ஆனமையால்

அந்தரலோ கத்தின்மே லானதிரு ஆலவாய்ச்
சுந்தர மீனவனின் சொற்படியே—வந்து

துறவாதே சேர்ந்து சுகானந்தம் நல்க
மறவாதே தூதுசொல்லி வா!

# 4. கலம்பகம்

கலம்பகம் என்பது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் வருமாறு பல்வகைப் பாக்களால் கடவுள் மீதும், மக்கள் மீதும் பாடப்படும் பிரபந்தமே கலம்பகம் எனப்படுவது.

கீழ் வரும் செய்யுட்கள் மதுரைக் கலம்பகத்தில் உள்ளவை. மதுரைக் கலம்பகத்தை இயற்றியவர் குமர குருபர சுவாமிகள். இவர் பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டமென்னும் கைலாசபுரத்தில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவர்தம் தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர் ; தாயார் சிவகாம சுந்தரி அம்மையார். குமரகுருபரர் இளமையிலேயே துறவறம் பூண்டார். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். காலம் 300 ஆண்டுகட்கு முன்னது. இந்திர ஜாலம் முதலிய மாய வித்தை வல்லவர், தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது சம்பிரதம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். கார் காலத்து மீண்டு வருவேனென்று காலங் குறித்துத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், மீண்டு தன் தேர்மீது வரும்போது, தனக்கு முன்னே மேகங்கள் செல்வதைக் கண்டு, 'இவற்றைக் கண்டு தலைவி மிக வருந்துவளே!' என்று கருதித் தன் பாகனிடம் சொல்வதாகப் பாடுவது கார் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

## i. சம்பிரதம்

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
    றைத்துடன்வி டுத்தி டுவன்;மற்(று)
எட்டுவரை யைக்கடலை முட்டியுள் அடக்கிடுவன் ;
    இத்தனையும் வித்தை அல்லால் ;
துட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
    சொக்கர்குணம் எட்டி னெடுமா
சிட்டர்கள் துதித்திடும் மகத்துவம் அனைத்துமொரு
    செப்பினுள் அடக்கி டுவனே! 1

## ii. கார்

மிக்கார் முகத்தருள் கூடற் பிரான்விட நாண்துவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வா!கை பரந்துசெலும்
இக்கார் முகக்க எழுந்தகொல் லாம்எம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீர் உகாந்த சலதியையே! 2

# 5. அம்மானை

அம்மானை என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று. மூன்று பெண்கள் அம்மானை ஆடும்போது ஒருத்தி தலைவன் பெருமையைக் கூறுவள். மற்றொருத்தி அதனை மறுத்து ஓர் ஐயத்தை எழுப்புவள். இன்னொருத்தி அந்த ஐயத்தைப் போக்க விடை கூறுவள். இவ்வாறு வினாவிடைகளமைந்த பாக்களால் இயன்ற பிரபந்தம் அம்மானை எனப்படும்.

கீழே தரப்பட்டுள்ள செய்யுட்கள் இரட்டைப் புலவர்களால் இயற்றப் பெற்றவை. இவற்றுள் முதலாவது செய்யுள், அவர்களியற்றிய தில்லைக்கலம்பகத்தில் கலம்பகத்துக்குரிய உறுப்புக்களுள் ஒன்றாய் அமைந்தது. மற்றொன்று, அவர்களால் இயற்றப்பெற்ற மூவர் அம்மானை என்னும் பிரபந்தத்தில் உள்ளது. இரட்டையர் தாம் தரிசித்த தலத்தேவதைகளின் திருவிளையாடல்களை ஒருவர் முதலடியாற்பாட, மற்றவர் அதில் பிரசினங்கற்பித்து வேறோர் அடியால் வினவ, அதற்குக் கலைமகளாரே விஞேதார்த்தமாகத் தனியடியால் விடை தந்ததாக ஒரு கதை உண்டு.

இரட்டையர் ஆமிலந்துறை என்னும் க்ஷேத்திரத்திலே செங்குந்தர் மரபிலே அரபத்தர், சிவசரணர் என்னும் இருவர்க்கும் புதல்வராய்ப் பிறந்தனர். இவர்கள் உறவின் முறையால் அத்தை மகனும், அம்மான் மகனும் ஆவார்கள். ஆயினும், இவர்களுள் ஒருவர் முடவராகவும், மற்றவர் குருடராகவுமிருந்தமையால், குருடரின் தோள்மீது முடவர் ஏறிச் செல்வது இவர்கள் வழக்கம். இவர்களது சமயம் சைவம்; காலம் 17-ஆம் நூற்றாண்டாகும்.

தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளு மேவுங்காண் அம்மானை!
வெம்புலியொன் றெந்நாளு மேவுமே யாமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை?
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை! 1

தெண்டிரைசூழ் தில்லைச் சிவகாமித் தாயார்க்குக்
கண்டமெலா ஞானக் கரும்பதுகாண் அம்மானை!
கண்டமெலா ஞானக் கரும்பதுவே யாமாயின்
அண்டர்பிரான் ஆலைதனில் ஆடாளே அம்மானை?
ஆடிப் புலியூ ரமர்ந்தனன்காண் அம்மானை! 2

# 6. ஊசல்

தமிழ் மொழியில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஊசல் என்பதும் ஒன்று. இது ஆசிரிய விருத்தத்தாலாவது கலித்தாழிசையாலாவது 'ஆடீரூசல்,' 'ஆடாமோவூசல்,' 'ஆடுகவூசல்' என்பவற்றுள் ஒன்றால் முடிவுறக் கூறப்படும். அஃதாவது, ஊசலொன்றில் ஏறிப் பிறர் ஆடக் கண்டு பாடுதல் போலவும், அதை எற்றிக்கொண்டே பாடுதல் போலவும், தாமே ஊசலின் மீதிருந்து அசைந்தாடிக்கொண்டே பாடுதல்போலவும் இப்பிரபந்தம் இயன்றிருக்கும். கீழே தரப்பட்டுள்ள செய்யுட்களுள் முதலாவது, திருவரங்கத்தமர்ந்துள்ள அரங்கநாதர் ஊசல் ஆடுவதாகப் பிள்ளைப் பெருமாளையங்கார் சுவாமிகளால் இயற்றப் பட்ட சீரங்க நாயகர் ஊசலில் உள்ளது. இரண்டாவது செய்யுள், தில்லைப் பதியிலமர்ந்துள்ள சிவகாம சுந்தரியார் ஊசல் ஆடுவதைக் கண்டு களித்த இரட்டையரால் பாடப்பட்டது. இது தில்லைக் கலம்பகத்திலுள்ளது. பிள்ளைப் பெருமாளையங்கார் அவர்களின் சரித்திரக் குறிப்பை 4-ஆம் பக்கத்திலும், இரட்டையர் சரித்திரக் குறிப்பை முன் பக்கத்திலும் காண்க.

திருவாழ, திருவாழி சங்கம் வாழ,
திருவனந்தன் கருடன்சேனையர்கோன் வாழ,
அருண்மாறன் முதலாம்ஆழ் வார்கள் வாழ,
அளவில்குணத்(து) எதிராசன் அடியார் வாழ,
இருநாலு திருவெழுத்தின் ஏற்றம் வாழ,
ஏழுலகும் நான்மறையும் இனிது வாழப்
பெருவாழ்வு தந்தருள்நம் பெருமாள் எங்கள்
பெரியபெரு மாள்அரங்க ராடீ ரூசல்! 1

தொல்லைமறை அம்பலவர் ஊச லாடச்
சுரர்முனிவர் மலரயன்மால் தொழுது போற்றக்
குல்லைமகிழ் சண்பகமா தவிமந் தாரை
கொன்றைமலர் சொரிந்தடியார் குணங்கள் பாட,
முல்லைமுகை நகையரும்பப் பசும்பொன் ஞேலை
முகமதியின் முத்தரும்ப, அரம்பை மாதர்
தில்லைவளம் புகழுவினி தாடீ ரூசல்!
சிவகாம சுந்தரியா ராடீ ரூசல்!! 2

# 7. குறவஞ்சி

குறவஞ்சி என்பது நாடகநூல். இது குறத்திப்பாட்டு எனவும், குறவஞ்சி நாடகம் எனவும் பெயர்கள் பெறும். இது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். பவனிவரும் கடவுளாய தலைவனைக்கண்ட தலைவி ஒருத்தி மயங்கித் தலைவனை அடையமுடியுமோ என ஐயுற்று ஏங்கி இருக்கையில், குறத்தியொருத்தி தோன்றித் தனது மலைவளம், நாட்டுவளம் முதலியவையும், தலைவனது தலவளம், கிளைவளம் முதலியவையும் கூறித் தலைவிக்கு அவள் நினைத்த காரியத்தைக் குறிமுகத்துச்சொல்லிப் பரிசு பெற்றுச் செல்லுவதுபோலப் பல வகைப் பாவும், சிந்து முதலியனவும் கலந்து வருமாறு இயற்றப்படும் பிரபந்தமே குறவஞ்சி எனப்படுவது.

கீழ் வரும் பாடல்கள் குற்றாலக் குறவஞ்சியிலுள்ளது. இந்நூலை இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக்கவிராயர் என்பவர். [இவரது சரித்திரக் குறிப்பை 40-ஆம் பக்கத்தில் பார்க்க.]

### குறத்தி திரிகூடநாதர் கிளை வளங் கூறல்

குற்றாலர் கிளைவளத்தைக் கூறக்கேள் அம்மே!
குலம்பார்க்கில் தேவரினும் பெரியகுலங் கண்டாய்;
பெற்றதாய் தந்தைதனை யுற்றுநீ கேட்கில்
பெண்கொடுத்த மலையரசன் தனைக்கேட்க வேணும்;
உற்றதொரு பனிமலையின் கொற்றவேந் தனுக்கும்
உயர்மதுரை மாறனுக்குஞ் செயமருகர் கண்டாய்;
வெற்றிபெறும் பாற்கடலிற் புற்றரவில் உறங்கும்
வித்தகர்க்குக் கண்ணான மைத்துனர்காண் அம்மே! 1

ஆனைவா கனத்தானை வானுலகில் இருத்தும்
ஆறுவா கனத்தார்க்குந் தோகைவா கனர்க்கும்,
தானையால் தந்தைகால் எறிந்தமக னார்க்குந்
தருகாழி மகனார்க்குந் தகப்பனார் கண்டாய்;
சேனைமக பதிவாசல் ஆனைபெறும் பிடிக்கும்,
தேனீன்ற மலைச்சாரல் மானீன்ற கொடிக்கும்,
கானமலர் மேலிருக்கு மோனவய னார்க்கும்,
காமனார் தமக்குமிவர் மாமனார் அம்மே! 2

# 8. பள்ளு

பள்ளு என்பது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இதை உழத்தியர் பாட்டு என்றுங் கூறுவர். இது குறவஞ்சி என்னும் பிரபந்தத்தைப்போல நாடகத்தின்பாற்படும். இது மருத நிலத்தில் நிகழ்வதாக இயற்றப்படும்.

கீழ் வரும் பாட்டு, முக்கூடற்பள்ளு என்னும் பிரபந்தத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. முக்கூடற்பள்ளு யாரால் இயற்றப்பட்டதென்பது தெரியவில்லை. ஆயினும், அதுவே பள்ளுப் பிரபந்தங்களுள் மிகப் பழைமையானதும் சிறந்ததுமாகக் கொள்ளப்படுகிறது.

## i. நகர் வளம்

சோதி மாமணி வீதி நெருக்கும்,
சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்,
சாதி நால்வளம் நீதி பெருக்கும்,
தடத்து வாளை குடத்தை நெருக்கும்,
போதில் மேய்ந்திள மேதி செருக்கும்,
புனமெல் லாந்தண் மலர்விண் டிருக்கும்,
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே! 1

கீழ் வரும் பாட்டு, பருளை விநாயகர் பள்ளு என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. பருளை விநாயர் பள்ளு, சின்னத் தம்பிப் புலவரால் இயற்றப்பெற்றது. இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூரில், வேளாளர் குலத்தில் சற்றேறக்குறைய 160 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். இவர் தந்தையார் வில்லவராய முதலியார் என்பவர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை முதலியன இவர் இயற்றிய பிற நூல்கள்.

## ii. மழை பொழிதல்

வெருண்டு வரியுடல் சுருண்டு துயில்புரி
விடங்கொ ளுரகமு நடுங்கவே,
உருண்டு நிலமிசை புரண்டு நடைமலை
உடைந்து விதலையொ டொடுங்கவே,
மருண்டு குழியத ரிடங்கர் நெளிதர
வரம்பில் வனசரர் கலங்கவே,
இருண்டு புவிமயில் கிழிந்து விடநிரை
எழுந்து கனமழை பொழிந்ததே! 2

# VII. மொழி பெயர்ப்பு

## 1. மேகத்தின் சுய சரிதை *

கீழ் வரும் செய்யுட்களை இயற்றியவர் வித்துவான் ரா. நடேச நாயகர் என்பவர். இவர் சென்னையில் 1900-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர்தம் தந்தையார் இராசு நாயகர்; தாயார் பூங்காவனம் அம்மையார். தமிழர் சமயத்தவர். ஆசிரியர் ச. த. சற்குணர் அவர்கள் முதலிய பல தமிழறிஞரிடத்துத் தமிழ் பயின்றவர். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டமும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பட்டமும் பெற்றவர். கீழே தரப்பட்டுள்ளவை போலப் பல ஆங்கிலச் செய்யுட்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் சென்னைப் பச்சையப்பன் உயர் கலாசாலையில் தமிழாசிரியராய்த் தொண்டாற்றி வருகின்றார்.

தந்தை தன்னைத் தாய்சூழத்
　　தாயைத் தநயை சூழ்வதுபோல்
எந்தை எல்லைச் சூழ்ந்துவரும்
　　என்தாய் புவியை எங்கைமதி
விந்தை யுடனே சூழுங்கால்,
　　விழைவின் யானும் என்தாயைச்
சிந்தை யாரும் பத்தியுடன்
　　செறிந்தே என்றும் சூழ்வருவேன். 1

விண்ணில் ஓடி விளையாடி
　　விழைவாய் வளர்ந்து மறுபடியும்
மண்ணின் தாய்க்குக் கைம்மாறாய்
　　வளமாய் அவளின் உயிர்தழைக்க
நண்ணி அவள்தன் மடியமர்வேன்;
　　நலமாய் அவளும் பசந்தொளிர்வாள்;
எண்ணில் திரிவு நானுறினும்
　　என்றும் நானோ அழியேனே! 2

---

* ஆங்கிலக்கவி 'ஷெல்லி' எழுதிய 'The cloud' என்பதன் மொழி பெயர்ப்பு

## 2. நிலா

கீழ் வரும் செய்யுட்களை இயற்றியவர் பாரதி தாசன் என்பவர். இவர்தம் இயற்பெயர் கனக. சுப்புரத்தினம்; 1891-ஆம் ஆண்டில் புதுவை நகரில் பிறந்தார். இவர் பாரதியாரைப் போலப் புதிய துறைகளில் இனிய பாட்டுக்கள் பல இயற்றியுள்ளார். அவை ஒன்று திரட்டப்பட்டு 'பாரதி தாசன் கவிதைகள்' என்னும் ஒரு நூலாய்த் திகழ்கின்றது. இங்குத் தரப்பட்டுள்ள செய்யுட்கள் 'பில்ஹணீயம்' என்னும் வடமொழி நூலில் பில்ஹணர் நிலாத் தோற்றத்தைக் கண்டு வருணிக்கும் பகுதியைத் தழுவி இயற்றப்பட்டவை.

அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ! 1

உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை;
நித்தியத ரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ! 2

# VIII. சீட்டுக்கவி

இக்காலத்தில் நாம் பிறருக்குத் தெரிவிக்க எண்ணும் விஷயங்களை உரை நடையில் எழுதுகின்றோம்; முற்காலத்தில் புலவர்கள் தங்கள் கடிதங்களைச் செய்யுள் வடிவிலேயே அனுப்பும் ஒரு முறை இருந்து வந்தது. கீழே தரப்பட்டுள்ள செய்யுள் அத்தகையது. இதை இயற்றியவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர். இவர்தம் சரித்திரக் குறிப்பை 42-ஆம் பக்கம் பார்க்க.

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்(து)
எழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை:
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க:
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொ ளாதகோணம்,
பறவாத கொக்(கு), அனல் பண்ணாத கோடை, வெம்
படையில் தொடாதகுந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே!

# IX. தனிப்பாடல்கள்

*கீழ் வரும் செய்யுள் பலபட்டடைச் சொக்கநாதப்புலவரால் இயற்றப்பெற்றது. இவர் இற்றைக்கு மூந்நூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர் என்பதும், மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்தவர் என்பதும் தெரிகின்றன. இவரைப்பற்றிப் பிறிதொன்றுந் தெரியவில்லை.*

தாய் தமர்கள் இல்லாததால் !

*சேராத வேடன் செருப்பா லுதைக்கவும், தீண்டவும்,தண்*
*ணீர்வா யுமிழவும், உச்சிட்டம் போடவும், நீண்டசிலைத்*
*தர்ரா லடிக்கவும், கண்ணீர் ததும்பவும் தாய்தமர்கள்*
*ஆரா கிலுமில்லை யோதிருக் காளத்தி யப்பனுக்கே!* 1

*கீழே தரப்பட்டுள்ள செய்யுள் இராமச்சந்திர கவிராயர் என்பவரால் இயற்றப்பெற்றது. இவர் தொண்டை நாட்டிலே இராசநல்லூரில் பிறந்தவர்; சென்னைமாநகரில் வசித்தவர். இவரது காலம் எழுபது ஆண்டுகட்கு முன்னது என்பர். இவர் நாடகத் தமிழில் சிறந்த பயிற்சியுடையவர்.*

விஞவுத்தரம்

*'இரவல னே!உனக் கில்லாத தென்ன ? இதயமென்ன ?*
*பரவுண வேது? சுவையற்ற தென்ன?சொற் பான்மையென்ன?*
*தரவுரை செய்திட,' என்றான்; அதற்கொன்றும் சாற்றிலன்யான்;*
*'வரதிரு வேங்கட னுதா,'என்றேன்; பொன் வழங்கினனே.'*2

*கீழே தரப்பட்டுள்ள செய்யுட்கள் பாலி சு. நெல்லையப்பர் அவர்களால் இயற்றப்பெற்றவை. [இவர்தம் வாழ்க்கைக் குறிப்பை உரைநடைப் பகுதியிற் காண்க.]*

முத்து

*'கடலிடைப் பிறந்த முத்தே! கருதிநான் ஒன்று கேட்பேன்:*
*திடனுடுன் எழிலுஞ் சீரும் எங்குநீ பெற்றாய்?' என்றேன்;*
*'வடிவுறு தமிழ மாதர் முறுவலை மனத்தில் உன்னி*
*அடியினில் தவங்கள் செய்திவ் வழகினைப் பெற்றேன் அன்றே.* 3

நாவற்பழம்

*'காரெனக் கறுத்து நீலம் கலந்தொளிர் கனியே! உன்றன்*
*சீரிய கருமை எங்கே பெற்றனை? செப்பாய்,' என்றேன்:*
*வீரியம் அழகொ டாண்மை மேன்மைசேர் தமிழ்நன் னாட்டு*
*நாரியர் விழியி னின்றிந் நலத்தினைப் பெற்றேன் அன்றே.'* 4

# X. சந்தப்பா

கீழ் வரும் பாடல், அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் திருவண்ணுமலையில் பிறந்தவர்; முருகப் பெருமானிடம் பேரன்பு கொண்டவர். இவர், முருகப் பெருமானை வழுத்தி இயற்றிய இன்னிசைப்பாடல்களின் தொகுதியே திருப்புகழ் என வழங்குவது. இவர் இயற்றிய பிற நூல்கள் கந்தரனுபூதி, கந்தரந்தாதி முதலியவை. இவருடைய காலம் 15-ஆம் நூற்றுண்டு என்பர்.

கனகசபை மேவும் எனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்,
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்,

வினவுமடி யாரை மருவிவினை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்,
விதிமுனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்,

சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்,
சரணசிவ காமி இரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்,

இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ(டு)
இயல்பரவு காதற் பெருமாள்காண்,
இணையிலிப தோகை மதியின்மக ளோடும்
இயல்புலியூர் வாழ்பொற் பெருமாளே!

# செந்தமிழ் இலக்கியக் கலம்பகம்

## முதற் புத்தகம்

## உரைநடைப் பகுதி

# 1. மநுச்சோழன்

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

[திருமிகு இராமலிங்க சுவாமிகள் சிதம்பரத்தை யடுத்த மருதூரில், கருணீகர் மரபில், கி. பி. 1823-ஆம் ஆண்டில், இராமைய பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் புதல்வராய்த் தோன்றினர். இளமையில் தந்தையை இழந்தமையால், சென்னையை அடைந்து, தமது தமையனர் சபாபதிப் பிள்ளையிடம் வளர்ந்துவந்தார். காஞ்சிபுரம் தமிழ்ப்புலவர் சபாபதி முதலியாரிடம் தமிழ் பயின்றார். இவரது சமயம் சைவம். இளமையிலிருந்தே சமயநூல்களைக் கற்றுத் தெய்வபக்தி உடையவராய் விளங்கினர். திருவருளின் திறத்தால் பாடப்பட்ட இவர்தம் பாக்களின் தொகுதி திரு அருட்பா என்று வழங்குகிறது.

இவர், ஒற்றியூருடைய கோவையும், கந்தகோட்டப் பெருமானையும், தணிகை நாயகனையும் பல பாக்களால் வழுத்தியுள்ளார். ஜீவகாருணிய ஒழுக்கம், மநுமுறைகண்ட வாசகம் ஆகியவை இவர் இயற்றிய உரைநடை நூல்களாம். இவர் கி. பி. 1873-ம் ஆண்டில் வடலூரில் மறைந்தார்.]

### முன் கதைச் சுருக்கம்

[நீர்வளம் நிலவளம் நிறைந்த சோழநாட்டைத் திருவாரூர் என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு மநுச்சோழர் மிகுந்த மாட்சியுடன் ஆட்சிபுரிந்து வந்தார். அவருக்குத் தியாகராஜப் பெருமான் திருவருளால் ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்கு வீதிவிடங்கன் என்னும் பெயரிடப்பட்டது. வீதிவிடங்கன் வாழையிளங் குருத்துப்

போல வளர்ந்து இளவரசு பட்டத்துக்குத் தகுந்த பருவமடைந் திருந்தான். ஒரு நாள் அவன் தன் இரதத்தில் ஏறித் தியாக ராசப் பெருமான் கோவிலுக்குச் செல்லுகையில், ஒரு புனிற் றிளங் கன்று துள்ளிக் குதித்துவந்து தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு இறந்தது. அதுகண்ட தாய்ப்பசு தன் குறையை, அரண் மனை வாயிலில் கட்டி இருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அரசனுக்கு அறிவித்தது. பசுவின் குறையை மந்திரி களால் அறிந்த அரசன், கலாவல்லபன் என்ற மந்திரியை அழைத் துத் தமது அருமந்த புதல்வனை வீதிவிடங்கனை இளங்கன்று இறந்த இடத்திற் கிடத்தி, அவன் மீது தேரை யோட்டிப் பசு வுக்கு நீதிவழங்குமாறு பணித்தான். அவ்வாறு செய்ய உடன் படாத கலாவல்லபன், கன்று இறந்துகிடந்த இடஞ்சென்று இளவர சன் உயிரை மாய்ப்பதற்குப் பதில் தன் உயிரை மாய்த்துக்கொண் டான். அதுகேட்ட அரசன் ஏவலாட்களை அனுப்பி வீதிவிடங்கனை அழைத்துவரச் செய்தான். வீதிவிடங்கனும் அரசவை யடைந்து தந்தையார் முன்போய்த் தொழுது வணங்கித் தூரத்திலே நின்றான்.]

அப்படி நின்ற புதல்வனை மநுச்சக்கரவர்த்தியானவர் நேரே பாராதவராய், வேறொருவன் முகத்தைப் பார்த்து, "இவன் இளங்கன்றை யெவ்வாறு கொன்றானோ, அவ்வாறு கொலை செய்யப்படுதற்குத் தக்க குற்றவாளி யாயினான்," என்று கூறி, கொலை வீரர்களை யழைப்பித்து, "இந்தக் குற்ற வாளியை ஏற்பாட்டின்படி, கடுங்காவல் செய்து கன்றிறந்து கிடக்கின்ற வீதியிற்கொண்டுபோய்க் கிடத்துங்கள்," என்று கட்டளை யிட்டார். அந்தக் கட்டளைக்கு அஞ்சி அவ்வீரர்கள் உருவிய கத்தியோடு சூழ்ந்து நடுவே ராஜபுத்திரனைக் காவல் செய்து நடத்திக்கொண்டு போக, மநுச்சக்கரவர்த்தியும் மலைபோல் உயர்ந்த ஒரு தேரிலேறிக்கொண்டு பின்னே சென்று அந்தப் பசுங்கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் போய், தமது புத்திரனைக் காவல் செய்து முன்னே நடத்தி வந்த கொலைவீரர்களைப் பார்த்து, "இனிக் காலதாமசம் பண்ணாமல் இந்தப் பசுங்கன்றை யெடுத்து அப்புறத்தே வைத்து, இவ்வீதிவிடங்கனைக் கிடத்தி வையுங்கள்," என்று கட்டளை யிட்டார்.

அதுகேட்டுக் கொலைவீரர்கள் மனம் பதைத்து மதிமயங்கி நின்றார்கள். அப்பொழுது தந்தையாகிய மநுச்சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டு மயங்கி நின்ற கொலைவீரர்களை வீதிவிடங்கன் பார்த்து, "நீங்களேன் மயங்கி வருந்துகின்றீர்கள்? அந்தக் கட்டளையின்படி நானே செய்துகொள்ளுகின்றேன்," என்று சொல்லித் தியாகராஜப் பெருமான் சந்நிதிக்கெதிராகத் திரும்பி இரண்டு கைகளையும் குவித்துச் சிரசின்மீது வைத்துக்கொண்டு, "சிறு பிள்ளைக்குத் திருப்பாற்கடலை யழைத்துக் கொடுத்த தியாகராஜப் பெருமானே! அடியேன் பசுங் கன்றைக் கொன்ற பாதகனுயினேன். அதுவும் போதாமல், ஐயோ! எனக்கு நல்வழியைக் கற்பித்துக் கண்போல் விளங்கிய நின்னடிமையிற் சிறந்தவனுகிய மதியுள்ள கலாவல்லபனென்கிற மந்திரியையும் இறப்பிப்பதற்குக் காரணமாகியுமிருந்தேன்! இப்படிப்பட்ட என்போல் பாவிக ளெங்கே யுண்டு? என் பிதா தண்டிக்கப்போகிற தண்டனை என் பாதகத்துக்குத்தக்க தண்டனையுமல்லவே! என்ன செய்வேன்! பாவியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லாதபடியால் அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும்! என் பிதாவுக்கும் எனக்கும் உரித்தாகியிருந்த மற்றெவர்களுக்கும் என்னைப்பற்றி வந்த பழி பாவங்களை நீக்கி யருளவேண்டும். என்பொருட்டு இறந்த மந்திரியை எழுப்பிக் கொடுத்தருளவேண்டும்," என்று சொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டு திரும்பி நின்று; மாதா, பிதா, குரு முதலானவர்களுக்கும் மனத்தினல் வந்தனஞ் செய்து, வடக்கே தலையும் தெற்கே காலும் வைத்து, இரண்டு கண்களையும் மூடி, சிந்தையைச் சிவபெருமான் திருவடித் தியானத்தில் வைத்து, யோக நித்திரை செய்பவன் போல் உடம்பைக் கிடத்தினன்.

அப்போது மநுச்சக்கரவர்த்தியானவர் சிவத் தியானஞ் செய்துகொண்டு, தியாகேசர் சந்நிதியை நோக்கி, "அடியேனை யாட்கொண்ட ஆண்டவனே! இவ் வீதிவிடங்கனென்பவன் பசுங் கன்றைக் கொலை செய்தானென்பது

பிரத்தியட்சமாக உண்மையென்று வெளிப்பட்டபடியால் மேலோர் ஏற்படுத்திய தரும நூல்களில் 'கொலை செய்தவனைக் கொலை செய்யக் கடவர்' என்று விதித்திருக்கிற விதியின்படி இவனைக் கொலை செய்யும்படி திரிகரண சுத்தியாகத் தீர்ப்பிட்டுக்கொண்டு, இதோ தேர்க்காலிலூர்ந்து கொலை செய்யத் தொடங்குகின்றேன்," என்று சொல்லிக் கொண்டு, தேரிற் கட்டிய குதிரைகளை விழுந்து கிடக்கின்ற வீதிவிடங்கன் கழுத்தடியிற் சக்கரம் அழுந்தும்படி நேராக முடுக்கித் தேரை நடத்தினர்.

அப்போது தேர்ச் சக்கரமானது வீதிவிடங்கன்மேல் அழுந்திக் கறகறவென்று இழுத்துக்கொண்டு அதிக வேகமாகச் செல்ல, உடல் குழம்பிச் சின்னபின்னப்பட்டு, நசுக்குண்டு, கையாற் பிசைந்து ரசம் பிழிந்த மாங்கனியின் கோதுபோல உடல் வேறு உயிர் வேருக இறந்தான்.

உடனே மநுச்சக்கரவர்த்தியானவர் மந்திரியின் பழிக்காகத் தம் உயிரைக் கொடுக்கத் துணிந்து தேரிலிருந்து கீழே இழிந்தார். அப்போது ஸ்ரீ கண்டர், அனந்தேசர், காலச்செந்தீயுருத்திரர், துவாதசருத்திரர் முதலான பத மூர்த்திகளும், கபாலிகன், அசன், புதன் முதலான பதத் தலைவர்களும், இந்திரர், சந்திரர், சூரியர் முதலான தேவர்களும், வசிட்டர், அகத்தியர், புலத்தியர் முதலான முனிவர்களும், கண்ணுவர், கருக்கர், சுதானந்தர் முதலான இருடிகளும், அசுரர், அந்தரர், ஆகாயவாசிகள், விஞ்சையர், வித்தியாதரர் முதலான கணங்களும், நந்தி, சண்டன், பிரசண்டன் முதலான பிரதம கணங்களும் சூழ்ந்து துதித்துவரவும், பேரிகை, மத்தளம், தாளம், சங்கம், சச்சரி, தடாரி முதலான வாத்தியங்கள் முழங்கி வரவும், "எல்லாம் வல்ல இறைவன் வந்தான்; நல்லோர்க்கு அருளும் நாயகன் வந்தான்; முப்புரமெரித்த முன்னேன் வந்தான்," என்று சின்னங்கள் பிடித்து வரவும், உலக மாதாவாகிய உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க, ஜடாமகுட திரிநேத்திர காளகண்ட சதுர்ப்

புஜம் முதலானவை விளங்க, தர்ம சொரூபமாகிய இடப வாகனத்தின்மேல் சர்வமங்கள சக்தியே திருமேனியாகக் கொண்ட தியாகராஜப் பெருமான் எழுந்தருளி மநுச்சோழ ராஜனுக்குமுன் தரிசனங் கொடுத்தருளி, குளிர்ந்த நிலவு ததும்பி வீசுகின்ற புன்னகை காட்டி, அரசனுக்கு ஜில் லென்று உடம்பும் உள்ளமும் உயிரும் குளிரும்படி செய் வித்து, கருணையென்னும் வெள்ளம் நிறைந்து, பொங்கித் ததும்பி, பெருக்கெடுத்து, ஒளிகொண்டோங்கி மடை திறந் தோடுகின்ற மலர் போன்ற திருக்கண்களால் அருள் நோக் கஞ் செய்து அவ்வரசனுக் குண்டாயிருந்த விடாய் முழுதுந் தீர்த்து, "நம்மிடத்து நம்பிக்கையும் பேரன்பும் வைத்து, மநுநீதி தவருது அரசாட்சி செய்கின்ற மநுச்சோழனே! நீ நடத்துகின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வை யாகத் தெரிந்துகொள்ளும்படி நாமே இவ்வாறு சோதிப்பித் தோம்; இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்," என்று திரு வாய் மலர்ந்தருளி, இறந்து கிடக்கின்ற பசுங் கன்றும், கலாவல்லபனென்னும் மந்திரியும், வீதிவிடங்கனென்னும் இராஜகுமாரனும் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி கடாக்ஷித்தருளினர்.

அந்தக் கணமே நித்திரைநீங்கி யெழுகின்றதுபோல் இளங்கன்ருனது உயிர்பெற்றெழுந்து தன் தாய்ப் பசுவி னிடத்தில் சென்றது. மந்திரியும் புதல்வனும் உயிர்பெற் றெழுந்து ஆண்டவனை வணங்கி அருகே மலர்ந்த முகத் தோடு வந்தனை செய்துகொண்டு மகிழ்ந்து நின்ருர்கள்.

# 2. கல்வி

## திரு. ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள்

[*திரு. ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள் திரிச்சிராப்பள்ளியை யடுத்த குளத்தூரில் 1824-ஆம் ஆண்டில் சவரிமுத்துப் பிள்ளைக்குப் புதல்வராய், உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மரபில் உதித்தவர். இவர் ஆங்கிலம் நன்கு பயின்றவர்; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்றவர்.*

*இவர் 1848-ஆம் ஆண்டில் ஒரு சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தராயமர்ந்து, பின்னர் படிப்படியாக உயர்ந்து 'ஜில்லா முன்சீப்' ஆனார். சீர்காழி, மாயவரம் முதலிய இடங்களில் ஜில்லா முன்சீப்பாக வேலை பார்த்தார். சமரச மனப்பான்மை கொண்டவர்; பெண் கல்வியில் பெரிதும் ஆர்வம் உடையவர்; சிறு கதைகள் மூலம் நாட்டு மக்களை நல்வழிப்படுத்தலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்.*

*இவர், சர்வ சமய சமரசக் கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், பெண்மதிமாலை, நீதிநூல், சுகுணசுந்தரி சரித்திரம் முதலிய நூல்களையும் பல அருமையான தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் 1889-ஆம் ஆண்டில் மண்ணுலகை நீத்தார்.*]

கல்வியின் பெருமை வாசாமகோசரமா யிருக்கின்றது. பிரகாசத்திற்கும் அந்தகாரத்திற்கும், புண்ணியத்திற்கும் பாவத்திற்கும், சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் எவ்வளவு பேதமோ, அவ்வளவு பேதம் செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் உண்டாயிருக்கின்றது. செல்வம் புத்தியைக் கெடுக்கும்; கல்வி புத்தியைக் கொடுக்கும். செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்; கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும். செல்வம் சிலநாளில் நாஸ்தியாம்; கல்வி அழியாத ஆஸ்தியாம். செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும்; கல்வி யாவராலும் உபசரிக்கப்படும். செல்வம் நம்மைத் துஷ்டர் கையில் ஒப்புவிக்கும்; கல்வி நம்மை ஆபத்திலிருந்து தப்புவிக்கும். செல்வம் காமாதிகளை உண்டாக்கும்; கல்வி காமாதி

களை நாசமாக்கும். செல்வர்களுடைய பேர் அந்நிய தேசங்களில் அப்பிரசித்தம்; கல்விமான்களுடைய பேர் ஜகத்பிரசித்தம். கல்வியே தனம். கல்வியே கனம். அழகில்லார்க்குக் கல்வியே அழகு. ஆபரணமில்லார்க்குக் கல்வியே பூஷணம். பலமில்லார்க்குக் கல்வியே பலம். துக்கமுள்ளார்க்குக் கல்வியே சுகம். தரித்திரர்களுக்குக் கல்வியே பாக்கியம். ஆபத்து வேளையிற் கல்வியே கவசம். கல்வி நினைத்ததெல்லாந் தருஞ் சிந்தாமணி.

படியாதவர்கள் தங்கள் சுதேச காரியங்களையே அறியாதவர்களா யிருக்கிறார்கள். படித்தவர்கள் பூமண்டலமெல்லாம் சஞ்சரிக்கிறவர்கள்போல் பூத பவிஷிய வர்த்தமானங்களையெல்லாம் பல பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். படியாதவர்கள் இப்போதிருக்கிற வித்துவான்களையே அறியார்கள். படித்தவனோவென்றால் தற்கால வித்வான்களைமட்டுமல்ல; பூர்வீக வித்வான்களையும் முகமுகமாகத் தரிசித்துச் சம்பாஷணஞ் செய்கிறவன்போல் அவர்களுடைய கிரந்தங்களிலுள்ள நீதிகளையும், அலங்காரங்களையும், வேதார்த்தங்களையுங் கற்றுக்கொள்ளுகிறான். எப்படியென்றால், திருவள்ளுவரையும் ஔவையாரையுங் கண்டு தண்டம் சமர்ப்பித்து "ஓ ஐயரே! ஓ அம்மையே! உங்களுக்குத்தெரிந்த நீதியைக் கற்பியுங்கள்," என்று கேட்பதுபோலக் குறள், மூதுரை முதலிய நூல்கள் மூலமாகச் சகல நீதிகளையுங் கற்றுக் கொள்ளுகிறோம். கம்பருக்கு நமஸ்காரஞ்செய்து, "ஓ கவி சிரேஷ்டரே! உமது கம்ப சித்திரங்களையும் அபார கற்பனைகளையும் உல்லேகங்களையும் எங்களுக்குப் படிப்பியும்," என்று யாசிப்பதுபோலக் கம்ப ராமாயண மூலமாகச் சகல கற்பனைகளையும் கற்றுக்கொள்ளுகிறோம். காளமேகப் புலவரை மடி பிடித்துக்கொண்டு, "ஓ கவிராயரே! நீர் எங்கள் மேல் வசை பாடினாலும் உம்மை விடோம்; நிந்தாஸ்துதி பாடுந் திறமையை எங்களுக்குப் போதியும்," என்று வழக்காடுவதுபோல அவருடைய பாடல்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். வீரமாமுனிவருக்குச் சரணஞ் செய்து, "குரு

சிரேட்டஷ்ரே! தேம்பாவணி, தொன்னூல், சதுரகராதி முதலிய நூல்களைக் கற்பித்தருளும்," என்று விண்ணப்பம் செய்து கற்றுக்கொள்வதுபோல அந்த நூல்களைப் படிக்கிறோம். இப்படியே பூர்வீக வித்துவான்களெல்லாம் ஆசாரியர்களாகவும் நாம் மாணாக்கர்களாகவும் இருக்குந்தன்மை போல இலக்கண இலக்கியக்களையெல்லாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

படித்தவனுக்கு உலகமே ஒரு பெரிய புஸ்தகமா யிருக்கின்றது. பஞ்ச பூதங்களும், பூமியிலுள்ள மலைகள், மரங்கள், கடல்கள், நதிகள் முதலியவைகளும், வானத்திலுலவும் சந்திர சூரிய நக்ஷத்திரங்களும், மேகங்களும் தத்துவ ஞானத்தை உபதேசிக்கிற குருமூர்த்திகளாயிருக்கின்றன. பூமியிலுள்ள நாநா பேத ஜீவாத்மகோடிகளையும், விருக்ஷ ஜாதிகளையும், அந்த விருக்ஷங்களிலுள்ள மரகதத் தகடுபோன்ற இலைகளையும், நவரத்தினத்தையொத்த பரிமள புஷ்பங்களையும், கற்கண்டுக்கட்டிபோன்ற மதுரக் கனிகளையும், பல வர்ணமுள்ள அழகிய பக்ஷிகளையும் கல்விமான் பார்த்துப் பார்த்து நேத்திரானந்தத்தை யடைகிறான். வானம்பாடி, குயில், கிளி, பூவை முதலிய பக்ஷிகள் பாடும் சங்கீதத்தைக் கேட்டுச் சுரோத்திரானந்தத்தை அநுபவிக்கிறான். அந்த ஆனந்தங்களைக் கொடுத்த பரம கிருபாநிதியை உடனே தியானித்து ஆத்மானந்தத்தையும் அடைகிறான். படியாதவனோவென்றால் அந்த ஆனந்தங்களை அனுபவிக்கத் தெரியாமல் சஞ்சாரப் பிரேதம்போலக் கண்ணிருந்தும் பாராதவனாகவும், காதிருந்தும் கேளாதவனாகவும், மனமிருந்தும் நினையாதவனாகவுந் திரிகிறான்.

# 3. தமிழ்ச் சங்கங்களும் அவற்றின் வேலைகளும்

## திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள்

[திரு. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், ஈழமண்டலத்தைச் சேர்ந்த திருக்கோணமலையில், 1863-ஆம் ஆண்டில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றினார். தம்பிமுத்துப் பிள்ளை என்பது இவர்தம் தந்தையாரின் பெயர்.

இவர் ஸ்ரீ கதிரைவேற் பிள்ளையிடத்தும், ஸ்ரீ கணேச பண்டிதரிடத்தும் தமிழைப் பயின்றார். பச்சையப்பன் கல்லூரி, மாகாணக் கல்லூரிகளில் படித்து பீ. ஏ. பட்டம் பெற்றார். இக்கல்லூரிகளில் பயின்ற காலத்து, இவர் பல பரிசுகளையும் பெற்றார்.

இவர் தொடக்கத்தில் வித்யாபிவிருத்தி சங்கத்திலும், அரசாங்க லேக நிலையத்திலும் வேலை பார்த்தார். பின்னர் முறையே கிறிஸ்தவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் 1922-ல் மரண மடைந்தார்.

இராமாயணம் பாலகாண்டத்திற்குக் குறிப்புரையும், நம்பியகப் பொருளுக்கு உரையும் எழுதியுள்ளார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல அவ்வப்போது இவரால் எழுதப்பட்டுள்ளன.]

கல்வியையும் பாஷையையும் வளர்ப்பதற்காகச் சங்கங்கள் கூடுவதும் உழைப்பதும் நமது நாட்டுக்குப் புதிய ஒரு காரியமன்று. பாண்டியவரசர் காலத்தில் தமிழ்ச் சங்கங்கள் இருந்தது பலருமறிந்த விஷயம். தமிழை வளர்ப்பதற்குச் சங்கங்கள் இருந்ததுபோல ஆதியில் இத் தென்னிந்தியாவில் தெலுங்கு முதலிய பாஷைகளை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் இருக்கவில்லை. ஆயினும், இப்போது இவைகள் தலைகீழாக மாறிவிட்டன. தெலுங்கு கன்னடம் முதலிய பாஷைகளை விருத்தி செய்வதற்காக அவ்வந் நாட்டிற் பல சங்கங்கள் தோன்றி உழைத்து வருகின்றன.

தமிழ் நாட்டிலும் தமிழ்ச் சங்கங்கள் தோன்றியுளவேனும், இவைகள் தெலுங்கு முதலிய பிற பாஷைச் சங்கங்கள் போலப்பாஷையைவளர்க்கவழிதேடவில்லை. மேலைத்தேசத்திலுள்ள 'ஷேக்ஸ்பியர் சொசைட்டி,' 'சாசர் சொசைட்டி' என்பவற்றைப்பற்றிப் பலர் கேட்டிருக்கலாம். அவைகளைப் போலவே ஏறக்குறைய நமது தமிழ்ச் சங்கங்களும் உழைக்க வேண்டுமென்பது எனது கருத்து. ஷேக்ஸ்பியர் சொசைட்டியார், அவர் எழுதின நூல்களுக்கு ஆதாரமா யிருந்திருக்கக் கூடியவைகளை யெல்லாந் தேடித் தெரிந்து, அவரது நூல்களைப் படிப்போர், ஆராய்ச்சி செய்வோர் ஆகிய இவர்கள் நன்மைக்காக அச்சிட்டு வெளிப்படுத்துகின்றனர். அவருடைய நூல்களில் வருகின்ற கருத்துக்கள் எங்கிருந் தெடுக்கப்பட்டன? சொற்கள் எங்கிருந்தெடுக்கப்பட்டன? கதைகள் எங்கிருந்தெடுக்கப்பட்டன? அவற்றில் வரும் கொண்டு கூற்றுக்கள் எவற்றைக் குறிக்கின்றன? அவர் எந்த மருத்துவ நூல்களை வாசித்தார்? எந்த நீதி நூல்களைப் படித்தார்? என்று இன்னோரன்ன பலவற்றையும் எடுத்து விளக்குகின்றனர். இதுபோலவே நமது தமிழ்ச் சங்கங்கள் திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களுக்கும் அவற்றின் உரைகளுக்கும் ஆதாரமாயிருந்த நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து வெளிப்படுத்தவேண்டும். அவை முழுநூலும் அகப்படாதிருந்தாலும், கிடைத்த பாகங்களைக் கிடைத்த மட்டில் அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டும். இந்த நூல்களில் வரும் அரிய சொற்களையும், கருத்துக்களையும் எடுத்துக்காட்டி விளக்க வேண்டும். இவற்றால் புலப்படும் ஒழுக்க வழக்கங்களையும், சரித்திரங்களையும் எடுத்துரைக்கவேண்டும். இன்னும் இவைகளை ஐயந்திரிபறப் படித்தறிந்துகொள்ளுதற்கு வேண்டியவைகளை யெல்லாம் தேடித்தருதல் வேண்டும். அவையாவையெனில், அவற்றில் கூறப்படும் மரங்கள், மலர்கள், அணிகள், உடைகள், இசைக்கருவிகள், தட்டுமுட்டுக்கள் முதலியன. இவ்வயன்றி இந்நூல்களிலும், இவைபோன்ற மற்றை நூல்களிலும் கூறப்படும் மலைகள், ஊர்கள், நாடுகள், நகரங்கள்,

யாறுகள், குளங்கள், முதலியவைகளை இவைகளென நிச்சயித்தலும்வேண்டும். இவைகளெல்லாம் பலர்கூடிய சங்கங்களால், பல நாட்களாக ஆராய்ந்து செய்யத்தக்கனவேயன்றி, ஒருவரிருவரால் ஒரு நாளிருநாளில் அல்லது ஒருவருடைய வாழ்நாளில் செய்யத்தக்கனவல்ல. சங்கத்தார் ஒவ்வொருவரும் தாம்தாம் ஆராய்ந்து அறிந்துகொண்டவைகளை அவ்வப்போது சங்கத்தில் வெளிப்படுத்தித் தமக்குப் பின்வருவோரும் அறிந்துகொள்ளும்படி எழுதியோ அச்சிட்டோ சங்கத்தில் நிலைபெற வைப்பாராயின், அது பின் வருவோர் தம் ஆராய்ச்சிகளை முன்னையோர் விட்ட விடத்திலிருந்து தொடங்குதற்கு ஏதுவாகும். இங்கேயும் ஒருதாரண மெடுத்துக்காட்டினால் என் கருத்துத் தெளிவாகுமென்று எண்ணுகிறேன். பத்துப் பாட்டினுளொன்றாகிய குறிஞ்சிப் பாட்டினுள் கூறப்பட்ட பூக்களெத்தனை? அவற்றுளெத்தனை பூக்கள் இன்னவின்ன வென்று இப்போது நிச்சயிக்கப்பட்டுள்ளன? குறிஞ்சிப்பாட்டு வேண்டாம்; மற்றைய பாட்டுக்களில் வருகின்ற பூக்களில், மரங்களில், கொடிகளில் எத்தனை இவை இவை யென்று நிச்சயிக்கப்பட்டுள்ளன?

இன்னும் பல மரங்களின் பெயர்கள் பலவிதமாக உருவம் மாறி இப்போது வழங்குகின்றன. அறநெல்லி என்பது அருநெல்லியென்றும், அரை என்பது அரசு என்றும், உதி என்பது ஒதி என்றும், ஆவிரை என்பது ஆவரை என்றும் இக்காலத்து வழங்குகின்றன. இவைகளையும் இவைபோல்வனவற்றையும் ஐயந்திரிபற நிலைநாட்டுதல் நமது தமிழ்ச் சங்கங்கள் கடனாம். இனி, பழைய நூல்களில் வரும் மலையும், யாறும், ஊரும் முதலியவற்றை நிச்சயித்தற்குக் கல்வெட்டுக்களையும், செப்புப்பட்டையங்களையும் வாசித்தறிவது பேருபகாரமாகும். ஆகவே சங்கத்தவர்கள் சிலரேனும் பழைய வட்டெழுத்து முதலிய எழுத்துக்களிற் பயின்று சிலாசாசனங்கள் முதலியவற்றை வாசித்தறிதல் வேண்டும். பழைய தமிழ் நூல்கள் இயற்றப்பட்ட காலத்தை நிச்சயித்தலும் தமிழ்ச் சங்கங்கள் செய்யத்தக்கதாகும்.

இனித் தமிழ் நூல்களின் நடை, நோக்கு, அழகு, கொள்கை முதலியவைகளை எடுத்து விளக்குதலும், நூலாசிரியர்களின் கொள்கை, மதம் முதலியவற்றை நிச்சயித்து வெளிப்படுத்தலும், ஒரு நூலோடு மற்றொரு நூலுக்குள்ள வேறு பாட்டையும், ஒரு நூலாசிரியருக்கும் மற்றொரு நூலாசிரியருக்குமுள்ள கொள்கை வித்தியாசங்களை இடைத் தெரித்து விளக்குவதும் தமிழ்ச் சங்கங்கள் செய்யத்தக்கனவேயாம்.

இப்போது வங்காளத்துப் புலவராகிய ரவீந்திரநாத தாகூருடைய செய்யுளின் அழகையும், அதன் கருத்துக்களையும், கொள்கைகளையும், சித்தாந்தத்தையும் பற்றிப் பலரும் பேசவும் எழுதவும் காண்கின்றோம். நமது தமிழ் நூல்களைப்பற்றி ஒருவர் பேசவாவது எழுதவாவது கேட்டிருக்கின்றீர்களா? வங்காளத்துப் புலவர் செய்யுள் நமது தமிழிலுள்ள கலித்தொகை, திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலியவைகளிற் சிறந்ததாகக் காணப்படவில்லை. மாணிக்கவாசகரும், பட்டினத்தடிகளும், தாயுமானவரும் கடவுளிடத்துப் பத்திமையாற் பாடிய பாடல்கள் ரவீந்திர நாத தாகூரின் கீதாஞ்சலியிற் பலமடங்கு சிறந்தனவென்று சொல்ல நான் பின்னிடேன். தாயுமானவர், திருமூலர், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், தத்துவராயர் முதலியவர்களுடைய மதக்கொள்கை எவ்வகைப்பட்டதென்று ஆராய்தலும் தமிழ்ச் சங்கங்கள் செய்யத்தக்கதாம். இதுபோலவே திருவள்ளுவர் எம்மதத்தினரென்பதும் அவருடைய திருக்குறளுக்கு உரையியற்றிய பரிமேலழகர் கொள்கை இதுவென்பதும் ஆராய்ந்து வெளியிடத்தக்கன.

இன்னும் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆராயத்தக்க விஷயங்கள் எத்தனையோ உள்ளன. அவற்றுள்ளும் இரண்டொன்று கூறுவேன். தமிழில் பாக்கள் நான்காயினமைக்கும், பாக்களின் அடிகள் அளவடிகளானமைக்கும் காரண மில்லாமலில்லை. இக்காரணங்கள் இன்னும்

ஆராய்ந்து நிச்சயிக்கப்படவில்லை. இவ்வாராய்ச்சி தமிழ்ச் சங்கத்தார் செய்யத்தக்கது.

இன்னும் தமிழ்ச்சங்கத்தார் செய்யத்தக்கன தமிழ் மொழியைத் தூய்தாக்கலும், அழகுறுத்தலும், இப்போது புதிது புதிதாகத் தோன்றும் சாத்திரங்களும் வித்தைக ளுமாயவற்றின் கருத்துக்களை வெளிப்படுத்தத் தக்கதாக அதனை வளர்த்தலும் பிறவுமாம். இவ்வுலகத்தில் இலக் கண வரம்பின்றிப் பல்கிக் கிடக்கின்ற ஏனை மொழிகள் போலாது, ஆதிகாலந் தொட்டு முதல் இடை கடை என் னும் மூன்று சங்கங்களால் ஆராய்ந்து தூய்தாக்கப்பட்ட தமிழ்மொழி இன்னுந் தூய்தாக்கப்படல் வேண்டுமோ வென்னில் கூறுவேன். தமிழ்மொழி நெடுங்காலமாய்த் தூய்தாய் இருந்தபோதிலும் இப்போது களிம்பேறத் தொடங்கிவிட்டது. தமிழைக் கல்லாரும், நல்லறிவில்லா ரும் நூலியற்றத் தொடங்கித் தமிழுக்குப் பெருங்கேடு செய் கின்றனர். அவர்கள் தமதறியாமையினாலே தங் கருத்துக் களை நன்கு புலப்படுத்தத்தக்க சுத்தத் தமிழ் மொழிகளை ஒழித்து அந்நியபாஷைச் சொற்களை நினைத்தவிடமெல் லாம் புகுத்துவதோடு அமையாது, தமிழிலுள்ள றகர, ரகர பேதங்களையும் ளகர, ழகர பேதங்களையும் ஒழித்துவிட வேண்டுமென்றும், சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் வந்து வழங்கும் வடமொழிகளைத் தமிழிலக்கணப்படி எழுத லாகாதென்றும், சமஸ்கிருதத்தில் உள்ளபடி சமஸ்கிருத எழுத்துக்களாலேயே தமிழில் எழுதல் வேண்டுமென்றும், அவ்வாறெழுதுவதற் கேற்றவாறு தமிழ் எழுத்துக்களைப் புதுக்குறிகள் சேர்த்து அதிகப்படுத்த வேண்டுமென்றும் கூறத் தொடங்கிவிட்டனர். அம்மட்டோ! தமிழ் மொழியைக் கற்றறிந்த பெரியோர் பேசுவதுபோலப் பேசுவதும் எழுது வதும் கூடாதென்றும், படித்தறியாப் பாமரர் பேசுவது போல் பேசவும் எழுதவும் வேண்டுமென்றும் நிற்கின்றார் கள். இதற்கவர் அறியாமை மாத்திரமே காரணமன்று நன்றா யெழுதவேண்டுமென்றால் தமிழ் மொழியைக் கற்றல்

வேண்டுமே என்ற சோம்பலும், நமக்குத் தமிழ் தெரியா தென்று சொல்வதா என்ற மானமும், அகங்காரமுமே முக்கிய காரணமாம். இத்தகைய கொள்கையுடையாரால் தமிழ் மொழிக்கு வரும் கேடுகளைக் காப்பதற்குச் தமிழ்ச் சங்கத்தாரைவிட வல்லார் வேறு யார்?

வேறு சிலர் புதிய சாஸ்திரக் கருத்துக்களைத் தமிழ் மொழியால் உணர்த்த முடியாதென்றும், ஆதலால் தமிழ் மொழியைப் படித்தலால் பயனில்லையென்றும் ஆராயாது சொல்லி ஒழிந்து விடுகின்றார்கள். அவர்கள் தமிழில் எவ் வளவெளிதாகப் புதுமொழிகளும், புதுத் தொடர்மொழிக ளும் ஆக்கிக்கொள்ளலா மென்பதை யறியார்கள். இங்கி லீசில் இப்புதிய சாத்திரக் கருத்துக்கள் முதலில் தோன்ற வில்லையே என்றும், அவைகளை உணர்த்துவதற்கு எத்தனை மொழிகள் காலந்தோறும் புதிதாகச் செய்து கொள்ளப்பட் டனவென்றும், எத்தனை மொழிகள் தாம் ஆதியில் உணர்த் திய பொருள்களை ஒழித்து இப்போது புதிய பொருள்களை உணர்த்துகின்றன வென்றும் அவர்கள் எண்ணுகின்றார்க ளில்லை. 'நன்றாக நீந்தத்தெரியும் வரைக்கும் நான் நீரில் இறங்கேன்' என்றவன்போல அவர்கள் தமிழ் மொழிக்குப் புதிய சாஸ்திரக் கருத்துக்களை உணர்த்துமாற்றல் உண்டா கும் வரையில் அதனால் புதிய சாஸ்திரக் கருத்துக்களை உணர்த்தத் தொடங்கலாகா தென்கின்றார்கள். இவர்க ளறியாமை யிருந்தவென்? இவர்களால் தமிழுக்கு நிகழும் கேடுகளை வரவொட்டாது காப்பதும் தமிழ்ச்சங்கத்தார் கடனும். இவைகளைத் தடுப்பதற்கு ஏற்ற மருந்து கணிதம், ககோள சாஸ்திரம், இதிகாசம், தாவரசாஸ்திரம், வான சாஸ்திரம், புவனசாஸ்திரம், மிருகசாஸ்திரம் முதலியவை களை யெல்லாம் தமிழில் படிப்பிக்கும்படி செய்தலேயாம். அரசாட்சியார் இவ்விஷயத்தை இப்போது ஆராய்கின்ற னர். அவர்கள் நமக்குச் சாதகமான முடிவுக்கு வரும்படி தக்க நியாயங்கள் காட்டி அவர்கள் சந்தேகங்களை யொழிப் பது தமிழ்ச் சங்கத்தார் கடனும்.

---

# 4. ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள்

## திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள்

[திரு. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் மதுரைக் கருகி லுள்ள விளாச்சேரியில் 1870-ஆம் ஆண்டில் சைவ அந்தணர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தையார் கோவிந்த சிவனுர்; இளமையில் ஒரு தமிழ்ப் பள்ளியிலும், பின்னர் முறையே பசுமலைக் கலாசாலை, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரிகளில் பயின்று, B. A. பட்டம் பெற்ருர். தமது தந்தையாரிடம் வடமொழியையும், மதுரைச் சபாபதி முதலியாரிடம் தமிழ் நூல்களையும் கற்ருர்.

தாம் படித்த கிறிஸ்தவக் கலாசாலையிலேயே 25-ஆம் வயதில் தலைமைத் தமிழாசிரியராய் அமர்ந்தார். இவர் சிறந்த அறிஞர்; சமரச நோக்க முடையவர். நாடக இயல், தனிப் பாசுரத் தொகை, பாவலர் விருந்து, மதிவாணன், தமிழ்மொழி வரலாறு முதலிய அரிய நூல்களை இயற்றியுள்ளார். ஞான போதினி, விவேக சிந்தாமணி போன்ற பழைய திங்கள் வெளியீடுகளில் பல அரிய கட்டுரைகள் எழுதியுள்ளார். இத்தகைய சிறந்த அறிஞர் தமது 33-ஆம் வயதி லேயே இவ்வுலகை நீத்தது தமிழ் மொழிக்குப் பெரியதொரு நட்டமாகும்.]

இந்தப் பூலோகத்திலே நாம் பார்க்கிற ஒவ்வொரு பிராணியும் ஏதாவது ஒருவிதமான நிறத்தோடுகூடி விளங்குகின்றது. இந்த மாதிரியாகப் பிராணிகள் யாதேனும் ஒரு வர்ணத்தோடுகூடி விளங்குதல் ஏதாவது ஒரு பிரயோ சனத்தை உத்தேசித்தா அல்லது ஒருபயனு மில்லாமலா வென்பதுவே தொடங்கின விஷயமாகின்றது.

ஆகவே இந்த விஷயமானது, **அழிவகற்று வர்ணம், எச்சரிக்கை வர்ணம், பாலறி வர்ணம், சாதாரண வர்ணம்** என் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் ஒவ்வொன் றையும்பற்றி வரிசைக்கிரமந் தப்பாமல் எழுதுவதற்கு முன் னரே பொதுப்படச் சில தொடர்மொழிகளை, இவ்விஷயத்

திற்கு முக்கியமாயிருத்தலின், விளக்கவேண்டியது நிரம்ப ஆவசியகமாகிறது. அவை **தற்காப்பு நியமம், இயற்கைப் பிரிநிலை, தகுந்தவை தங்கி நிற்றல்** என்பன்வாம். தற்காப்பு நியமமாவது இவ்வுலகத்தில் ஒவ்வொரு பிராணியும் தன்னுடைய பிராண னுக்கு அழிவு வராமல், காத்துக்கொள்ளுவதற்காக உபாயந் தேடுந்தன்மையை இயற்கை யறிவாக (Instinct) உடையது என்றதேயாம். இயற்கைப் பிரிநிலையும், தகுந்தவை தங்கி நிற்றலும் ஒரே தாத்பரியத்தைத் தருந் தொடர்மொழிக ளாகும். இம் மண்ணுலகிலே சுபாவ குணத்திற்கேற்ப இன்னின்ன வஸ்துக்கள் இருக்கத் தகுதியானவை என்று கருதப்படுவனவெல்லாம், பிராணதாரணப் பிரயத்தனத் தில் (Struggle for existence) ஒழிந்து போகாமல், தாமே தங்கி நிற்கும். இந்த நியமங்களெல்லாம் சகல பிராணிக ளுக்கும் பொருந்தும். இவற்றினுண்மையை எங்கும் பரக்கக் காணலாம். இவைகட்கு முறையே பிரயோகிக்கப்பட்ட ஆங்கிலப் பதங்களைக் கூறினால் எளிதில் விளங்கலாம். தற்காப்பு நியமம் (Law of Self Preservation) என்றும், இயற்கைப் பிரிநிலை (Natural Selections) என்றும், தகுந் தவை தங்கிநிற்றல் (Survival of the Fittest) என்றும், பெயர் பெறும்.

## 1. அழிவகற்று வர்ணம்

பொதுப்பட எல்லா வர்ணங்களும், இயற்கைப் பிரிநிலை அல்லது தகுந்தவை தங்கி நிற்றல் என்ற சுபாவ நியமத்திற்கு இணங்கியே உற்பத்தியாகின்றன வென் பது, தற்காலத்துச் சுபாவதத்துவ சாஸ்திரிகளின் கொள் கை. சில பிராணிகளுக்கு அழிவுவராமல் தங்கள் தங்கள் நிறங்களே காப்பாற்றுகையினாலே இவ்வித வர்ணத்திற்கு அப்பெயரிடப்பட்டது.

இது ஆங்கிலத்தில் 'Protective Colours' என்று சொல் லப்படும். மேலே சொல்லிய நியாயத்திற்குச் சில உதார ணங்களை யெடுத்துப்பார்ப்போம். பாயுந் தொழிலையுடைய

புலிகளுக்குக் கண் கவரும் வர்ணக் கோடுகளிருப்பதினாலே என்ன பயனிருக்கிறது என்று சிறிது ஆலோசிப்போமானால், இந்த மிருக ஜாதிகளுக்கு மஞ்சள் நிறக் கீற்றுக்களும் கரு நிறக் கீற்றுக்களும் தன்னிறத்தோடு கலந்திருக்கிறதினாலே மூங்கிற்புதர் அல்லது நீண்ட கோரைப்புற்களுக்கு மத்தியில் அந்தப் புலியானது ஒளிந்து கொண்டிருக்கும் போது, அது அங்கு ஒளிந்திருக்கிறதாகக் கொஞ்சங் கூடத் தெரியாது. அப்படித் தெரியாததற்குக் காரணம் என்னவென்றால் மூங்கில், கோரை இவற்றின் நிறத்திற்கும், புலி நிறத்திற்கும் வித்தியாசம் பார்த்தவுடனே மனத்திற் படாமையேயாம். இவ்வாறு இயற்கைப் பிரிநிலை யென்னும் நியமத்தின்படி 'அப்புலியானது இவ்வர்ணத்தைப் பெற்றிருக்கிறதினாலே, அதற்கு இரையாகத் தக்க மான், பசு முதலாகிய பிராணிகளெல்லாம், புலி இருக்கிறது தெரியாமல், அச்சமின்றி உலாவித்திரிகையில், இது அவற்றின் மேற் பாய்ந்து கொன்று உணவெடுத்துக் கொள்ளுகிறது. இதை விட்டு வேறு ஏதாவது நன்றாய் எடுத்துக் காட்டக் கூடிய ஒரு வர்ணத்தை அது பொருந்தியிருந்தால் அதன் இரைகளெல்லாம் பயந்து ஓடிப்போய்விடும். புலியுமிரையின்றி இறந்துவிடும். இது போலவே மான்களும் புலி முதலியவற்றின் கையில் அகப்படாதிருக்குமாறு தன்னைச் சூழ்ந்துள்ள வஸ்துக்களின் நிறத்தையடைந்து ஏகதேசந் தப்பித் திரிகின்றன. மலைகளிலும், குகைகளிலும், வனங்களிலும் சஞ்சரிக்கும் பிராணிகளெல்லாம் இந்தப்பிரகாரம் சுற்றியிருப்பனவற்றின் நிறத்தை யடைந்திருக்கின்றன. பாலைவனங்களிலே திரிகின்ற தீக்கோழிகளின் இறகுகளெல்லாம் மணலின் நிறமாகவே யிருக்கிறதினாலேதான் அவைகள் மனிதர்களாலும், வேறு பிராணிகளாலும், உண்டாகுஞ் சேதத்திற்கு உயிர் தப்பி நீடித்திருக்கின்றன. பக்கப் பொருள்களின் நிறங்களை ஆங்கிலத்தில் "Colours of the Environment" என்பார்கள். இந்த மாதிரியாக அநேக பிராணிகளுக்குத் தம்மைக் காத்துக் கொள்ளும் இயற்கையறிவினாலே, பக்கப்பொருள்களின் நிறங்க

ளாகிய அழிவகற்றத் தகுந்தவை இயற்கைப் பிரிநிலையாகத் தங்கி நிற்கின்றன. வர்ணங்களிற் பெரும்பான்மை யழிவகற்றலுக்கே உபயோகப்படுகின்றன.

## 2. எச்சரிக்கை வர்ணம்

இப்பொழுது நாம் வழக்கத்தில் "குளவிகள்" என்று சொல்லுகிற ஒருவிதத் தேனீக்கள் இடையில் சிவந்த மஞ்சள் கீற்றுள்ளனவா யிருக்கின்றன. இவ்வித மஞ்சட்கீற்றுக்கள் விசேஷமாய் விஷமுள்ள தேனீக்களிடத்தேதான் இருத்தலால், பார்ப்பவர்களுக்கு இவைகளெல்லாம் விஷ ஜந்துக்களென்று அறிவிக்குங் குறியாக இருந்து அவர்களை எச்சரித்தலால், எச்சரிக்கை வர்ணமென்று பெயர் கூறப்பட்டது. இனி நாக சர்ப்பங்களினுடைய படத்திலே காணப்படும் புள்ளிகளும் அவை விஷமுள்ள ஜந்துக்களெனத் தெரிவிப்பதற் கேற்பட்ட எச்சரிக்கை வர்ணக் குறிகளென்றே டார்வின் (Darwin), வாலெஸ் (Wallace) முதலிய பண்டிதர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இப்பொழுது நமக்குள்ளே சிவப்புக்கொடி யெடுத்தால் ஏதோ ஓரபாயம் வரப்போகிறதென்று எதிர்பார்க்கிறோம். அதைப் போலச் சில பிராணிகளுக்குள்ளு மிது காணப்படுகிறது. உதாரணமாக, முயல்கள் பயந்து ஓடும்போது தமது வெண்மை நிறமான வாலினது நுனியை உயர்த்துகின்றன. இந்த வெண்ணிறக் கொடியைக் கண்ட மற்றைப் பிராணிகள் ஏதோ அபாயம் நெருங்கியதென்று அறிந்துகொண்டு தப்பித்துக் கொள்ளுமாறு மறைந்துவிடும். இது ஆங்கிலத்தில் "Warning Colours" என்று பெயர் பெறும்.

## 3. பாலறி வர்ணம்

அனேகபட்சிக் கூட்டங்களில், ஆணிது பெண்ணிதுவென்று அறிவது அதிக துர்லபம். இப்படித் துர்லபமாய் இருக்கப்பட்டவற்றுட் பெரும்பான்மை வர்ண பேதங்களாலறியப்படுகின்றன. சிறுபான்மை, உதாரணமாகக் கருநீறக்காக்கை, மீன்கொத்தி, மரங்கொத்தி முதலியனவற்றுள்

ஆணிது பெண்ணிது வென நிர்ணயிப்பது மகா கஷ்டம். ஆயினும், சேவலும் பேடும் வர்ணபேதம் பொருந்தியிருக்கின்றன. சாதாரணமாகச் சிட்டுக் குருவிகளிற் பெண் குருவிகள் மங்கல் நிறமாயிருப்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். பச்சைக் கிளிகளிலே ஆண் கிளியானது அதிக அழகும், கம்பீரமும் உடையதாகிக் கழுத்திலே ஆரம் போன்ற பசிய மயிர்கற்றை பொருந்தி யிருக்கின்றது. மயில் வர்ணங்களிலோ, பெண் மயில்கள் நீண்டதோகைகளும், காந்தியும் வனப்பு மில்லாதிருக்கின்றன. இந்த விதமான வித்தியாசமிருப்பதற்குக் காரணம், பேடுகள் அழகிய ஆண்களை யடையும்பொருட்டு இயற்கைப் பிரிநிலையாக ஏற்பட்டிருப்பதேயாம் என்று டார்வின் துரை சொல்லுகின்றனர். இது பாலறி வர்ணம் (Sexual Colours) ஆம்.

### 4. சாதாரண வர்ணம்

வர்ணத்தால் யாதொரு பயனுமில்லாதவிடத்து இப்பெயர்பெறும். இதை ஆங்கிலேய பாஷையில் "Normal colours" என்று கூறுகிறார்கள். வெகு நேர்த்தியோடு கூடிய பற்பல வர்ணக்கோடுகளாலும், புள்ளிகளாலும் மீன்களிற் சில அலங்கரிக்கப்பட்டிருத்தலும், சில வெட்டுக் கிளிகள் பச்சைக் கோட்டினால் சித்திரிக்கப் பட்டிருத்தலும், வரிப்புலிபோற் கோவேறு கழுதைகளும் கோடுகளைப் பெற்றிருத்தலும், ஒரு பயனும் கருதியல்ல. ஆகையினாலே இவற்றைப் பயனில் வர்ணம் என்று சொல்லலாம்.

மேலே கூறிய பிரிவுகளெல்லாவற்றிலும்; அழிவகற்று வர்ணமே மிகப் பிர்தானமானது. இதுவும் எச்சரிக்கை வர்ணமுமே ஏராளமான அத்தாட்சிகளை யுடையனவாயிருக்கின்றன. ஆகவே, அனேகமாய் வர்ணங்களெல்லாம், ஏதாவது ஒரு பிரயோஜனத்தை உத்தேசித்தே உற்பத்தியா யிருக்கின்றன வென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்பது சாங்கோபாங்கமாய் விளங்கும்.

# 5. கடவுள் வழிபாடும் சமய உணர்ச்சியும்

## மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள்

[*திரு. இராகவையங்கார் அவர்கள் இராமநாதபுரத்தை அடுத்த* தென்னவராயன் புதுக்கோட்டையில், *வைணவ அந்தணர் மரபில் 1870-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தம் தமிழாசிரியர் அஷ்டாவ தானம் முத்துசாமி ஐயங்கார். இவர் சேது சமஸ்தான மகாவித்து வான்; மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்'ப் பத்திரிகை யின் ஆசிரியராய்ப் பல ஆண்டுகள் இருந்தார்.*

*பாரிகாதை, புவியெழுபது, வஞ்சிமாநகர், நல்லிசைப் புலமை மெல்லியலார் முதலியன இவரியற்றிய நூல்கள்; குறுந்தொகை போன்ற சில நூல்கட்கு உரை கண்டுள்ளார்.*

*இவர் இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சியாளராக இருந்து வருகிருர்.*]

*தமிழர்கள் பல சமயத்தவர்களாய் இருக்கிருர்கள். இவர்கள் பூர்வநிலை எவ்வாறிருந்திருக்கவேண்டு மென்பதே நாம் ஆலோசிக்க வேண்டிய விஷயம். இப்பொழுது பௌத்தர், சைவர், வைஷ்ணவர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகப் பலதரத்தினர் தமிழரிடையே உள்ளனர். பொது வாக அவர்கள் தாய்ப் பாஷையாகவுள்ளது தமிழேயாகும். இஃது எவ்வாறு ஏற்பட்டது ?*

*கண்ணுல் காணப்படும் இவ்வுலகத்தின் அனுபவத்தி லிருந்தே இதற்குப் புறம்பானவையும், இதனில் வேருன் வையுமான விஷயங்களைப் பற்றிய கருத்துக்கள் தோன் றும். இவையே சமய உணர்ச்சிக்குக் காரணமாக அமை கின்றன. தெய்வ உணர்ச்சி அல்லது சமய நிலையே இதன் முடிவாகும். தெய்வம் என்ற சித்தம் உண்டாக வேண்டும். இது சுலபமாக உண்டாகாது. பல்லாயிரம் கோயில்களும் விழாக்களும் காணும் நமக்கு, இக்காலத்தில்*

கடவுள் சித்தம் உண்டாதல் எளிது. இவையில்லாத காலத்தில் கடவுள் சித்தம் உண்டாவது கஷ்டம். ஆசையற்ற இடத்திலேதான் தெய்வ உணர்ச்சி ஏற்படும். உலகின் நிலையாமையாலேதான் அந்த நிராசை ஏற்படவேண்டும். நிலையாமை ஒன்று இல்லாவிடின், ஆசை விடாது. உலகில் காணப்படும் சுகங்கள் நிலையில்லன என்பது தெரிந்ததும், நிலைத்த பொருளாகிய கடவுளிடம் நம் மனஞ் செல்லும்.

தமிழருக்கு இவ்வபிப்பிராயம் எப்பொழுது ஏற்பட்டது? இதற்குக் காலங் குறிப்பது எளிதன்று. **காஞ்சி** என்ற தமிழ்ப்பதம் **நிலையாமை** என்று பொருள்படும். இதை விளக்கித் தொல்காப்பியனார் சூத்திரம் வரைந்துள்ளார். ஆகவே, தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பே நிலையாமையைப் பற்றிய தத்துவங்கள் தமிழர்க்கு இருந்தன என்பது உறுதி. காஞ்சி என்பதற்குத் தமிழில் திணையும் துறையும் வகுக்கப்பட்டிருக்கின்றன. சாதல் புதுவதன்று. ஆதலால், நிலையாமையைப் பற்றிய அபிப்பிராயமும் ஏற்பட்டிருக்கலாம். 'செத்தவரைச் சாவாரல்லவா சுமக்கின்றார்? நால்வர் சுமக்கவேண்டிய உடலை நானொருவன் எங்ஙனம் சுமப்பது?' என்று முத்துத் தாண்டவர் கேட்டிருக்கின்றார். இது மகத்தான ஓர் எண்ணத்தை வெளியிடுகிறது. உலகில் துக்கங்கள் பல இருப்பதை நாம் காண்கிறோம்.

ஒரு வீட்டார் அழுது கொண்டிருக்கின்றனர்; மற்றொரு வீட்டில் மகிழ்ச்சி நிலவுகிறது. ஒருவருக்குத் துன்பமும், ஒருவருக்கு இன்பமும் அளிப்பதைக் குறித்துக் கடவுளைப் பண்பிழந்தவர் என்றுங்கூட ஒரு சிலர் கூறியுள்ளார்.

துன்பங்களினூடே இனியதைக் காட்டும் புத்திதான் உண்மை ஞானம். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்று பண்டைப் புலவர் கூறியதில், 'யாதும் ஊரே' என்றதனால் உலக முழுவதும் ஒன்று என்பதாயிற்று. தந் நாடென்னுங் குறுகிய நோக்கத்திற்கு அங்கு இடமில்லை. உலக மாந்தரனைவரும் ஒரு தாயின் மக்கள் என்பதே அவர்தம் துணிபு.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா,' என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவே கீதையின் உபதேசம். அவனவன் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ளவேண்டும். ஒருவனுடைய புண்ணியத்தை மற்றவர் கொள்ள முடியாது. இப்பொழுது கூறி வந்த உயர்ந்த தத்துவங்கள் தமிழருக்குப் புதியனவல்ல.

மக்களாகவும், பிறவாகவும் பிறந்த உயிர்கள் யாவும் இறந்துவிடத் தக்கனவேயாம். ஆகவே, வாழ்தலில் மகிழ்தல் என்பதில்லை. அதாவது வாழ்வும், இறப்பும் பெருத்த விஷயமாகப் பொருட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பு. பெருவெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்ட சிறுபடகு நீரின் வழியிற்படுவதையொப்ப, இவ்வாருயிரும் கன்மத்தின் வழிப்படுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த உண்மை தெரிந்துவிட்டால், பெரியோரை வியத்தலாவது, சிறியோரை இகழ்தலாவது இல்லையாம். இத்தகைய அபிப்பிராயங்கள் வளர வேண்டுமானல், சமய உணர்ச்சி எத்தனையோ பல்லாயிர வருடங்களுக்கு முன்னல் ஏற்பட்டிருக்கவேண்டும்.

சூரியனைப் பிரார்த்தித்தால் துயரந் தீருமென்ப் பண்டைத் தமிழர் நம்பிவந்தனர் என்பது தெரியக்கிடக்கின்றது. இவ்வாறு பூதவணக்க மிருப்பதால், வைதிக மதமும் தமிழர் சமயமும் ஒன்ருக வளர்ந்திருக்கலா மென்று யூகிக்க இடமுண்டு.

'இரண்டும் எப்போது எப்படி சேர்ந்தன? எப்போது பிரிந்தன?' என்று நாம் தற்போது தெரிந்து கொள்ளக் கூடவில்லை. பிறைதொழுதல் என்ற துறையைத் தமிழர் வகுத்திருந்த படியாலும், பூதவணக்கமிருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது. இக்கருத்து வடநூலிலும் வைதிக ஒழுக்கத்திலும் விசேஷமாகக் காணப்படுகின்றது. இருக்கு வேதத்திற்கும் சங்கச் செய்யுள்களுக்கும் விசேஷ சம்பந்தமிருக்கிறது. ஐந்திணை எனத் தமிழர் வகுத்துள்ளதை நாம்

கவனிக்க வேண்டும். பஞ்சக்ஷிதி என்று இருக்கு வேதத்தில் இதுதான் கூறப்பட்டு இருக்கிறது. இதை ஐந்து கூட்டத்தினர் என்று மாக்ஸ்முல்லர் முதலியவர்கள் பொருள்படுத்தியுள்ளார்கள். தமிழில் ஐந்திணை வகுத்ததற்கும் பஞ்சக்ஷிதிக்கும் சம்பந்தமுண்டா என்பதை ஆராய்ச்சியாளர் கண்டுகொள்க. தொல்காப்பியர், அகத்தியர் ஆகிய இருவரது கூற்றை உற்று நோக்கினாலும், வைதிக மதமே நம் மதம் என்பது தெரிய வருகின்றது.

மரங்களைப் போற்றும் வழக்கமும் தமிழருக்கும் வைதிகருக்கும் பொதுவானது. இவ்வாறே பல முக்கிய வழிபாடுகளில் வடமொழிச் சாத்திரங்களும், தமிழ் நூல்களும் ஒத்திருக்கின்றன. தமிழர்தம் சமயம் வைதிக மார்க்கத்தைத் தழுவியதாகவே யிருக்கிறது.

துர்க்காதேவி வணக்கம் மிகவும் பயங்கரமா யிருக்கின்றது. தலையரிந்து பலியிடுதலும், பகைவர் உதிரத்தில் அடிசிலைத் தோய்த்துத் தேவிக்கு நிவேதனம் செய்தலும் இங்கு வழக்கமாக இருந்திருக்கின்றன. 'மனத்திற் கொண்டதை அல்லால் கடவுளுக்கு வேறு வடிவம் இல்லை,' என்று பரிபாடலில் கூறப்பட்டிருக்கின்றது. இதைக் கவனித்தால் தேவியின் உருவம் செய்து பலியிடும் வழக்கத்தோடு, சாத்துவீகமானதும் உயர்தரமானதுமான ஒரு தத்துவம் இருந்ததென்பதும் புலனாகிறது. துவசத்தைக் கும்பிடும் வழக்கமும், தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களிலும் காணக்கிடக்கின்றது. இதனூடே மகா சாத்துவீகமான மார்க்கமும் இங்கு இருந்திருக்கிறது. இந்த உண்மையையும் பழைய நூல்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த உயர்தர நிலையில் சமய உணர்ச்சி பண்டைக்காலத்தே இருந்தது. மேற்சொல்லிய கடவுள்களின் வழிபாடும், மற்றும் முருகன், மாயோன், இந்திரன், வருணன் முதலிய கடவுள்களின் வழிபாடும் இருந்தன என்பது தொல்காப்பியத்தால் நன்குணரக் கிடக்கின்றது

---

# 6. பிருதிவி ராஜன்

## (ஒரு நாடகம்)

### திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

[திரு. நமச்சிவாய முதலியார் அவர்கள் வட ஆற்காடு ஜில்லாவைச் சார்ந்த காவேரிப்பாக்கம் என்ற சிற்றூரில், 1876-ஆம் ஆண்டில், வேளாண் மரபில், இராமசாமி முதலியார் அவர்களுக்கும் அகிலாண்ட வல்லி அம்மையாருக்கும் புதல்வராய்த் தோன்றினர். திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றார். முதலில் ஓர் ஆரம்பப்பள்ளியில் ஆசிரியராய் இருந்து தம்து உழைப்பாலும், ஊக்கத்தாலும் மேன்மேலும் உயர்ந்து, மேரி இராணியார் கல்லூரியில் தமிழ்ப் பேராசியராக விளங்கினர். அன்றியும் இவர் நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும், பத்திரிகாசிரியராகவும் இருந்து, தமிழுக்கும் தமிழுலகிற்கும் சிறந்த தொண்டாற்றினர். இவருடைய நூல்களில் பிருதிவிராஜன், கீசகன் எனும் இரண்டு நாடகங்களும் குறிப்பிடற்குரியவை. இவர் 61 ஆண்டுகள் வாழ்ந்து 1937-ஆம் ஆண்டில் இறைவன் அடியெய்தினர்.]

முன்கதைச் சுருக்கம்

[டெல்லியைத் தலைநகராகக்கொண்டு, இராஜபுதனத்தின் ஒரு பகுதியைப் பிருதிவிராஜன் ஆண்டுவருகின்றான். பிருதிவி சிறந்த வீரன். அதேசமயத்தில் கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு இராஜபுதனத்தின் பிறிதொரு பகுதியை ஆண்டுவருபவன் ஜயசந்தன் என்னும் அரசன். இருவரும் உறவின்முறையால் தொடர்புடையவரானாலும், அவர்களிடையே நீண்டநாளாய்த் தீராப்பகை இருந்துவருகிறது. ஜயசந்தனுக்குச் சம்யுக்தை என்றொரு பெண் உண்டு. மணப்பருவமடைந்த சம்யுக்தைக்குச் சுயம்வரம் நடக்கிறது. பிருதிவியின்மீது காதல்கொண்டிருந்த சம்யுக்தை, வாயிலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிருதிவியின் உருவச்சிலைக்கு மாலை இடுகின்றாள். பக்கத்தே மறைந்திருந்த பிருதிவி, சம்யுக்தையைத் தூக்கிக் குதிரைமீது வைத்துக்கொண்டு செல்லுகின்றான் அவனுக்

கும், ஜயசந்தனுக்கும் போர் மூளுகின்றது. முன்பு ஆறு முறைகள் பிருதிவியிடம் தோற்றோடிய முகம்மதிய மன்னனை கோரியைத் துணைகொண்டு ஜயசந்தன், பிருதிவியின்மீது போர் தொடுக்க வருகின்றான். பிருதிவியின் மைத்துனனான சமரசிங்கனும், சம்யுக்தைக்குச் சகோதர முறையினனான (கன்னோசியிலிருந்து சம்யுக்தையோடு கூடவே டெல்லி வந்த) மதனனும் பிருதிவிக்குத் தெரியாமல், ஜயசந்தனிடம் பேசி இப்போர் நடக்க வொட்டாது தடுத்துச் சமாதானம் செய்யும் எண்ணத்துடன், இரவில் ஜயசந்தனுடைய பாசறைக்குச் செல்லுகின்றனர்.]

## ஐந்தாம் அங்கம்—முதற்களம்

இடம்: போர்க்களத்தில் ஒரு புறம்
காலம்: முன் இரவு
பாத்திரங்கள்: ஜயசந்தன், மதனன், சமரசிங்கன்

(ஜயசந்தன் தனியே இருந்து யோசிக்கின்றான்.)

**ஜயசந்தன்**—ஆமாம், நாளை யுத்தம் நடக்கிறது—**கோரி**யோ குறைவற்ற படைகள் கொண்டு வந்திருக்கிறான். நமது நண்பரெல்லாம் வந்திருக்கின்றனர்.—(மேஜை மீதுள்ள படையணி வகுப்புப் படத்தைப் பார்த்து) சரி, கோரியின் படைகளே முன் நிற்கின்றன. மற்றைய மன்னர் தம் படைகளை வலத்திலும் இடத்திலும் வகுத்திருக்கின்றனர். நம்முடைய படைகள் பின்னால் அமைந்திருக்கின்றனவோ — எல்லோரும் சேர்ந்து சரக்கூடம் கட்டியதுபோல் இணைந்திருக்கின்றனர். இப்போதுள்ள அமைப்பில் நமது படைகளுக்கு அணுவளவும் அச்சம் இல்லை; வெற்றி நமதே. (யோசிக்கிறான்) முன்னமே கோரி அப்படி எண்ணியிருக்கிறான். ஆயினும், நமக்குமேல் அவன் கை ஓங்குமா—மற்றைய வேந்தர் அனைவரும் நமது சார்பில் இருக்கின்றனர். அந்த வஞ்சகன் விராடன் ஒருவனே அவனோடு சேர்ந்திருக்கிறான்.

அவர்களுக்குள் ஏதோ சூழ்ச்சி இருக்கும்போல் காண்கிறது. அவர்கள் இருவரும் ஒன்றுகூடி நம்மை எதிர்த்தலும் கூடும். இவ்வளவு சிரமமும் என்னாகும். அந்தப் பிருதிவி—ஐயோ ஸம்யுக்தா! இத்தீங்கை உனக்கேயன்றோ இழைக்கின்றேன். எல்லாம் கைகூடிவரினும் எனக்கென்ன இருக்கிறது. நான் இருப்பதோ இன்னும் சிலநாள். என் கண்மணி, ஸம்யுக்தா! நான் வெற்றிகொண்டால் உன் விதி என்னுவது—உன்னை இழந்தபின் இவ்வுலகில் எனக்கு என்ன இருக்கிறது!—நமது சுகத்தைப் பற்றியா யோசனை. வத்சன், ஹர்ஷவர்த்தனன், போஜன் முதலிய முன்னோர் வைத்திருந்த நிலைக்கு இக்கன்னோசியைக் கொண்டுவர வேண்டுமென்பது நமது விரதமன்றோ! அதை மறந்து இப்படியும் மனம் உடையலாமோ! இது நமது வீரத்தன்மைக்கு அழகோ! யுத்த களத்தில் வந்தும் யோசனையா. போதும் என்ற மனம் புரவலர்க்குக் கூடாதன்றோ! மானிடன் பொருள் தேடுங்காலத்தும், கல்வி கற்கும் காலத்தும் மரணம் உண்டென்பதை மனங்கொள்ளல் ஆகாது. அவற்றை நல்வழியிற் செலவிடுகையில் அம்மரணம் தலைக்குமேல் இருப்பதென்பதை மறத்தலும் ஆகாது—(யோசிக்கின்றான்) ஆம், நமது எண்ணம்போல் எல்லாம் இப்போது கைகூடி வரினும், நமது ஸ்ம்யுக்தை—என்ன இது, இந்த வாஞ்சை இப்படி வருத்துகின்றது!

[போர்வீரன் ஒருவன் வருகிறான்.]

**போர்வீரன்**—ஆண்டவரே! யாரோ இருவர் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்.

**ஜயசந்தன்**—யாரவர்கள்?

**போர்வீரன்**—யாரோ தெரியவில்லை.

**ஜயசந்தன்**—ஆயுதபாணிகளாக இருக்கிறார்களா?

**போர்வீரன்**—இல்லை, உடைவாள்மட்டும் தரித்திருக்கிறார்கள்.

**ஜயசந்தன்**—சரி, வரட்டும். (சமரசிங்கனும் மதனனும் பிரவேசிக்கின்றனர்) ஓஹோ! வாரும் சமரசிங்கரே! சந்தோஷம், அமரும். மதன்மோஹன் சிங்கரோ அவர்! வாருங்கள், எதிர்பாராத கௌரவம் எனக்கு இன்று நேர்ந்தது. நீங்களும் அமருங்கள்.

**மதனன்**—அண்ணா! என் வார்த்தையைச் சற்று யோசிக்க வேண்டும்; அது என் மூலமாக என் வாயினின்றும் வருகிறதென்பதை எண்ணலாகாது.

**ஜயசந்தன்**—இருக்கட்டும், விஷயமென்ன வெளியிடும். உமது வார்த்தையைக் கவனிக்காமலா!

**மதனன்**—கோபங்கொண்டால், குறைகுணந் தோன்றாது.

**ஜயசந்தன்**—இனி உம்மிடந்தான் குறைகுணம் தெரிந்து கொள்ளவேண்டும்! வியாக்கியானம் வேண்டாம், விஷயத்தைச் சொல்லும்.

**மதனன்**—விஷயம் தங்களுக்குத் தெரியாததா. நாங்கள் வந்தபோதே தங்களுக்கு விளங்கியிருக்கும்; யார் முகத்தைப் பாராவிடினும் தமது புத்திரியின் முகத்தைப் பார்க்கவேண்டும். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்,' என்பது தாங்கள் அறியாதது அன்று. தாய்க்குப் பின் ஸம்யுக்தையைப் பாராட்டிய அருமையை நான் தங்களுக்கு உணர்த்தவும் வேண்டுமோ. அண்ணா! உமது மார்பையும், கையையும் பார்த்தால் அவளை வளர்த்த அருமை தோன்றவில்லையா? ஐயோ, ஸம்யுக்தையின் உத்தம குணங்களை உன்னிப்பாரும். ஓர் அற்ப குற்றத்தின் பொருட்டு அவளை வெறுக்கலாமோ. குற்றமா அது, சுயம்வரம் என்னும் சொல்லின் பொருளை யோசித்தால், ஸம்யுக்தை செய்தது சரியென்று தோன்றவில்லையா.

**ஜயசந்தன்**—தோன்றத்தான் வேண்டும்; அதன் பொருட்டு என்ன வேண்டுகிறீர்?

**மதனன்**—வேண்டுவதென்ன—உமது அருள்தான் அண்ணா!

அருளெனப் படுவது அணைத்துப் பிடித்து
ஒருவனுள் ளத்தில் ஒடுக்குவ தன்றாம் ;
கருணையாற் பெய்யும் கார்முகில் போலப்
பெருகும் அவ்வருள், பெற்றார் தமக்கும்
ஈந்தார் தமக்கும் இன்பமே பயக்கும் ;
ஏந்து மிதற்கிங் கிணையு முண்டோ !
ஆற்றல் மிகுந்துல காள்வதும் அருளே !
மாற்றலர் தமையும் வணக்குவ தருளே !
மன்னர் சூடும் மகுடந் தன்னினும்
நன்னெறி யான நலத்ததும் அருளே !
அவனியில் உயர்ந்த அதிகா ரத்தை
நவமுறக் காட்டி, நயமும் பயமும்
தந்தே மற்றைத் தார்வேந் தரையும்
வந்ததோர் பயத்தால் வணங்கச் செய்யும்
சிறப்பினை யுடையது செங்கோ லெனினும்,
திறப்படு மந்தச் செங்கோல் நிலையிலும்
அடைவிற் சிறந்த தருளே யாகும் :
அதுதான்,
இறைவர்தம் மனத்துள் இருந்தர சாள்வது ;
நிறைபரம் பொருட்கே நேருற நிற்பது ;
இவ்வருள் நீதியோ டிணைந்திணைந் திருப்பின்
செவ்விய இறைவன் திருவரு ளாமால்.
என்னும் உண்மை தாங்கள் உணராததன்றே !

**ஜயசந்தன்**—ஆமாம், அதற்காக என்ன செய்யவேண்டும் என்கிறீர் ?

**மதனன்**—என்ன செய்வது, இந்த யுத்தம் எப்படியாவது தடைபட வேண்டும்.

**ஜயசந்தன்**—தடைபடுவதாவது—முன்வைத்த காலைப் பின் வைப்பதெப்படி ? ஏன், உங்களுக்கென்ன; இந்தச் சமரசிங்கர் ஒருவர் போதாதா; அவரோடு நீரும் இருக்கிறீர் !

**சமரசிங்கன்**—இருக்கிறோம், இல்லாமல் எங்கே போகிறோம். அச்சத்தினால் வந்தோம் என்று நினைக்கவேண்டாம்; அது ஒருகாலும் இல்லை. யாங்கள் வந்தது பிருதிவிக்குத் தெரிந்தால் என்னாகுமோ! நாம் ஒருவரோடொருவர் அமராடுவதில் ஆக்ஷேபமில்லை. நீர் அந்நியனை அநுசரித்து வந்ததொன்றே அனைவர்க்கும் அவமானத்தை விளைவிக்கின்றது. ஜயசந்தரே!

பகைமையால் நீதி தப்பிப்
பழியினை நினைந்தி டாமல்
தகைமையில் மாற்றான் தன்னைச்
சார்பெனக் கொண்டீர்: முன்னால்
வகையிலா திரண்டு பூனை
வானரந் தன்னை நம்பி
நகையுறப் பொரு ளிழந்த
நற்கதை யறிந்தி லீரோ.

**மதனன்**—அவனோடு சேர்ந்தால் அப்படித்தான் ஆகும். இந்தப் புறமானால் பெண்ணாயிற்று, மருகனாயிற்று. பிதா ஆண்டால் என்ன, பெண் ஆண்டால் என்ன.

**ஜயசந்தன்**—மதனா! என்ன சொன்னாய், அவ்வளவு அலக்ஷியமாகப் போயிற்றா? என் நாட்டையாவது அப்பிருதிவி ஆள்வதாவது. கூடாது, போய்வாருங்கள்; சமர்க்களத்தில் சந்திக்கலாம்.

**சமரசிங்கன்**—ஆஹா, அப்படியே பார்ப்போம்.

**மதனன்**—(திரும்பி) 'கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே,' என்பது பொய்க்குமா.

(அனைவரும் போகின்றனர்.)

---

# 7. பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்

## இராவ்சாகிப். மு. இராகவையங்கார் அவர்கள்

[திரு. இராகவையங்கார் அவர்கள் இராமநாதபுரத்தில், 1878-ஆம் ஆண்டில், வைணவ மரபில் தோன்றியவர். இவர்தம் தந்தையார் பெயர் சதாவதானம் முத்துஸ்வாமி ஐயங்கார் என்பது. இளமையிலேயே தமிழைக் கற்றுச் சிறந்த புலவரானார். 1901-ஆம் ஆண்டில் திரு. பாஸ்கர சேதுபதி அவர்களால் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டு, 'செந்தமிழ்' என்ற திங்கள் வெளியீடு அதன் வாயிலாக வெளிவரத் தொடங்கிய அக்காலத்திலேயே, இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புகொண்டு, 8-ஆண்டுகள் ஆசிரியராயிருந்து 'செந்தமிழை' நடத்திவந்தார். பின்னர், 1913-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தால் தொடங்கப்பட்ட அகராதிக் குழுவின் தலைவராயிருந்து, பல ஆண்டுகள் உழைத்து, தமிழ் 'லெக்ஸிகன்' என்னும் அகராதித் தொகுதியை வெளியிடத் துணை புரிந்தார். சிறிதுகாலம் 'தமிழர் நேசன்' என்ற பத்திரிகையின் கௌரவ ஆசிரியராயுமிருந்தார். இவர் வேளிர்வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, சேரன் செங்குட்டுவன் முதலிய ஆராய்ச்சி நூல்களை இயற்றியும், நரி விருத்தம், சிதம்பரப் பாட்டியல் முதலிய நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். இரண்டு ஆண்டுகட்கு முன் ஓய்வு பெற்று, இப்பொழுது சென்னையில் வசித்து வருகிறார்.]

இப்போது நம் தேசத்தார் மனத்தில் உதித்துவரும் 'தேசீய உணர்ச்சி' யானது, முக்கியமாகக் கைத்தொழில்களாலும், வியாபாரத்தாலும் இந்தியாவின் பொருளாதார நிலைமையை விருத்திசெய்தலைப் பற்றியதாவே உள்ளது. இத்தகைய உயர்ந்த உணர்ச்சியும், அதன் மூலம் முயற்சியும் புதியனவா யுண்டா யிருப்பதற்குச் சிறந்த காரணம், நம் நாட்டார் உலகியல்களை முன்னினும் அதிகமாகத் தெரிந்து வருதலேயாம். இது நற்காலத்தின் அறிகுறி என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இக் காலத்துச் சீர்கேடான நிலைமையை மாற்றுதற்குத் தேசீய முயற்சி தக்க கருவியாதலால், அது பெரிதும் வேண்டப்படுவதேயாம். ஆனல், முன்னளிலே நம்மவர்க்குப் பொருளாதார நிலைமையைப் பற்றிய கவலையேனும், அதன் மூலம் இத்தகைய முயற்சிகளேனும் நெருக்கடியாக நேரிட்டனவல்ல. அந்நிய வியாபாரிகளால் இந்தியக் கைத்தொழில் வியாபாரங்கட்கு எவ்வித இழுக்கும் அப்போது நிகழ்ந்ததில்லை. நாட்டில் விளைந்த இயற்கைப் பொருள்களில் வேண்டியவளவு இங்கேயே செயற்கைப் பொருள்களாக மாறி உபயோகிக்கப்பட்டன. அவை இங்குமட்டுமல்ல அந்நிய வியாபாரிகளால் தேசாந்தரங்கட்கு மிகுதியாக 'ஏற்றுமதி' செய்யப்பெற்றும் பெரு லாபம் தந்தன. இச் செய்திகளெல்லாம் இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முன் இந்தியாவுக்கு வந்து சென்ற அந்நியர்களுள் பிளினி, டாலமி, பெரிப்ளுஸ், ஸட்ராபோ—முதலிய யவனசிரியர்கள் எழுதியுள்ள சரித்திரக் குறிப்புக்களால் வெளியாகின்றன.

அந்நியர் எழுத்துக்களைக் கொண்டு நம் நாட்டின் பூர்வ நிலையை ஆராய்வதிற் பல அரிய செய்திகள் தெரியக் கூடுமாயினும், அவ்வாராய்ச்சி மிக நீளுவதோடு, தக்க அறிஞரால் முன்னரே வெளியிடப்பட்டிருத்தலால் மிகையுமாகும். ஆதலால், தமிழ்நாடு சம்பந்தப்பட்டமட்டில், முற்காலத்தே நிகழ்ந்த கைத்தொழில் வியாபாரப் பெருமைகளாகத் தமிழ் முன்னூல்களால் தெரியவருவனவற்றை மட்டும் இங்கு எழுதுவோம்.

"புண்ணிய பூமி" என்று கருதப்படும் இவ் விந்தியாவுக்குப் பரதகண்டம், பாரதவர்ஷம் முதலிய் பெயர்கள் முன்னுள் முதல் வழங்குவதுபோலவே, இதற்குக் "கர்மபூமி" என்னும் பெயர் வழக்கும் உண்டு. "கர்மபூமி" என்ற தொடர்க்கு, "உயர்ந்த தொழில்களையே செய்தற்குரிய பூமி" என்பதே முன்னோர் கருத்து என்க. முன்னோரான செந்தமிழ் மக்கள் இக்கருத்தையே தழுவிக்கொண்டவர் என்பது, பண்டை நிகண்டு நூலியற்றிய திவாகரமுடையார்,

"உழவு தொழிலே வரைவு வாணிபம்
வித்தை சிற்பமென் றித்திறத் தறுதொழில்
கற்கும் நடையது கருமபூமி"

எனக் கூறுதலால் நன்கறியலாகும்.

இனி, இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே, உழவும் வாணிபமுமே தலைசிறந்தன என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரண்டு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாததாகும். இவற்றுள், உழவின் பெருமை வேண்டிய வளவு தமிழ் நூல்களிற் காணலாமாதலால், எடுத்துக் கொண்ட பழைய கைத்தொழில் வியாபாரச் சிறப்புக்களை மட்டும் இங்கே கூறுவோம்.

தமிழ் மக்கள், பண்டைக் காலத்தே அந்நிய நாடுகளிலும் உண்ணாடுகளிலும் தங்கள் வாணிப நிலையைப் பெருக்கி வந்தார்கள். வெளி நாடுகளுடன், இவர்கள் முக்கியமாகச் செய்து போந்த வியாபாரம் துணி, மணி, மிளகு முதலியனவாம். நம் நாட்டில் நெய்யப்பட்ட துணிகள் மிகப் பழங்காலத்தேயே அந்நியரால் பேராச்சரியத்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இற்றைக்கு 2400 வருஷங்கட்கு முன்பிருந்தவரும், "சரித்திர ஆசிரியர்க் கெல்லாந் தக்பபன்" என்று புகழப்படுபவருமாகிய "ஹெரடோடஸ்" என்னும் யவனாசிரியர் நமது பஞ்சைப்பற்றிப் பேசும்போது, "அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் உரோமம்" என்றும், "அஃது ஆட்டு ரோமங்களால் உண்டாகும் கம்பளிகளினும் விசேடமானது" என்றும் கூறுகின்றார்.

இத் துணி நெய்தற்றொழில், இலக்கியங்களில், "காருகவினை" என்று கூறப்படும். தத்தம் கிருகங்களில் இருந்து கொண்டே செய்து வந்த தொழிலாதலின் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே, தத்தம் கிருகங்களிலேயே அருமையான ஆடை வகைகள் நெய்வதற்கு வேண்டிய நுண்ணிய நூலிழைகள் முழுதும் பெண்பாலரால் நூற்கப் பட்டுவந்தன என்பதற்குப் பற்பல மேற்கோள்கள் தமிழிற்

காணலாம். முன்னாளில் இவ்வருமையான துணிகளுடன், மிளகு, தந்தம், முத்து முதலிய இயற்கைப் பொருள் களையும் வாங்கிச் செல்லும் பொருட்டு, காவிரிப்பூம் பட்டினம், முசிரி, தொண்டி முதலிய கடற்கரைப்பட்டி னங்களில் யவன வியாபாரிகள் தங்கள் கப்பல்களுடன் மிகுதியாக இறங்கிவந்தனர். இவ் யவனர் தம் நாடுகளி லிருந்து இங்கு 'இறக்குமதி' செய்த பொருள்கள், முக்கிய மாகக் கண்ணாடி, உயர்ந்த மது, பித்தளை முதலியனவாம். இவற்றுள் மதுவாகிய சாராயம், தமிழ்ப் பேரரசராலும் அக்காலத்து விரும்பி உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு தமிழ்நாட்டில் மலிந்திருந்த யவனர் என்பவர் கிரேக்கம் அரபியா எகிப்து, முதலிய மேனாடுகளிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்க யவனர் இங்கு வந்து வியா பாரஞ் செய்தவராயினும், சங்க நாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவனராவர். தமிழர் கூறும் பதினெண் தேயங்களுள் ஒன் றான சோனகம் என்பது, பரதகண்டத்துக்கு மேல்பா லுள்ள நாடுகளிலொன்று என்று சொல்லப்படுதலால், அஃது அரபியாஎன்னும் தேசமாகக் கருதப்படுகின்றது.

இனி, பரத கண்டத்தேயுள்ள மற்ற நாட்டுத் தொழி லாளரில் திறமை வாய்ந்த பலர், தமிழ் மக்களால் மிகவும் அபிமானிக்கப்பெற்றுத் தமிழ்த் தொழிலாளிகளுடன் கூடித்தங்கள் தொழிற்றிறமைகளைக் காட்டிவந்தனர். இது,

"மகத வினைஞரும் மராடக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை."

என்னும் மணிமேகலையடிகளால் தெளியப்படும். இவரது தொழில்களேயன்றி, கூர்ச்சரச் சிற்ப வேலையும், கோசல நாட்டு ஓவிய வேலையும், வற்ச நாட்டுக் கம்ம வேலை யும், பிறவும் தமிழராற் பாராட்டப்பட்டன. இவ்வாறு பூர் விகர் பலவகைப்பட்ட கைத்தொழில்களிலும் பயிற்சி பெற

றிருந்ததோடு, கரும்பாலைகளிலே விசேடக்கவலை செலுத்தியும், மிளகு வியாபாரத்தைப் பெருக்கியும், பல்வகைக் கள்ளுச் சமைத்தும், வெள் உப்பு உண்டாக்கியும், வியாபாரஞ் செய்து பேரூதிய மடைந்து வந்தார்களென்பது முன்னூல்களால் தெளிவாகின்றது.

இவ்வாறு இயற்கையும் செயற்கையுமான பண்டங்களைக் கொண்டு வியாபாரஞ்செய்து பெரும்பொருள்படைத்த வணிகரைத் தமிழரசர் பெரிதும் அபிமானித்து வந்தனர். வாணிபத்தாற் செல்வமும் புகழும் சிறக்கப் படைத்த வணிகர்க்கு, அரசன் "எட்டி" என்னும் அரும்பட்டமும் அதற்கடையாளமான பொற்பூவும் புரவும் அளித்து, அவரை ஊக்குதல் பண்டை மரபாக இருந்தது.

பழையகாலத்தே, தமிழ்மக்கள் கப்பல்செய் தொழிலினும் வல்லவராயிருந்தனர். "கலஞ் செய் கம்மியர்," "கலம்புணர் மாக்கள்" எனவரும் மணிமேகலைத் தொடர்களால் இஃது உணரப்படும். கப்பல்கள் நடுக்கடலிற் சென்று திரியுங் காலத்தே, திசை தடுமாறாது கரைசேர்தற்கு அநுகூலமாக, சோணாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலும், தொண்டை நாட்டு நீர்ப்பெயர்த்தெல்லையில் இருந்த கடற்கரைப் பட்டினத்திலும் (மாமல்லபுரம்) 'கலங்கரை விளக்கங்கள்' அமைக்கப்பட்டிருந்தன என்பது சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையினும், பெரும்பாணாற்றுப் படையினும் காணலாம். இதனால் பழையோரது நாகரிகம் இத்தன்மைத்து என்பது நன்கு விளங்கக்கூடியது.

உள் நாடுகளிலே, வணிகரின் பெருஞ்சாத்து ஓரிடத்திருந்து மற்றோரிடத்துக்குத் தங்கள் பண்டங்களைக் கொண்டு செல்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் முற்காலத்தே அரசர்களால் அமைக்கப்பட்டிருந்தன. பெருங்காட்டு வழிகளிலே முக்கியமான ஊர்களிலெல்லாம் காவற்படைகள் வைக்கப்பட்டு, வழிபோக்கர்க்கும் வணிகர்க்கும் திருடர் முதலியவராற் சிறிதும் கேடு வராதபடி பாதுகாக்கப்பட்டன என்பதும், அப்படைகளின் செலவுக்காக,

அவ்வவ்விடங்களிலே சுங்கச் சாலைகள் அரசனாணையால் அமைந்திருந்தன என்பதும் பண்டைய நூல்களால் அறியப்படுகின்றது.

இனி, பண்டைத் தமிழ்மக்கள் தம் நாடு விட்டு அந்நிய நாடுகட்குச் சென்றும் பொருள்திரட்டி வந்தார்கள். சுமத்ரா, ஜாவா, மலேயா முதலிய தீபங்களிலும் தீபகற்பங்களிலும் முற்காலத்தே நம்மவர் குடியேறி, அரசுமுறை நாட்டியும் வர்த்தகம் செய்தும் வந்த செய்தி மணிமேகலை நூலைத் துருவி யாராய்வார்க்குப் புலப்படத் தக்கது. அவற்றுள் சாவா என்பது "சாவக நாடு" என இலக்கியத்துக் காணப்படும்.

இவ்வாறு, பண்டைக் காலத்தே தமிழ் மக்களின் ஊக்கமும் உழைப்பும் பலவழிகளிலுஞ் சென்று, நாட்டிற்குப் பெரும் பயனளித்துவந்தன. அந்நிலைமை நம்காலத்தே முழுதும் மாறியதற்கு இரங்காதார் யாவர்? அப்பழைய மேம்பாட்டை அடைவதற்கு நம்மவர் ஒவ்வொருவரும் பெருமுயற்சி எடுத்தல் இன்றியமையாததாகும்.

> "உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
> தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"

என்ற திருவாக்கின்படி நம் எண்ணங்களும் செயல்களும் மேன்மையுடையனவாகுக. நல்லறிஞர்கள் முன் வந்து நம்மவர்க்கு நல்வழி காட்டுவார்களாக. தளராத உறுதியுடன் நின்று, அவ்வழிகளை நாம் பின்பற்றி ஒழுகுவோமாயின், "உழவு தொழிலே வரைவு வாணிபம் வித்தை சிற்பம்" என்னும் அறுதொழிலும் நிரம்பி, நம்தேசம் 'கர்மபூமி' என்னுந் தன் பழம்பெயரோடு விளங்க ஐயமுண்டா?

# 8. கோயிலும் குறிகளும்

## திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்

[திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சென்னையில், 1888-ஆம் ஆண்டில், சோ. சபாபதிப் பிள்ளை அவர்களுக்கும் மீனாட்சியம்மையார்க்கும் புதல்வராய்த் தோன்றினார் இவர் சைவத் தமிழர். சென்னை வெஸ்லி கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று B. A. பட்டம் பெற்றார். பின்னர் ஆசிரியக் கல்லூரியிற் பயின்று L. T. பட்டமும் பெற்றார். இவர்தம் தமிழாசிரியர்கள் உ. வே. சே. கிருஷ்ணமாச்சாரியார்; திருமணம் செல்வகேசவராய முதலியார் ஆகியோராவர். இவர் இப்பொழுது ஜில்லாக் கல்வி அதிகாரியாக இருந்து வருகிறார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவைகளின் தமிழ்க்குழுவின் உறுப்பினராக இருக்கின்றார். ஓராண்டு சைவப் பெரியார் தனிக் கூட்டத்தின் தலைவராயிருந்தார். சைவ சித்தாந்த மாநாடுகள் பலவற்றிற்குத் தலைமை வகித்துள்ளார். அவ்வப்போது தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதிய கட்டுரைகள் போக, சைவ சமயத்தின் தற்கால நிலை, சிவ சின்னங்களணிவதேன்? என்ற நூல்களையும் எழுதியுள்ளார். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த "ஸ்ரீமத் குமார சாமியம்" என்ற நூலின் முதற் காண்டத்திற்குச் சிறந்ததோர் உரையும் வரைந்துள்ளார்.]

"கோயில்" என்பது, கோ + இல் எனப் பிரிந்து இறைவன் உறைவிடம் என்னும் பொருள் தரும். இவ்விறைவன் மண்ணாளு மன்னவனுயினு மாகலாம். "மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்" என்றவிடத்து, 'கோயில்' அரசன் அரண்மனையைக் குறித்தமை காண்க. நாளடைவில் இச்சொல் அரசரில்லத்தைக் குறிக்கும் வழக்காற்றலை இழந்து, ஆண்டவன் ஆலயத்தை மட்டும் குறிப்பதாயிற்று.

இறைவனுக்குக் கோயில் அமைத்தல் மிகவும் தொன்மையான ஏற்பாடேயாம் இறந்தொழிந்த பெரு மதங்கள் சுமார் பத்தென மதிக்கலாம். அவை, பெரு, மெக்சிகோ, ஆப்ரிக்கா, மெசொபொடோமியா, எகிப்து, கிரீசு, உரோம், பாரசீகம் என்னும் இடங்களில் நின்று நிலவி மறைந்துபோனவை. இப்போது உயிரோடுள்ள பெருஞ் சமயங்களையும் பத்தெனக் கணிக்கலாம். இவற்றை, ஹிந்து சமயம், யூத மதம், ஜோராஸ்திரிய மதம், ஷிண்டோ மதம், டேவோ மதம், ஜைன மதம், புத்த மதம், கன்பியூசிய மதம், கிறிஸ்துவ மதம், முகம்மதிய மதம் என்று இவை தோன்றிய காலமுறையையொட்டி வரிசைப் படுத்தலாம். இவற்றுள் முகம்மதியம் கி. பி. 7-ஆம் நூற்றில் தோன்றிய தாதலால், ஆண்டில் மிக இளையது. 1941-வருடங்கட்கு முன் பிறந்த கிறிஸ்துவம் இதற்கு நேர் மூத்தது. மற்றவை யெல்லாம் இற்றைக்குச் சுமார் 2500-ஆண்டுகட்கு முற் பட்டவையே. இறைவனை வழிபடும் இடங்கள் என்னும் பொருளில் மேற்குறித்த எல்லா மதங்கட்கும் கோயில்கள் உண்டு. அவற்றின் அமைப்பு, காலத்திற்கும் இடத்திற்கும் மக்கள் நாகரிக வளர்ச்சி யளவிற்கும் ஏற்ப வெவ்வேறாய் வளர்ந்து வந்துள்ளது.

இங்ஙனம் தொன்றுதொட்டே உலகெங்கும் கோயில் கள் இருந்து வருவதற்குக் காரணம், சமய உணர்ச்சி மக்களிடம் என்ஞான்றும் ஏதோ ஓரளவில் இருந்து வந்ததேயாகும். "அஞ்சியாயினும், அன்புபட்டாயினும், நெஞ்சம்! வாழி, நினை, நின்றியூரை நீ" என்று அறிவுறுத்தி யருளினர் **ஆளுடையபிள்ளையார்.** முதற்கண் அஞ்சி வழிபட்டவரே ஆதிகால மக்கள். தங்கண்ணுக்குப் புலப்படாது நிற்கும் அறிவுடைப் பெருஞ்சத்தியொன்றும், பெரும்பாலும் அதற்கடங்கி நடந்து தம்முட்பொருது கொண்டு இருக்கும் வேறு சிறுசத்திகள் (தேவதைகள்) பலவும் உண்டென்றும், அவையெல்லாம் மக்கள் வாழ்க்கை யிற் கலந்துகொண்டு நன்மையுந் தீமையும் விளைக்கும் தன்

ண்மய என்றும், அவற்றின் தயவைத் தம் வழிபாட்டால் பெற்றாலன்றி, அவை தம்மைத் துன்புறுத்தும் என்றும் அவர்கள் நம்பித் தம் வாழ்க்கையை நடத்தினார்கள். அவர்கள் வழிபட்ட தெய்வங்களுட் பல, ஞாயிறு, திங்கள், வைகறைவானம், தீ, மழை, இடி, காற்று முதலிய இயற்கைப் பொருள்களாம். இவற்றைத் தெய்வங்களாகக் கொண்டு இவற்றின் அருளைப் பெறவேண்டி உயிர்ப்பலியிடுதல் முன்னாளில் பெருவழக்காயிருந்தது. அப்பண்டை மக்கள், தாம் வளர்த்த ஆடு மாடுகளையும், சில சமயங்களில் மனிதனையுங்கூடப் பலியிட்டார்கள். இப்பலிப் பொருளோடு சேர்த்தோ தனித்தோ தாமுண்ணும் மரக்கறியுணவுகளிற் சிலவற்றையும் படைத்ததுண்டு. இப்படி வேள்வி செய்த போது தாம் வழிபடுந் தேவதைகளைப் புகழ்ந்து பாடித் தம் குறைகளை விண்ணப்பித்தனர்.

பெரும்பான்மை கருதிப் பேசுமிடத்து, மேற்சொன்ன உயிர்ப்பலிக் கமைந்த பலிமேடையே முதன்முதல் மனிதன் கடவுளை வழிபட்ட கோயிலாயிருந்தது. இப்பலிமேடை ஒரு கற்பாறையே. இம்மேடை, ஒவ்வோரூரிலும் இயற்கைவளஞ் செறிந்ததோர் பக்கத்தில் செழித்துத் தழைத்த மரத்தடியில் அமைக்கப்பட்டது. கடவுள் அங்கெழுந்தருளித் தம்மை வழிபடுவோர் தரும் பலிகளையும், செய்யுந் தோத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளுகின்றார் என்னும் நம்பிக்கை வலுத்ததும், அப்பாறை இருந்த இடத்திற்கே பெருமதிப் பேற்பட்டுவிட்டது. குறித்த நாட்களில் அம்மேடைக்குச் சென்று பலியிட்டுப் போற்றி வரம் வேண்டும்போது மட்டுமன்றி, அம்மேடையைக் காணநேர்ந்த போதெல்லாம் கடவுளை நினைத்து வணங்கிச் செல்வதும் இயல்பாயிற்று.

நெடுங்காலம் வரையில், இப்பலி மேடையைத் தவிர வேறு கோயில்கள் எவையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பின்பு மனிதன் தன் கருத்துக்களைப் பருப்பொருளாக வெளியிடுதற்கு முயன்றபோது, தான் கண்ட பொருள்

களின் உருவங்களை வரையத் தலைப்பட்டான். சித்திரம் இவ்வாறு தோன்றியது. பின்பு, புறக்கண்ணாற் காணப் பெறாது மனக்கண்ணாற் கண்ட காட்சிகளையும் உருவங்களையும் சித்திரிக்கலானான். நாளடைவில் இவ்வடிவங்களை மண்ணிலும், மரத்திலும், கல்லிலும், பன்னாட்களுக்குப்பின் உலோகங்களிலும், செய்யும் திறமையும் வழக்கும் பெருகின

இப்படிக் கடவுளை வழிபடுதற்கு ஏற்பட்ட பருவுருவங்களைப் பண்டை மனிதன் பலிமேடைக் கெதிரில் எழுந்தருளப் பண்ணினான். இவற்றுள் மிகவும் பழையது, அனற் கொழுந்து வடிவாயுள்ள சிவலிங்கமே என்று கருத இடமுண்டு. எங்ஙன மென்று சிறிது காண்பாம்: ஞாயிறு, திங்கள், தீ முதலிய இயற்கைப் பெரும் பொருள்களைத் தனித்தனி தேவதைகளாய்க் கொண்டு வணங்கிய மக்களில், நாளடைவில் அறிவு பெருக, அருட் சிறந்தோர், அவற்றில் உள்ள நலமும் வலியு மெல்லாம் ஒரே இறைவனுடையன என்று கண்டார்கள். அப்போது அவற்றை இறைவனது மாபெருமேனிகளாக, விளக்க நிலயங்களாக, கருதி வழிபடத் தலைப்பட்டார்கள். அவற்றுள் தீயானது மக்கள் கைக்கெட்டுவதாய், அவர்களால் வளர்க்கக் கூடியதானபோது, அவ்வனற் பிழம்பைச் சிறப்பு வகையில் ஆண்டவன் திருமேனியாகக் கொண்டு போற்றும் வழக்கம் பெருகிற்று. கொற்கைத் தீயானது நெய்யும் விறகுங் கொண்டு ஓம்பப்பட்ட போதன்றித் தோன்றாது. அன்றியும் மனிதன் தன் அன்பின் அறிகுறியாக அவ்வனற் கொழுந்துக்கு நீராடலும் ஆடை சந்த மணிமலர் புனைதலும் இயலாவன்றே? ஆதலின், அவ்வனற் பிழம்புருவத்தைக் கல்லில் அமைத்து வணங்கும் வழக்கம் தோன்றியது. இவ்விலிங்க வழிபாடு பண்டை மெக்ஸிகோ, எகிப்து, அராபியா முதலிய வெளிநாடுகளில் இருந்ததற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. நமது நாட்டில் இப்பண்டை வழிபாடு இமய முதற் குமரி வரையில் இன்றளவும் காணக் கிடக்கின்றது. அறிஞர் இவ்விலிங்கத்தின்கண் தத்துவங் கடந்த தனிமுதற்

பொருள்ளாங் கந்தழிஎ்ய வழிபடுகின்றனர். மற்றையோரிற் பலர் ஒருமரத்தின் கீழ்க் கல்லிலோ மண்ணிலோ இவ்விலிங்க வடிவைச் சமைத்துத் தம்மிஷ்ட தெய்வத்தை அதனில் வருவித்து வணங்குதல் இன்றும் கண்கூடாயுள்ளது. மிகவும் பண்டையதான சிவலிங்க வழிபாட்டுடன், கை கால் முதலிய உறுப்புகள் பொருந்திய பல் வேறு உருவங்களை வைத்துச் செய்யும் வழிபாடுகள் பின்னுளிற் பல்கின இவற்றை விரிப்பிற் பெருகும்.

இவ்வாறெல்லாம் உருவவழிபாடு பெருகிவருகையில், அளப்பரும் பெருமையுடைய ஆண்டவன் வதிதற்குத் தக்க சிறப்பமைந்த கோயில்கள் வேண்டும் என்னும் விருப்பமும் முயற்சியும் உடனே தோன்றின. அரசனில்லத்தினும் பார்க்க ஆண்டவன் உறையுள், சீரினுஞ் சிறப்பினும் விஞ்சி விளங்க வேண்டும் என்னும் ஆர்வம் பெருகிற்று. இவ்வாறு கோயில்கள் உலகெங்கும் தோன்றிப் பெரும் பொலிவோடு நிலவுவவாயின.

கோயில் அமைப்பு வரலாற்றைச் சுருக்கமாகக் குறித்தற்கும் ஒரு கட்டுரை இடந்தராதென்பது தேற்றம். ஆயினும் ஆராய்ச்சியாளர் தரும் கண்கொண்டு காணக் கூடிய பொருள்களில் இரண்டொன்றையேனும் தொகுத்துச் சுட்டாது செல்ல மனம் இசையவில்லை. அவற்றில் ஒன்று சால்டி (Chaldæa) நாட்டுப் பண்டைக் கோயில். இது குறைந்தது 5,000 ஆண்கட்கு முற்பட்டது. மெசொபொடேமியாவில் **மூகோ** என்னும் இடத்தில் உள்ள மண் மேட்டைக்கிளர, இதனமைப்பு அறிஞர்க்குப் புலப்பட்டது. இக்கோயில் சுட்ட செங்கல்லாலாயது. ஒன்றிற்கொன்று பரப்பிற் குறைந்த மேடைகள் ஒன்றின்மேலொன்ருய் அடுக்கியுள்ளன. மூன்ருவது மேடையின் உச்சியில் ஒரே அறையுள்ளது. இதுதான் கோயில். இதற்கெதிரே பலி மேடையாக ஒரு கற்பாறையுள்ளது. கோயில் சுவர்களின் வெளிப்புறத்தில் பளபளப்பான நீலநிற ஏனமல் ஓடுகள் பதிக்கப்பட்டுள. உட்புறத்தில் மரப்பலகைகள் தைத்துள்

ளன. இவற்றில் இடையிடையே நுண்ணிய சிற்ப வேலைகள் செய்த சலவைக் கல்லும் பொன்னும் மணியும் பதிக்கப் பட்டு இருக்கின்றன.

இக் கோயிலில் இருந்த தேவதைக்கு **நன்னார்** என்பது பெயர். கீழிருந்து மேலேறிக் கோயிலை அடைதற்கேற்ற வாறு மேற்சொன்ன மேடைகளின் படிகள் அமைந் துள்ளன.

இனி **எகிப்து** தேசத்தைபற்றிப் படிக்கையில், அங்கும் மிகப் பழையனவான கோயில்கள் இருப்பதை அறி கின்றோம்: அந்நாட்டின் தலை நகராகிய **கெய்ரோவுக்கு** அருகில் உள்ள **கீஜா** என்னும் இடத்தில் **ஸ்பிங்க்ஸ்** கோயில் ஒன்றுள்ளது. இதுவும் வயதில் சுமார் 5000 ஆண்டுகட்குக் குறைந்ததன்று. எகிப்தியக் கோயில்களிலுள்ள தெய் வத்தின் உருவத்தைப் பலரும் எளிதிற் காணவொட்டாத வகையில் அங்கு வழிபடுமுறைகள் அமைக்கப்பட்டனவாம்.

---

# 9. இலக்கியம்

## திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

[மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள மணிமங்கலம் என்ற ஊரில், 1888-ஆம் ஆண்டில், சைவ வேளாள மரபிற் பிறந்தவர். இவர்தம் தந்தையார் பெயர் சுந்தர முதலியார். இவர் இளமையிலே பூவை-கலியாணசுந்தர அடிகள், மறைமலையடிகள் ஆகியவர்களிடம் முறையே தமிழைப் பயின் றார். இவர் சென்னை எஸ். பி. ஜி. உயர்நிலைப்பள்ளி, முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி, பச்சையப்பன் கல்லூரி ஆகியவைகளில் தமிழாசிரியராக இருந்தார். பாடம் போதிப்பதில் மிக்க வல்லுநர். சிறந்த நாவன்மை படைத்தவர். இவர் தமிழ்ப் புலவர் சரித்திரம், பல்பொருள் கட்டுரை முதலியனவும், பாட நூல்கள் பலவும் இயற்றி யுள்ளார்.

இவர் செந்தமிழ்ச்செல்வி, தமிழரசு முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராய் இருந்து, அவைகளைத் திறம்பட நடத்தித் தமிழுக்கும், தமிழ் உலகத்திற்கும் தொண்டாற்றினர். இவர் இளமையிலேயே, 1931 - ஆம் ஆண்டில் இவ்வுலகை நீத்தார்.]

நமது தீவிய செந்தமிழ் வளநாட்டிலே அளவிறந்த புலவர்பெருமக்கள் தோன்றி, அரும்பெருங் கருத்துக்களை யுடைய இனியபாக்களைச் சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பாடிவைத்தனர். அவர் மக்கள் இயல்பை முற்றும் தமது கூரிய சீரிய அறிவால் அறிந்து, கேட்போர் உணர்வு வயப் படுமாறு இனிது சொல்லிய திறன் பெரிதும் பாராட்டற் பாலது. செய்யுட்டிறத்தில் நம் செந்தமிழ் மொழியிலே யாதொரு குறைபாடும் இலது. ஆனல், உரைத்திறத்திலோ எனின், இலக்கியச்செறிவு பொருந்திய நூல்கள் யாதும் இல்லை யென்றே கூறலாம். நாம் உரையைப் பலவகை யானும் வளர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் நமது தமிழ்மொழி, பெருமக்கள் அனைவருக்கும் நன்கு பயன்படுத வாகும். நூலுரைகளாக உள்ள களவியலுரை முதலியன

உரை இலக்கியம் எனச்சொல்லப்படா. ஏனெனின், அவை நூலின் பொருளைக் கூறுகின்றனவன்றி, தாமாகவே ஒன்றைக் கூறுவன அன்மையின் என்பது. இனிப் பிற்காலத்தே தோன்றிய சிற்சில உரைநூல்களுள்ளும் இலக்கியப் பொலிவு வாய்ந்து திகழ்பவை இறப்பவும் சிலவே. ஆதலின், நாம் உரைநூல் செழுமையுற்று வளர்வதற்குப் பெருமுயற்சி செய்தல் வேண்டும். பலதிறப்பட்ட உரை நூல்களைப் புலவர்களைக் கொண்டு எழுதுவித்தல்வேண்டும். பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிடுதலும், உரையை வளர்ப்பதற்குரிய வழிகளுள் ஒன்றாகும். மேனாட்டார் உரை நூல்களில் பெரும்பான்மையன ஆராய்ச்சி நூல்களே. நாம், நமக்கு ஆரமுதம் போலச் சிறந்து விளங்கும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருக்கோவையார், பெரிய புராணம், இராமாயணம் முதலிய நூல்களைப் பல ஆராய்ச்சி முறைகளைக் கொண்டு செவ்விதாக ஆராய்ந்து எழுதுவோமாயின், அவை உரை நூல்களாய் மிளிர்தலோடு ஆராய்ச்சி நூல்களாகவும் சிறக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய ஆராய்ச்சிக்கு உபகாரப்படுமாறு ஆங்கில நன்மக்கள் முறைமையினை மிகுதியுந்தழுவி இலக்கியம் என்னும் பொருள்பற்றி இக் கட்டுரையை எழுதுகின்றோம்.

நாம் நல்லனவற்றைப் பிற மொழிகளினின்றும் எடுத்துக்கொள்வதில் இழுக்கொன்றுமில்லை. அது நம் தொல்லாசிரியர் இட்ட நல்லாணையுமாம் என்பது 'தொகை, வகை, விரி, மொழிபெயர்ப்பு' என் நான்கு வகையாக நூல் செய்தற்பாற்றென அவர் வரையறுத்துக் கூறியதனாலும் தெளியப்படும். இலக்கியம் என்பது யாது என முதற்கண் ஆராய்வோம். இலக்கியம் என்னுஞ் சொல் வடசொல்லின் திரிபாகும். அதற்கு வடமொழியிலே, இலக்கணையால் பொருள் கொள்ளக் கிடப்பது, என்று பொருள். இலக்கணை என்பது கங்கைக் கரையின்கண் வேடச்சேரி என்புழிக் கங்கை வெள்ளத்தை உணர்த்தாது அதன் கரையை உணர்த்துவதாகிய ஒருவகை இலக்கண விதி.

**இலக்கியம் என்பது யாது?** : இது தமிழிலே ஆகுபெயரின்கண் அடங்கும். அவ்வை நூலார் இலக்கணத்திற்குரியப்படுவது இலக்கியம் என்பர். தமிழ் நூலோரும் 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்பர். சைனப் புலவரோ சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய ஐம் பெருங் காப்பியங்களையும் இலக்கியம் என்பர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் பாரதம், இராமாயணம் போல்வன இலக்கியம் என்றனர். உலக வழக்கில் இலக்கியம் என்ற சொல் அந்தாதி, கலம்பகம், கோவை, உலா முதலிய நூல்கட்கெல்லாம் பொதுவாக வழங்கிவருகிறது. செய்யுள் வழக்கு, உலகவழக்கு என்னும் இருவகை வழக்கின் ஆற்றலையும் கூர்ந்து நோக்கி, இலக்கியம் என்பது இன்னதுதானென்று ஒருவாறு துணிவோம்.

நிகண்டு நூல்களையும் இலக்கண நூல்களையும் ஒருவரும் இலக்கியம் என்று கூறுவதைக் காணகிலம். அது போன்றே மருத்துவம், சோதிடம், சாத்திரம் முதலியவற்றையும் இலக்கியம் எனக் கூறலாகாது. ஏனெனின், இவை ஒரு பகுதியாருக்குமட்டும் பயன்படுவன வன்றி, மக்கட் பரப்பிற்கு ஒருங்கே பயன்படுதல் இன்மையின் என்க.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர் இராமாயணம், பாரதம் போல்வன இலக்கியம் என்றதை நோக்குழி, இலக்கியத்தைப்பற்றி அவர் கொண்ட கருத்தும் அதுவேயாதல் துணியப்படும். அங்ஙனமே, எல்லார்க்கும் ஒப்பப் பயன்படுதல் நோக்கியே சமணப் புலவரும் ஐம் பெருங் காப்பியங்களை இலக்கியம் என்று கூறினாராதல் வேண்டும். இக்கருத்தேபற்றி அந்தாதி, கலம்பகம் முதலியனவும் இலக்கியமாவான் செல்லும்.

இதுகாறும் கூறியவாற்றான் இலக்கியம் என்பது முதன் முதல் மன்பதைக்கெல்லாம் பொதுவாகப் பயன் படுதலான பொருளை யுடைத்தாய், இனிய வகையிற் சொல்லப் படுவதாய் இருத்தல் வேண்டும் என்பது

பெற்றும். சிவஞானபோதம் முதலிய சாத்திர நூல்கள் எல்லாம் அரிய பெரிய தத்துவ ஞானத்தைப் புகட்டு மேனும், அவை, நிகண்டு இலக்கணம் முதலிய கருவி நூல்களைக் கற்றுப் புலமை மிக்குப் பிறவிக்கஞ்சி வீடு பேற்றை அவாவி நிற்கும் ஒரு சிலர்க்கன்றி, எல்லார்க்கும் பயன்படாமையினல் இலக்கியம் ஆகா. அவை சாத்திரம் எனவே படும். சாத்திரம் ஒருவகைப் பொருளை ஒரு சாராருக்கு உணர்த்தும் பகுதியிலே முனைந்து நிற்க, இலக்கியம் எல்லார்க்கும் ஒப்பப் பயன்படும் பொருளை, எல்லார் அறிவிற்கும் எட்டுமாறு, இனியவகையில் எடுத்து மொழிவதிலேயே தலைதூக்கி நிற்கும் என வேறுபாடு கண்டு கொள்க.

இலக்கியத்திற்கு மற்றொரு தன்மையும் இன்றியமையாது வேண்டப்படும். அஃதாவது இலக்கியம், சொற்கட்டுச் சிறந்து இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல்வேண்டும். நாம் ஓர் அழகிய ஓவியத்தைக்கண்டு உவகை கூர்கின்றோம். அவ்வுவகை ஏன் நமக்கு உண்டாயிற்று என்று ஆழ்ந்து நினைத்துப் பார்ப்போம். ஓவியம் ஓர் ஒழுங்கில் அமையப்பட்டதாய், எங்கெங்கு எவ்வெவ்வாறு கோடுகள் அல்லது நிறங்கள் பொருந்த வேண்டுமோ அவ்வாறு பொருந்திக் கண்ணைக் கவர்தலின், நமக்கு இன்பவுணர்ச்சி பிறக்கிறது. அது போலவே நல்லிசைப் புலவர் பாடிய ஒரு செய்யுள், எடுத்துக்கொண்ட பொருட்கேற்பச் செஞ்சொற்களால் முறைமையாய்த் தொடுக்கப்பட்டு யாப்பியல் வழுவாது நிற்றலின், நம் உள்ளத்தே இன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. இன்னோரன்ன தன்மையால் இலக்கியம் எனப்பட்டவை யாவும் சொல்லின்பம் பொருளின்பங்களுக்குரிய தன்மைகள் வாய்ந்திருத்தல் வேண்டு மென்பதும் பெறுதும். எனவே, மிகச்சிறந்த பொருளும் செவ்விதாகச் சொல்லப்படாவிடின் அஃது இலக்கியம் எனப் படாது என்பதுபுலப்படும். ஆதலின், இலக்கியம் மன்பதைக் கெல்லாம் ஒப்பப் பயன்படும் பொருளை உடையதாய், சொல்

வகையில் இனியதாய்ச் சொல்வடிவம் முதலியனவற்றாற் சிறந்த இன்பம் பயத்தல் வேண்டும் என்பது துணியப்பட்டன.

இனி, இலக்கியங்களைக் கற்றலால் நமக்கு இன்பம் உண்டாவதற்குக் காரணம் யாதென ஆராய்வோம். இலக்கியம், எல்லா மக்களுக்கும் இன்றியமையாது வேண்டிய உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுகின்றன. அவற்றைப் படிக்குந்தோறும் நமது வாழ்க்கையின் பலபகுதிகளையும் அறிகின்றோம். சீதாப்பிராட்டியார் அசோகவனத்திலே தங்கிப் பன்னெடு நாட்களாகத் துன்பமுற்று இராமபிரானைப்பற்றி யாதொன்றும் அறிய முடியாதவராய், இராமபிரான் தமது இருப்பிடத்தை அறிந்துள்ளாரோ? இல்லையோ? என்றும்; அறிந்தும் பகைவரால் கைப்பற்றப் பட்டமையின் தம்மை மீட்சி செய்தல் தகாதெனக் கருதினாரோ? என்றும்; பலபலவாறு தமது பெண்மைக் கியைந்தவாறு எண்ணியெண்ணி மனம் புண்பட்டு உய்யும்வகை காணாராய் உயிரைத் துறக்கத்துணிந்து, குருக்கத்திக்கொடிக்கருகே செல்லுதலும், அனுமான் இராமபிரான் நாமத்தைச் சொல்லிக்கொண்டு விரைந்து ஓடிச்சென்று, அவரையணுகியபோது, அரக்கர் வஞ்சனைகளை யறிந்த பிராட்டியார் இவ்வாறு வருகின்றவன் அரக்கன்தானோ? அன்றி யாவனோ? என்று முன்னே ஐயுறவு கொண்டு, பின்னர்த் தம் ஆருயிர்க்காதலரின் திருநாமத்தைச் சொல்லினனாதலின் அவன் யாவனாயினும் அந்நிலையில் தம் உயிரைத் தந்த உத்தமன் ஆயினனென உவகை கூர்ந்து, அவனை யார் என வினவுதலானார் என்னும் வாழ்க்கைப் பொருளைக் கல்வியிற் பெரிய கம்பர்,

> அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
> குரக்கினத் தலைவ னேதா னாகுக கொடுமை யாக
> இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
> உருக்கின னுணர்வைத் தந்தா னுயிரிதி னுதவி யுண்டோ?

என்னும் செய்யுளால் நம்முள்ளத்தே நன்குபதியும்வண்ணம் இனிது கூறுதலின், நாம் மகிழ்ச்சியில் துளும்புகின்றோம்.

ஏனெனின், வாழ்க்கையின்கண் கணவனைப் பிரிந்து வருந்தும் மனைவியின் வருத்தம் முதலியன நமக்கு அனுபவ மான பொருள்களாதலின் என்க. இவ்வாறன்றி, உலக வாழ்க்கையிற் காணப்படாத பொருள்களை எத்துணை ஆற்ற லுடன் கூறினும் அவை நமக்கு இன்பம் பயப்பனவாகா; அவை நம் அனுபவத்துக்கு அப்பாற்பட்டவை யாதலின். ஆகவே, எல்லா இலக்கியங்களும் உலக வாழ்க்கையைத் தெள்ளத்தெளிய எடுத்துரைப்பனவேயாகும். எவ்வெவ் விலக்கியங்கள் வாழ்க்கையை வழுவாவகை எடுத்துக் கூறும் கூற்றிலே சிறந்து திகழுமோ, அவ்வவ் விலக்கியங் களே தலையாய இலக்கியங்கள் எனக்கருதப்படும். இனி இப்பொருளையே சொல்லாற்றல் இல்லாதான் ஒருவன் கூறின், அது நமது கருத்தைக் கவர்தலின்றாகும். ஆத லின் நாப்புலமை வாய்ந்த புலவர் கலைத்திறம் பொருந்தப் பொருளைப் புகட்டுவதால் மட்டுமே நம்முணர்வு கவரப்படும் என்க. செந்நாப் புலவர்க்கே இன்ன பொருளை இன்னின்ன சொற்களால் இன்னின்னவாறு இன்னின்ன காலத்திற் சொல்லவேண்டும் என்னும் தன்மை நன்கு விளங்கும். ஏனோர்க்கு அஃது அரிதாகும். இத்தகைய குணங்களிற் சிறந்து நிற்போரே பெரும்புலவர் எனப்படுவர். அவர்தம் கவியைக் கருதியேபோலும் கம்பர் பின்வரும் செய்யுளைச் சித்திரிப்பாராயினர்:

‘புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.’ [றோர்

# 10. அரவிந்தர் கடிதம்

## திரு. பரலி சு. நெல்லையப்பர் அவர்கள்

[திரு. நெல்லையப்பர் அவர்கள் திருநெல்வேலியை அடுத்த பல்லக் கோட்டை என இன்று வழங்கும் பரலியில், சைவ வேளாளர் மரபில், 1889-ஆம் ஆண்டிற் பிறந்தார். இவர்தம் தந்தையார் சுப்பிரமணிய பிள்ளை என்பவர். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார். அக் கல்லூரி ஆசிரியரான தி. பா. சிவராம பிள்ளையிடத்தும், பெரியார் வ. உ. சிதம்பரம் பிள்ளையிடத்தும் தமிழ் பயின்றார். இளமையிலேயே தேசத்தொண்டில் ஈடுபட்டு 1908-ஆம் ஆண்டில் சிறை வாழ்க்கை பெற்றார்.

'லோகோபகாரி' என்ற பத்திரிகைக்கு நெடுங்காலம் ஆசிரியராயிருந்துத் திறம்பட அதனை நடத்திவந்தார். இவர் கோபு மோதிரம், இராதாராணி முதலிய வங்கிம் சந்திரருடைய நூல்களை மொழிபெயர்த்துள்ளார். திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை சரித்திரம் என்ற சிறுநூலும், பல செய்யுட்களும் இயற்றியுள்ளார். இப்பொழுது சென்னையில் வசித்து வருகிறார். கீழே தரப்பட்டுள்ளது, இவர் மொழி பெயர்த்த அரவிந்தர் கடிதங்களில் ஒன்றாகும்.]

அன்பிற் கினிய மிருணாலினி,

ஆகஸ்டு-மீ 2-உ நீ எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. உனது தாய் தந்தையருக்கு முன்போலவே மறுபடியும் துக்கம் நேர்ந்திருப்பதைப் பற்றி நான் வருத்தமடைகிறேன். எந்தப் பையன் பரலோக மடைந்தான் என்பது உனது கடிதத்தில் விளங்கவில்லை. துன்பம் வந்தாலென்ன? அதைப் பொருட்படுத்த லாகாது. உலக இன்பத்தைத் தேடப்போனால் அவ்வின்பத்தினிடையே துன்பம் எப்போதும் தோன்றும். இன்பத்தைத் துன்பம் எப்போதும் ஒட்டி நிற்கின்றது. இந்த விதி புத்திர இச்சை விஷயத்தில் மட்டுமன்று. எல்லா உலக இச்சைகளின் விஷயத்திலும் பொருந்தியதாகும். சுகதுக்கங்கள் எல்லாவற்றையும்

அமைதியுடன் ஈசனது திருவடிகளிலே சமர்ப்பணம் செய்து விடுவதாகிய ஒரு வழிதான் மனிதனுக்குண்டு.

* * * *

எனக்கு மூன்று† பைத்திய எண்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

**முதலாவது** :- ஒருவனுக்கு அறிவு, பயிற்சி, கல்வி, செல்வம் முதலிய எவ்வித நன்மைகளையும் தனது குடும்ப ரக்ஷணைக்கு அத்யாவசியமாக எம்மட்டு செலவிடவேண்டுமோ, அம்மட்டுத்தான் செலவிட அவனுக்கு அதிகாரம் உண்டென்பது எனது உறுதியான நம்பிக்கை. ஈசன் கொடுத்த நன்மைகள் முழுவதையும் தன் பொருட்டே செலவிட்டு விடலாகாது. மிஞ்சி யிருப்பதைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். ஈசனுடைய கைங்கரியத்திலே செலவிடவேண்டும். எனக்கு உள்ளவற்றையெல்லாம் நான் என் பொருட்டாகவே எனது சுகங்களிலும் போகங்களிலும் செலவிட்டு விடுவேனானல் நான் திருடனவேன். ஈசனிடமிருந்து செல்வம் கிடைக்கப்பெற்று அவர் கைங்கரியத்திலே விநியோகம் செய்யாதவன் திருடனென்று அறிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுவரை நான் சம்சார சுகத்திலே மூழ்கிக் கிடந்துவிட்டேன். ஒரு ரூபாயில் இரண்டணு ஈசனுக்கும் பதினன்கணு எனக்குமாகச் செலவிட்டுக் கொண்டு கணக்கை மறைத்துக்கொண்டு வந்தேன். எனது ஆயுளில் பாதி செலவாகி விட்டது. அது விருதாவாகவே போயிற்று.

மிருகங்கூடத் தனது சொந்த வயிற்றையும் தனது குடும்பத்தாரின் வயிற்றையும் நிரப்பிவிட்டுத் தான் சாபல்யம் அடைந்து விட்டதாக நினைத்துக் கொள்ளுகிறது. இதுவரை நான் திருடனுடைய நடையையும், மிருகங்களின் நடையையும் பின்பற்றி ஒழுகிவந்தேன். இப்பொழுது

† மற்ற இரண்டு பைத்தியங்கள் முறையே நேருக்கு நேராகப் பரமாத்மாவைக் காணவேண்டுமென்பதும், இந்நாட்டைத் தாயாகவே மதிப்பதும் ஆகும்.

இதனை அறிந்துகொண்டேன். இதனால் எனக்கு வருத்தமும், என்னிடத்துக் கோபமும் உண்டாயிருக்கின்றன. இனி அதனை வேண்டேன். அப்பாவ வாழ்க்கையை ஒரே அடியாகத் தொலைத்துவிட்டேன்.

நாம் கடவுளுக்குக் கொடுப்பதென்றால் எப்படி? தர்மச் செயல்களிலே நமது பொருளைச் செலவிடுவதே அதற்கு வழியாகும். எனது சகோதரி சரோஜனிக்கேனும், அல்லது உனக்கேனும் நான் பணம் கொடுப்பதைப் பற்றி நமக்கு வருத்தம் உண்டாகவில்லையல்லவா? மற்றவர்களுக்கு நன்மை செய்வது தர்மம். தன்னைச் சார்ந்தோர்களை ஆதரிப்பது தெய்வபக்தியில் ஒரு பகுதியாகும். ஆனால் ஒருவன் தனது கூடப்பிறந்த சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் கொடுப்பதினாலேயே மட்டும் அவனுடைய தர்மம் நிறைவேறிவிடவில்லை. இந்தப் பஞ்ச காலத்தில் நாடு முழுதுமே என் வீட்டு வாசலில் ஆதரவுக்கு வந்து காத்து நிற்பது போலிருக்கிறது. இந்த நாட்டிலே எனது உடன்பிறந்தோர் முப்பதுகோடிப் பேர் இருக்கின்றனர். அவர்களிலே பலர் பட்டினியால் சாகின்றார்கள். நோயினாலும் துயரத்தாலும் மிகுந்த க்ஷீணதிசைக்கு வந்து, அவர்கள் எப்படியோ உயிர் வாழ்கின்றனர். அவர்களுக்குத் துணைபுரிவது என் கடமை. நீ என்ன சொல்லுகிறாய்?

இவ் விஷயத்திலே உன் சம்மதி அளிப்பாயா? வெகு சாதாரண மனிதனைப்போல் ஜீவித்துக்கொண்டு, கேவலம் உடலிலே உயிர் தரிப்பதற்கு அவசியமான விஷயங்களில் மட்டும் செலவிட்டுக் கொண்டு, மிஞ்சியதை எல்லாம் நான் தெய்வ கைங்கரியத்திற்கு விநியோகம் செய்யப்போகிறேன். இது என் விருப்பம். நீயும் இதற்குச் சம்மதித்து, ஆத்ம யக்ஞம் செய்ய இணங்குவாயானால் எனது விருப்பம் நிறைவேறுதல் எளிதாகும்.

**உனது அன்புள்ள கணவன்.**

# 11. தமிழ் அகராதி

## ராவ் சாகிப். எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்

[திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள வண்ணூர்பேட்டை என்னும் ஊரில் 1891-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர்தம் தந்தையார் சரணவப் பெருமாள் பிள்ளை. சைவ வேளாள மரபினர். இவர் தொடக்கத்தில் நெல்லை இந்துக் கல் லூரியிலும், பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரி, திருவனந்தபுரம் சட்டக் கல்லூரி ஆகியவைகளிலும் கல்வி பயின்றார். நெல்லை தி. ப. சிவராம பிள்ளை, சென்னை கா. கோபாலாசாரியார், பல்லாவரம் மறை மலையடிகள் ஆகியோர் இவரது தமிழாசிரியர்களாவர். இவர் சட்டப் பரீட்சையில் தேறி, B. A., B. L., பட்டம் பெற்று, திருவனந்தை யிலும் நெல்லையிலும் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தார். பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் லெக்ஸிகன் ஆசிரியராயிருந்து தமிழ்லெக்ஸிகன் என்னும் தமிழ்ப் பேரகராதித் தொகுதிகளை முற்று வித்து வெளிவரச் செய்தார். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித்துறைத் தலைவராயிருந்து தமிழ் மொழிக் குத் தொண்டாற்றி வருகின்றார். ஆராய்ச்சி யுரைத் தொகுதி, தொல் காப்பியம்—இளம்பூரணம், புறத்திரட்டு முதலிய பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவரது தொண்டினைப் பாராட்டிய அரசியலார் இவருக்கு 'ராவ் சாகிப்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித் துள்ளனர்.]

அகராதி யென்றால் என்னவென்று இப்போது எல்லா ருக்கும் தெரியும். சிறுவர்கள் கூட எழுத்துப் போட்டி முதலியவற்றிற்கு விடையெழுதுவதற்காக ஏதேனும் ஓர் அகராதியை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு மூலையைத் தேடிப் பிடித்து உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். அகராதி வைத்திருப்பவனும் இக்குழந்தைகளால் பெரும்பாடு படுகி றான். அவனை 'மாமா, மாமா' என்று ஆசைப் பெயரிட்ட ழைத்து, அகராதிப் புஸ்தகத்தை எப்படியாவது வாங்கிக் கொண்டுபோய் வைத்திருந்து, பலநாள் கழித்து, இதழ்

இதழாகக் கிழிந்த நிலைமையில் கொண்டுவந்து திரும்பக் கொடுப்பார்கள்; அதுவும் கொடுப்பதாயிருந்தால்—கொடுக்கக்கூடிய நிலைமையில் இருந்தால். இவ்வாறு சிறு குழந்தைகளிலிருந்து பெரிய மனிதர்கள் வரை இப்பொழுது மிக்க ஆசையோடு போற்றிவருகிற அகராதி சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழில் ஏற்படவில்லை யென்பது நம்மிற் பலருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம்.

முதன்முதலிலே தமிழில் அகராதியை இயற்றியவர் இத்தாலி தேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்து, கிறிஸ்து சமயத்தைப் பரப்புவதற்குப் பெரு முயற்சிகள் செய்த ஒரு பாதிரியார். அவர் பெயர் **கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி** யென்பது. ஆனால் நமது நாட்டில் அவரை **வீரமா முனிவர்** என்று வழங்கிவந்தார்கள். சன்னியாசிகள் போலக் காஷாயந் தரித்து இங்கே வாழ்ந்துவந்தார். தமிழ் மொழியிலே கிறிஸ்து சமயம்பற்றி இலக்கியச் சுவையிற் சிறந்த நூல்களை இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ் மக்களைத் தமது சமயத்திற் சேர்ப்பிக்க எண்ணினார். அந்நோக்கத்தைக் கொண்டு தமிழ் மொழியை நன்கு பயின்று இலக்கணங்களையும் ஒருவாறு கற்றுப் பண்டிதராயினார். நிகண்டுகளை மனப்பாடம் பண்ணி ஞாபகத்தில் வைப்பது சிரமமாக இருந்ததனாலே, அவற்றை அகராதியாகச் செய்துவிடுவது நலமென்று எண்ணி, '**சதுரகராதி**' என்று வழங்கும் அகராதியை முதன்முதலில் இயற்றுவித்தார். இந்த அகராதியை இயற்றியது கி. பி. 1732-ல்.

'வீரமா முனிவர் அகராதி இயற்றுவதற்கு முன் தமிழ் மக்களுக்குச் சொற்களின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும் அவசியமே ஏற்படவில்லையா?' என்று நீங்கள் கேட்கலாம். தமிழிலக்கிய சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் இந்த விதமான அவசியம் ஏற்படாத காலமே கிடையாதென்று சொல்லிவிடலாம். இலக்கியம் என்று சொன்னாலே, அது சாமானிய மக்கள் பேசும் வழக்குமொழியினின்று சிறிதேனும் வேறுபட்ட நடையில் அமைந்திருக்குமென்

பது சொல்லாமலே விளங்கும். ஆகவே இலக்கியச் சொற்க ளெல்லாம் சாதாரண மக்களுக்குத் தெரிந்தவையாய்த்தான் இருக்குமென்று கூறமுடியாது. தெரியாத வார்த்தைகளும் அக்கூட்டத்தில் இருக்கத்தான் வேண்டும். இவற்றின் பொருளைத் தெரிந்துகொள்வதற்கு ஏதேனும் நூல்கள் இருந்தனவா ?

சொற்பொருளுணர்த்தும் கருவி நூல்கள் இருந்தன வென்பதும், அவற்றை 'நிகண்டு' என்ற பெயரால் வழங் கினரென்பதும் நாம் அனைவரும் அறிந்தனவே. 'இப் பெயர் வடமொழியாயிற்றே; தமிழில் இக்கருவி நூலுக்குப் பெயரில்லையா ?' என்று சிலர் கேட்கலாம் தமிழ்ப் பெய ரும் உண்டு. 'உரிச்சொற் பனுவல்' என்பது அப்பெயர். செருடான இத்தமிழ்ப் பெயர் நாளடைவில் மறைந்துவிட் டது. நிகண்டு என்ற பெயரே தமிழாகி நிலைத்து விட்டது

நிகண்டுகள் இருக்கும்போது அகராதி தோன்றுதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று கேட்கலாம். இவ் விரண்டு வகைப்பட்ட நூல்களும் அமைந்துள்ள முறையின் வேறுபாடே தக்க காரணமாகும். முதலாவது : நிகண்டு கள் செய்யுளில் அமைக்கப்பெற்றிருக்கும்; செய்யுளின் பொருள் விளங்குவது எத்தனை கஷ்டமென்பது சொல்ல வேண்டுமா? இரண்டாவது : நிகண்டு நூல்களில் தெய்வப் பெயர்கள், மக்கட்பெயர்கள் முதலாகிய பலதொகுதிகளிலே வார்த்தைகள் அமைந்திருக்கும். ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல் எந்தத்தொகுதி யைச் சார்ந்ததென்று தெரியவேண்டும். பிற்பாடு அந்தத் தொகுதி முழுவதையும் வாசித்தாலல்லாமல் பொருள் கண்டு பிடிப்பதும் இயலாது. மூன்றாவதாக: மனப்பாடம் செய் வதற்கென்றே அமைந்தன இந் நிகண்டு நூல்கள். மனப் பாடம் செய்வது எவ்வளவு சிரமமான காரியமென்பது நாம் நன்றாக அறிவோம்! அகராதியிலேயென்றால், ஒவ்வொரு சொல்லும் அ, ஆ முதலிய நெடுங்கணக்கின் எழுத்து வரி சையிலே வைக்கப்பட்டிருக்கும். இவ்வரிசை தெரிந்தால்

அகராதியில் எந்தச் சொல்லையும் எடுத்துப் பொருள் தெரிந்து கொள்ளலாம். எழுத்து வாசனை உள்ளவர்களில் இந்த எழுத்து வரிசை தெரியாதவர்கள் உண்டோ? இத்தனை எளிதாக இருப்பதனால்தான், நான் முதலிலே கூறினபடி குழந்தைகள்கூட அகராதிகளை உபயோகப் படுத்துகிறார்கள்.

அகராதியைப்போல எளிதாக நோக்கியுணரக்கக்கூடிய முறையிலே நிகண்டுகளை மாற்றவேண்டுமென்று நம்முன்னோர்களுக்குத் தோன்றவில்லையாவென நீங்கள் கேட்கலாம். அவர்களும் அவ்வாறு மாற்றுவதற்கு மிகவும் முயற்சி செய்திருக்கிறார்களென்பது நிகண்டுகளின் சரித்திரத்தை நோக்கினால் விளங்கும். இம்முயற்சி முதன்முதலில் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் எடுத்துக் கூறும் 11-ஆவது நிகண்டுப் பகுதியிலேதான் நடைபெற்றது. முதற்படியாக இத்தொகுதியிலே செய்யுட் சுவையின் பொருட்டு ஏகதேசமாகச் சொற்கள் எதுகையிலே வைக்கப் பட்டன. இம்முறையைத் திவாகர ஏட்டுப்பிரதிகளிற் காணலாம். அடுத்தபடியாக இச்சொற்களைக் ககரவெதுகை சகர வெதுகை முதலிய பகுதிகளாகப் பாகுபாடுசெய்து, எதுகையை வைத்துக்கொண்டே சொற்களை எளிதில் எடுக்கக் கூடிய முறையானது கையாளப்பட்டது. இம்முறையைச் சூடாமணி நிகண்டிற் காணலாம். மூன்றாம் படியாக, சூடாமணி நிகண்டிலே காணப்பட்ட குறைகளை நீக்க முயற்சி செய்தார்கள். ஓரெதுகையிலே பிறிதோர் எதுகைச்சொல் வந்து கலத்தல், செய்யுளுக்கு வேண்டிய அநாவசியமான அடைமொழிகளைச் சேர்த்துச் சொல்லின் பொருளைக் கருகவைத்தல் என்றவையே அக்குறைகள். இக்குறைகளில்லாது செய்யப்பட்ட நிகண்டுகள் நாநார்த்த தீபிகை முதலியன. இம்முறையும் திருப்திகரமாயில்லாததனாலே நான்காம் படியான அகராதிமுறை அரைகுறையாகக் கையாளப்பட்டது. இந்நான்காம் முறையைக் கொண்டெழுந்த முதலாவது நூல் 'அகராதி நிகண்டு.'

இந்த அகராதி நிகண்டைச் செய்தவர் இரேவணசித்தி ரிய ரென்ற வீர சைவர். நூல் செய்த காலம் கி. பி. 1594. இவ் ஆண்டிற்கு முன் அகராதி என்ற சொல் தமிழ் மொழி யில் இல்லை. நல்ல சுப முகூர்த்தத்தில் இப்பெயரை இட் டிருத்தல் வேண்டும். ஏனென்றால் இப்பெயர்தான் இப்பொ ழுது நிலைத்துவிட்டது.

அகராதி நிகண்டிலே பல குறைகள் இருந்தன. அக ரத்திலே தொடங்கும் சொற்களை ஒரு பொருளுடையன, இரு பொருளுடையன, முப்பொருளுடையன என்பவை முதலாகப் பகுத்து முதலெழுத்து மாத்திரம் அகராதி வரி சைக்குரியபடி அமைத்து இந்நூல் செய்யப்பட்டது. ஆத லால், அகரத்தில் தொடங்கும் ஒரு சொல்லின் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல்லுக்கு எத்தனை பொரு ளுண்டென்பது முதலில் தெரியவேண்டும்; பிற்பாடு அத் தனை பொருளுடைய பகுதியில் அச்சொல்லைத் தேடிப் பிடி க்கவேண்டும். இக்குறைகளை நீக்கி, ஒரு பொருள் இரு பொருள் முதலிய பாகுபாடுகளை யொழித்து, அகராதி வரிசையை மேன்மேலும் அபிவிருத்தி செய்த நூல்கள் பல் பொருட் சூடாமணி, பொதிகை நிகண்டு முதலிய நிகண்டு களாம். காலக்கிரமத்தில் மற்றக் குறைகளெல்லாம் ஒழிந்த போதிலும் அகராதி வரிசையை முழுதும் கையாளாத குறை இருந்தேவந்தது. அகராதி முறைப்படி, அங்கம் என்ற சொல் அரசன் என்பதற்குமுன் வரவேண்டும். இந் நிகண்டுகளில் அரசன் என்பதற்குப் பின் அங்கம் காணப்படும். முதலெ ழுத்தில் மாத்திரம் அகர வரிசையைப் பின்பற்றிய நூல்க ளில் இது போன்ற குறைகள் இருக்கும். முதலிரண்டெழுத் துக்களில் அகராதி வரிசையைப் பின்பற்றிய நூல்களில் அங்குலி என்பது அங்கம் என்பதற்குமுன் காணப்படும். இவைபோன்ற குறைகளெல்லாம் ஒழிந்த பிற்பாடுதான் அகராதி தோன்றிற்று.

அகராதி நிகண்டு என்பதில் அகராதி என்பது ஓர் அடைமொழியென்பதை நாம் மறந்துவிடலாகாது. அகர மாதிய வரிசையிலே சொற்களை அமைத்த நிகண்டு என்

பதே இதன் பொருள். தற்காலத்தில் அகராதி என்ற நூற்பெயரால் நாம் கொள்ளும் கருத்தை, 'அகராதி மோனைக் ககராதி யெதுகை' என்ற பெயரால் ஒரு தமிழ் நூல் விளக்குகிறது. அகராதி என்ற சொல்லை நூற் பெயராக முதன்முதலில் அமைத்தது வீரமா முனிவரே. இந்த அகராதி யென்ற பெயரோடு ''ஏபிஸிடேரியம்' (abcdarium) என்ற ஆங்கில நூற்பெயரை ஒப்பிடலாம்.

"அகராதி வரிசையைப்பற்றி இதுவரை சொன்னேன். இனி அகராதியிற் சேர்க்கவேண்டிய சொற்களைப் பற்றிக் கவனிப்போம். இலக்கியங்களிலே வருகிற கடினமான சொற்களை மாத்திரம் சேர்க்கவேண்டுமென்ற கருத்து முற்காலத்திருந்தது. நிகண்டுகளிற் காணப்படும் சொற்களில் பெரும்பாலானவை இவ்வகைக் கடின பதங்களேயாகும். இக் கருத்து இப்போது மாறிவிட்டது. நிரம்பிய, உத்தம மான அகராதியில், ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டு மென்பதே இப்போதுள்ள அகராதியாளர்களுடைய கருத்து. இதனால் அகராதி யென்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவிநூல் என்ற கொள்கை மாறி, இவ்வியல்போடு ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும் என்ற கொள்கை இப்போது நிலைபெற்றுவிட்டது. ஆனால் இந் நோக்கம் நிறைவேறுதலிலே பலவகையான இடையூறுகள் உண்டு. முதலாவது எல்லாச் சொற்களையும் ஒருவரோ, ஒரு சில கூட்டத்தாரோ தெரிந்துகொள்ளுதல் ஏலாது. ஒரு மொழியிலே பயின்றுவரும் எல்லாப் பிரதேசத்தாரும், இனத்தாரும், சாதியாரும், தொழிலாரும், பருவத்தாரும் அகராதியின் மேன்மையான நோக்கங்களையும் முறைகளையும் உணர்ந்து ஒத்துழைத்தாலன்றி ஓர் உத்தம அகராதி இயற்ற முடியாது. ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையிலிருந்து வெளியிடப்பட்ட புதிய ஆங்கில அகராதி (The New English Dictionary) ஒன்றே இங்ஙனம் இயன்ற ஓர் உத்தம அகராதி யென்று ஒருவாறு கூறலாம்.

இரண்டாவது இடையூறு, அகராதி, எல்லையின்றி விரிந்து விலையதிகரித்துப் பெரும் பாலர்க்குக் கைக்கெட்டாததாய் முடிந்து விடும் என்பதே.

இக்காரணங்களால் பொது அகராதி தவிர, தொழில் பற்றியும், சாஸ்திரம் பற்றியும், இடம் பற்றியும், காலம் பற்றியும் விரிவான அகராதிகள் உண்டாகவேண்டும். இவற்றிலேதான் சொற்பொருளை விரிவாகப் படங்கள் முதலிய உபகரணங்களால் விளக்க முடியும். எனவே ஒவ்வோர் அகராதியும் அது மேற்கொண்டுள்ள நோக்கத்திற் கிணங்க அமைக்கப்பெறுதல் வேண்டும். சாதாரணமாக வழங்கும் அகராதிகளில் மேற்குறித்த பலவகைச் சொற்களுள் சில மிகுந்தும் சில குறைந்தும் இருப்பது இயல்பே.

* * * *

மேற் குறித்த முறைகளையும், மற்ற நியமங்களையும் இயன்றவரை கைக்கொண்டு தமிழ் லெக்ஸிகன் என்னும் பேரகராதி வெளிவந்துள்ளது. இவ்வகை அகராதி தமிழ் மொழி உணர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பெருங்கருவி யென்பதை அறிந்து, நேர்ந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாது ஏராளமான செலவில் அதனை இயற்றுவித்து வெளியிட்ட சென்னை சர்வகலா சாலையாரது பெருஞ்செயல் என்றும் பாராட்டுதற்குரியது.

# 12. கடல்

## திரு. பெ. நா. அப்புசாமி ஐயர் அவர்கள்

[திரு. அப்புசாமி ஐயர் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பெருங்குளம் என்ற ஊரில், 1891-ஆம் ஆண்டில், சைவ அந்தணர் மரபில் பிறந்தவர். இவரது பெற்றோர் நாராயணய்யா, அம்மாக்குட்டி அம்மையார் என்போராவர். இளமையில், நெல்லை இந்துக் கல்லூரியிலும், பின்னர் சென்னை மாகாணக் கல்லூரி, சட்டக் கல்லூரிகளிலும் பயின்று B. A., B. L., பட்டம் பெற்றார். இப்பொழுது சென்னையில் வழக்கறிஞராக இருந்து வருகிறார்.

இவர் இரண்டாவது மொழியாகக் கல்லூரியில் வடமொழியைக் கற்றுவந்தாரேனும், தமிழைத் தனியே பயின்றும், பத்திரிகைகளில் கட்டுரைகள் வரைந்தும் எழுத்தாளராயினார். இவர் அற்புத உலகம் என்ற விஞ்ஞான நூலைத் தமிழில் எழுதியதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ரூ. 1,000 பரிசு அளித்தனர். மின்சாரத்தின் விந்தை என்ற பிறிதொரு நூலும், கணக்கற்ற கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள கட்டுரை இவர் எழுதிய வானமும் கடலும் என்னும் கட்டுரையின் பிற்பகுதியாம்.]

'நீல நிறக்கடலில் என்ன கண்டிட்டாய்? என்னும் கேள்விக்கு விரிந்த விசும்பிடையிற் கண்டதையே நீலக் கடலிடையும் கண்டிட்டேன் என்று விஞ்ஞானியும் சொல்லுகிறான். கப்பலேறி நாம் கடற் பிரயாணம் செய்யும் பொழுது நம்மைச்சுற்றி எல்லாப் பக்கங்களிலும் கடல் சூழ்ந்து விரிந்து கிடக்கின்றது. மேலே உள்ள வானத்தின் நிறம் நீலம்! சுற்றிலும் உள்ள கடலின் நிறம் நீலம்! எங்கேப் பார்த்தாலும் ஒரே நீல நிறச் செறிவு.

கப்பலிலிருந்து கீழே பார்ப்போனுக்குக் கடலின் நீர், தூய நீலமாகவோ கருநீலமாகவோ தோன்றுகிறது. கடலின் அடியிலே உள்ள பொருள்கள் அவன் கண்ணுக்குத் தெரிவதில்லை. அடிமட்டத்திலுள்ள பொருள்களைக் கடல் நீர் மறைக்கின்றது. அதே கடல்நீரைத்தான் கப்பலில்

குளிக்கும் ஸ்நான அறையில் உள்ள பீங்கான் தொட்டிகளில் நிரப்புகிறார்கள். அப்பொழுது அதிலுள்ள நீரானது பளிங்கு போலத் தெளிவாக யிருக்கிறது. தொட்டியின் அடியிலுள்ள பொருள்கள்யாவும் நன்றாகத் தெரிகின்றன! தொட்டித் தண்ணீரிலே மிகவும் இலேசான பச்சைநிறம் ஒன்று, தெரிந்ததும் தெரியாததுமாய் இருக்கிறது. கடலிலே இருக்கும்போது நீருக்கு இருந்த அந்த அழகிய கருநீலநிறம், தொட்டிக்கு வந்ததும் காணவில்லை. அது எங்கேப் போய் விட்டது?

ஒரு சுக்ஷி

இதைப்பற்றி ஆராய்ந்த சிலர், 'கடலானது வானத்தின் நீல நிறத்தைப் பிரதி பலிக்கிறது. ஆகையால்தான் அது நீலநிறம் உடையதாகத் தோன்றுகிறது. ஆகாயத்தின் நீலநிறத்தையே நாம், நிலைக் கண்ணாடியில் பார்ப்பது போல், சமுத்திர ஜலத்திலும் தெரியக் காண்கிறோம்' என்று சொன்னார்கள். 'வானத்திலே மேகங்கள் திரண்டு, மந்தாரமாயிருக்கிற வேளையிலே கடலானது நீலநிறமாய்த் தோன்றுவதில்லையே? அப்பொழுது அது சாம்பல் நிறமாகவோ காரீய நிறமாகவோதானே தோன்றுகிறது. நீல நிறம் அதற்கு இயற்கையான நிறமானால் எப்பொழுதும் அது நீலநிறமாக அல்லவோ தோன்ற வேண்டும்?' என்று வழக்குப் பேசினார்கள்.

இது சரியான காரணம் அல்ல. ஏனென்றால், வானத்தின் நிறத்தைக் காட்டிலும் கடலின்நிறம் அதிக நீலமாக அல்லவோ இருக்கிறது! அப்படி இருக்கும்போது அதைப் பிரதிபலிப்பு என்று எப்படிச் சொல்லலாம்? வானத்தை மேகம் மூடுகிறபோது கடலின் நிறம் மங்குகிறது என்பது உண்மைதான். ஆனால், அது மேகத்தைப் பிரதிபலிப்பதால் அல்ல. கடலின் நிறத்தை நன்கு எடுத்துக் காட்டும் சூரிய வெளிச்சமானது, மேகத்தால் மறைபட்டுக் குறைந்து போகிறது. அதனால்தான் கடல் நிறமும் குறைந்ததாகத் தோன்றுகிறது.

'கடல் நீருக்கு இயற்கையாக உள்ள நிறம் நீல நிறம்; அதனால்தான் கடல் நீலமாகத் தோன்றுகிறது,' என்று வேறு சிலர் சொன்னார்கள்.

இன்னொரு கக்ஷி

இதுவும் சரியல்ல; ஏனென்றால் நீரானது பளிங்கு போன்றது; அதனால் ஒளியை ஊடுருவிச் செல்ல விடும் தன்மையை உடையது. அப்பேர்ப்பட்ட பொருள் ஒன்றின் உண்மையான நிறம் நமக்குத் தெரிய வேண்டுமானால், பொருளைத் தெரியச் செய்யும் ஒளிக்கிரணங்களுக்கும் பொருளைப் பார்க்கும் நமது கண்களுக்கும் இடையே அப்பொருள் இருப்பது அவசியம். அப்படி இருந்தால் தான் அதன் ஊடு செல்லும் வெள்ளிய ஒளியானது அப்பொருளின் சுயநிறத்தால் நிறவேறுபாடு பெற்று, அந்த வேறுபாட்டோடு நமது கண்களை அடைந்து, அப்பொருளின் உண்மை நிறத்தை நமக்குக் காட்டுகிறது. நாமும் பொருளின் உண்மை நிறத்தை அறிகிறோம். ஆதலால் தெளிவான கடல்நீரின் உண்மை நிறம் நமக்குத் தெரிய வேண்டுமானால், கடல்நீரானது ஒளிவீசும் சூரியனுக்கும் நமக்கும் இடையே இருந்தால் அல்லவோ முடியும்? கடல் நீரைப் பார்க்கும் நாம் ஒளியைத் தருகின்ற சூரியனுக்கும், ஒளியை ஊடுருவ வருகின்ற கடலுக்கும் இடையே அல்லவோ இருக்கின்றோம்? கடல்நீரில் தூசியோ வேறுபொருள்களோ மிதந்து கொண்டிருக்கின்றன; அவை வெளிச்சத்தைப் பிரதிபலிக்கின்றன என்று வைத்துக் கொண்டாலன்றி, கடலில் படுகிற ஒளி நம்முடைய கண்ணில் எப்படித் திரும்பவந்து படும்? ஆனால் மிகவும் நீலமாகத் தோன்றுகிற நீரைச் சோதித்துப் பார்த்தால், அது தூசி யற்றதாயும் பளிங்கைப் போல் தெளிவாயும் இருக்கிறது.

இந்த விஷயத்தைக் குறித்து **ஸர். சி. வி. ராமன்** பல வகைச் சோதனைகளை நடத்திப் பார்த்தார். அவர் கப்பற் பிரயாணம் செய்யும்பொழுது கப்பலிலிருந்தே பல ஆராய்ச்சிகளை நடத்தினர். **டாக்டர் ராமநாதனும்** அநேக சோதனைகளை நடத்தினர்.

ஆழக்கடலிலே மிகவும் நீலமாய்த் தோன்றும் நீரானது, மிகவும் தெளிவாயும் தும்பு தூசியற்றதாயும் இருக்கிறது என்பது, அந்தநீரை வெளியே எடுத்துச் சோதித்த பொழுது தெரியவந்தது. அப்பேர்ப்பட்ட தெளிந்த நீரைச் சோதனைச்சாலையில் பரிசோதித்தார்கள். அதன்வழியே பிரகாசமான வெளிச்சத்தைப் போகவிட்டார்கள். அப்பொழுது அந்த வெளிச்சமானது நல்ல நீலநிறமாய்த் தெரிந்தது.

இதனால் உண்டான முடிவு என்னவென்றால், காற்றிலே உள்ள 'மாலிக்யூல்கள்' ஒளிக் கிரணத்தைச் சிதறச் செய்வதால் காற்று நீல்நிறம் உடையதாகத் தோன்றுவது போலவே, நீரிலே உள்ள மாலிக்யூல்கள் ஒளிக் கிரணத்தைச் சிதறச் செய்வதாலேயே கடலின் நீர் நீலநிறமாகத் தோன்றுகிறது என்பதுதான். ஆயினும் இவ்விரண்டுக்கும் சிற்சில வித்தியாசங்கள் உண்டு. அவற்றை இப்பொழுது விவரிப்பது அவசியமில்லை.

**வானினும் மிக்க நீலம்**

வானத்தைக் காட்டிலும் கடல் அதிக நீலமாகத் தோன்றுகிறதல்லவா? அது ஏன்? காற்றின் மாலிக்யூல்கள் வெள்ளைக் கிரணத்தைச் சிதறச் செய்கின்றன. அவற்றுள் நீலம் நம்முடைய கண்ணில் வந்துபடுகிறது. மற்ற நிறக் கிரணங்கள் பெரும்பாலும் காற்றின் மாலிக்யூல்களில் அடங்கிப்போகின்றன. ஆயினும் அவற்றுள் ஒரு சிறு பகுதி நமது கண்ணிலே வந்துபடுகிறது; படுவதால் இந்த நீல நிறத்தின்காந்தி சற்று குறைந்து போகிறது. அதனால் காற்றின் நீலமானது அவ்வளவு நல்ல நீலமாகத்தோன்றுவதில்லை.

கடலின் நீரிலும் இதேமாதிரியான நிகழ்ச்சி நடக்கின்றது. அதன் மாலிக்யூல்கள் வெள்ளைக் கிரணத்தைச் சிதறச்செய்து, நீல நிறத்தை மட்டிலும் வெளியே விடுகின்றன. அந்த நீலம் நமது கண்களில் படுகின்றது. ஆனால் சிவப்பு, மஞ்சள், முதலிய மற்ற நிறங்கள் மிகவும் அதிகமான அள

விலே நீரின் மாலிக்யூல்களுக்குள்ளே அடங்கிப்போகின்றன. கடலின் நீர் சிவப்பையும் மஞ்சளையும் விழுங்கி விடுகிறது என்றே சொல்லலாம். அதனுல் அந்நீரானது, சிவப்பு, மஞ்சள், முதலிய மாற்றுநிறங்கள் கலவாத தூயநீல நிறம் உடையதாக நமது கண்ணுக்குத் தெரிகிறது. அதனுல்தான் வானத்தைக் காட்டிலும் கடலானது அதிக நீலமாகத் தோன்றுகிறது.

கரைந்தன: மிதப்பன: ஒளிர்வன:

கடல் நீரில் கரைந்துள்ள பொருள்களும் அதில் மிதக்கின்ற தூசிப்போன்ற பொருள்களும் கடல் நீரின் நிறத்தை மாற்றுகின்றன. அவற்றின்மேல் சூரிய கிரணங்கள் படும்போது கடலானது நீல நிறம் குறைந்து, பசிய நீலமாகவோ, வெறும் பச்சையாகவோ, வெளிறிய பச்சையாகவோ, வெள்ளையாகவோ தோன்றுகிறது.

கடல் நீரின் நிறவேறுபாட்டிற்கு இன்னொரு காரணமும் உண்டு. கடல் நீரிலே சிற்சில பொருள்கள் இருக்கின்றன. அவை தாமாகவே பல்வேறு நிறங்களுடன் ஒளிர்கின்றன. அப்பொருள்களின் நிறங்களும் கடல் நீரின் நிறத்தை மாற்றுகின்றன.

வானத்திலும் கடலிலும் தோன்றும் நீலம் முதலிய அழகிய நிறங்கள் யாவும் கிட்டத்தட்ட ஒரே வகைக் காரணத்திலேயே உண்டாகின்றன என்கிற உண்மையை, ஸர். சி. வி. ராமன் முதலிய விஞ்ஞானிகள் நுண்ணிய ஆராய்ச்சிகளை நடத்தி உலகம் அறியும்படித் தெரிவித்தார்கள்.

ஆதலால், இவ்வழகுகளைக் கண்ணினுல் மட்டும் அனுபவித்துக் கொண்டிருந்த நம்மை, அறிவினுலும் காணும்படிச் செய்து, நமது இன்ப உணர்ச்சியை இப்பெரியோர்கள் அதிகரிக்கச் செய்திருக்கிருர்கள்.

# 13. வீணைக்கொடியோன்

## திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள்

[*திரு. சேதுப்பிள்ளை அவர்கள் திருநெல்வேலி ஜில்லா, இராச வல்லிபுரத்தில், 1896-ஆம் ஆண்டில், பெருமாள் பிள்ளை அவர்களுக்கும் சொர்ணத்தம்மையார்க்கும் புதல்வராய்ப் பிறந்தார். இவர் கார்காத்த வேளாள மரபினர்; சைவ சமயத்தினர். திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியிலும், சென்னைச் சட்டக் கல்லூரியிலும் கல்வி பயின்று B. A., B. L. பட்டங்கள் பெற்றார். தமிழ் மொழியின் மீது பேரார்வமுடைய இவர், தமிழ் இலக்கியங்களைக் கற்று வல்லுந ராஞர். பல ஆண்டுகள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்து பணியாற்றினார். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் தலைமை விரிவுரையாளராக இருக்கின்றார். திருவள்ளுவர் நூல் நயம், வீரமா நகர், கால்டுவெல் ஐயர் சரிதம், ஆனந்தக் குமரன், சிலப்பதிகார விளக்கம் முதலிய பல நூல்கள் இவரால் இயற்றப்பெற்றுள்ளன. பல இனிய கட்டுரைகளையும் வரைந்துள்ளார்.*]

இக்காலத்தில் தன்னரசு பெற்ற நல்லரசுகள் தனிக் கொடியுடையனவாய் விளங்குதல் போன்று, முற்காலத்து மன்னரும் கொடியுடைய கொற்றவராக விளங்கினார்கள். மாநிலங்காக்கும் மன்னரும், தேவரிற் சிறந்த மூவரும், தமக்குரிய தனிக்கொடியோடு திகழ்ந்தார்கள். அண்டங்களைத் தையும் ஆக்கும் தொழிலுடைய அயன், அழகிய அன்னத் தைக் கொடியிலெழுதி அன்னக்கொடியோனுய் அமைந் தான். காக்குந் தொழிலுடைய திருமால், வலிய கலுழனைத் தன் கொடியில் எழுதிக் கருடக்கொடியோன் என்று பெயர் பெற்றான். அழிக்கும் தொழில் கொண்ட அரன், மழ விடையைத் தன் கொடியில் எழுதி விடைக்கொடியோன் என்று வழங்கப் பெற்றான்.

இவ்வாறே முடியுடை மன்னராய் முற்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தரும் அழகிய கொடியுடையோராய் அமைந்திருந்தார்கள். சேரநாட்டை ஆண்டுவந்த அரசன் தன்கொடியில் வில் எழுதி வில்லவன் என்று பெயர்

பெற்ருன். சோழநாட்டை ஆண்டுவந்த அரசன் கடும்புலியைக் கொடியில் எழுதிப் புலிக்கொடியோன் என்று போற்றப் பெற்ருன். பாண்டி நாட்டையாண்ட தென்னவன் கயல்மீனைக் கொடியிலமைத்து மீனவன் என்று பெயர் பெற்ருன். ஆகவே வீரம்செறிந்த சேர சோழ பாண்டியர் வில்லையும், புலியையும், மீனையும் முறையே கொடியில் எழுதி மகிழ்ந்தார்கள் என்பது இனிது விளங்கும்.

இன்னும் மறைந்து நின்று மாயப்போர் புரியும் மாரவேள் மீனக் கொடியோன் என்றும், குழைந்த அன்பர்க்கு அருள் செய்யும் குமரவேள் சேவற்கொடியோன் என்றும் செந்தமிழ் நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நிகழ்ந்த பாரதப் பெரும் போரில் துர்க்குணக் கொழுந்தாய துரியோதனன், நஞ்சுமிழும் நாகக் கொடியோடு நின்ருன். தன்னேரிலாத தருமன், முரசு எழுதிய கொடியோடு முனைந்து நின்ருன். ஆகவே விண்ணரசாளும் தேவரும், மண்ணரசாளும் மன்னரும், தம் மனப்பான்மைக்கு ஏற்ற உருவினைக் கொடிகளிற் பொறித்து அமைத்தார்கள் என்னும் உண்மை இனிதறியப்படும்.

தென்னவன் நாட்டிற்குத் தென்பாலமைந்த கடல் சூழ் இலங்கைக் காவலனுகிய இராவணன், தனது வீரக் கொடியில் வீணையை எழுதி அமைத்தான். தேவரையும் மூவரையும் வென்று, திசையானைகளின் வலியழித்து, மன்னர் மன்னனுய் இலங்கிய இலங்கைநாதன் வீணைச் செல்வமும் வாய்ந்து விளங்கினுன். இவ்வரசனது சபையில் நயம் தெரிந்து பாடவல்ல நாரதன் முதலிய முனிவரும் தேவரும் நல் இசை நிகழ்த்தினுர்கள்.

> "சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
> பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
> வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை
> வாணியின் நாரதன் செவியின் வார்க்கவே"

என்று கல்வியிற் பெரிய கம்பர் கூறுமாறு நரம்பின் நயம் தெரிந்த நாரதன் முறைதிறம்பாது, பாடற்கிசைந்த பண்

ணோடு மறையை இசையிலமைத்து இலங்கை மன்னன் மனமகிழப் பாடினன். இன்னும் இசை வல்லார் பலர் இரா வணனது வீரத்தையும் வெற்றியையும் இசையிலமைத்துப் பாடி இன்புறுத்தினர்கள். இவ்வாறு இசை இன்பம் நுகர்ந்து மகிழ்ந்த இராவணன் நகரமெங்கும் இன்னொலியே நிரம்பி நின்றது. அரசன் வழி நின்ற அரக்கரெல்லாம் ஆடலும் பாடலும் நிகழ்த்தி அகமகிழ்ந்தார்கள். இத் தகைய இசைச் செல்வம் நிரம்பிய இலங்கைமா நகரை நோக்கிய அநுமன், அதன் பெருமையை வியந்து புகழ்ந் தான். நகரமெங்கும் மகர வீணையின் மந்திர கீதமும், ஆட லும், அமிழ்தின் ஆன்ற பாடலும் நிறைந்து நின்ற நீர்மையை,

"பளிக்கு மாளிகைத் தலந்தொறும்,
இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறும்
சோலைகள் தோறும்
அளிக்கும் தேறல்உண்டு ஆடுநர்
பாடுந ராகிக்
களிக்கின் றாரலால் கவல்கின்றார்
ஒருவரைக் காணேன் !"

என்று மாருதி மனமாரப் புகழ்ந்தான். அந்நகரில் வாழ் ந்த மங்கையரும் இசையினும் இனிய சொல்லமைந்தவராய் இலங்கிய பெருமையைக் கண்ட இராமதூதன்,

" குழலும் வீணையும் யாழும்என்(று)
இனையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந்(து)
அளிக்கின்ற மகளிர் "

என்று அவரைப் புகழ்ந்து மகிழ்ந்தான்.

இத்தகைய இனிய குரலமைந்த மங்கையர் இசைத்த பாடலின் இன்சுவையை நுகர்ந்து இலங்கை வேந்தன் இன்புற்றான்.

“ அரம்பை மங்கையர் அமிழ்தகுத்
தாலன்ன பாடல்
வரம்பி னின்னிசை செவிதொறும்
செவிதொறும் வழங்க”

இராவணன் இனிது வீற்றிருந்தான் என்று கவி அரசர் கூறுகின்றார். ·

இவ்வாறு இன்னிசை மாந்தி இன்புற்ற இலங்கை நாதன், நாரத முனிவனும் நயக்குமாறு இசையில் வல்லனு யிருந்தான் என்பது நன்கு விளங்குகின்றது. இறைவன் வீற்றிருக்கும் வெள்ளிமாமலையை அசைத்த வீரனுய இராவ ணன், அப்பெருமானது சேவடிக் கொழுந்தின் சீற்றத் திற்கு ஆற்ருது அம்மலையினுள்ளே அகப்பட்டு நைந்தபோது இனிமையுறப் பாடிய இசையினுக்கு இரங்கி, ஈசன் அருள் செய்தான், என்று வழங்கும் வரலாறு அவ்வரசனது இசைப் புலமைக்கு இணையற்ற சான்ருகும். இவ்வுண்மை,

“ வண்ணமால் வரை தன்னை
மறித்திட லுற்றவல் லரக்கன்
கண்ணும் தோளும் நல்வாயும்
நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற்
பாடிய பாடலைக் கேட்டு
அண்ணலாய் அருள் செய்த
அடிகளுக் கிடம்அர சிலியே”

என்னும் தேவாரத் திருவாக்கால் இனிது விளங்கும். இன் னிசை கேட்ட இறைவன், இலங்கை வேந்தன் செய்த புன் மையைப் பொறுத்து, நெடிய வாழ்நாளும் கொடிய வாளும் ஆர்வத்தோடு அருளினன். இவ்வாளின் வன்மையாலேயே இலங்கைநாதன் கழுகரசனையும், காலகேயரையும், வென் ருன். இவ்வாறு இறைவன் இசையினுக்கிரங்கி அருள் செய்யும் திறத்தினை அறிந்த ஆன்றோர்,

"பண்ணொன்ற இசைபாடும
அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும்
மணிகண்டன் மருவுமிடம்"

என்று போற்றிப் புகழ்ந்தார்கள்.

இவ்வுலகில் இசைத்திறம் வாய்ந்த மக்கள் உயர்ந்தோராகவும், அத்திறம் அமையப்பெறுதவர் நாகரிக மற்றவராகவும் எண்ணப்படுகின்றார்கள். மக்களது கருத்தைக் கவர்ந்து கவலையை ஒழிக்கும் அருங்கலைகளுள் இன்னிசையே தலை சிறந்ததென்று எந்நாட்டினரும் இசைந்து கூறுகின்றனர். நஞ்சுமிழும் கொடியநாகமும், வெம்மை சான்ற வேழமும் இன்னிசையில் இன்புற்று அடங்குமென்றால் இசையின் பெருமையை இசைக்கவல்லார் யாவர்? குழலோசை கேட்ட நாகம் புற்றினின்றும் புதரினின்றும் வெளிப்போந்து அவ்விசையினை நுகர்ந்து இன்புறுதலை இன்றும் கண்கூடாகக் காணலாம். யாழ் ஒலிகேட்ட ஒரு வேழம் தன் வெம்மையை இழந்து அடங்கிப் பணிசெய்த பான்மையைப் பழந்தமிழ் நூலாய பெருங்கதைப் பாராட்டிக் கூறுகின்றது.

ஆகவே நஞ்சுமிழும் நாகமும், மதம்பொழியும் நாகமும் நல்லிசையில் இசைந்து நிற்கும் தன்மை நன்கறியப்படும். இன்னும் அறிவற்ற பொருளாய கருங்கல்லும் இசை இன்பத்தால் நெகிழ்ந்து இளகுமென்று பழந்தமிழ் நூல்கள் பாராட்டுகின்றன. இசைபாடுந் திறமையில் ஒப்புயர்வற்று விளங்கிய தமிழ் முனிவரை இசையில் வெல்லக் கருதிய இலங்கைவேந்தன், புகழ்பூத்த பொதியம் போந்தானென்றும், அரக்கன் கருத்தறிந்த அருந்தவமுனிவர், தமிழ் மணக்கும் திருக்கரத்தில் யாழேந்தி இசைபாட, அருகேயிருந்த கரும்பாறை இளகிற்றென்றும், அதன்மீது அகத்தியர் தம் யாழை வைத்தபோது இளகிய பாறை இறுகி அவ்விசைக் கருவியைப் பற்றிக்கொண்டதென்றும், பாறையை நெகிழ்த்து யாழையெடுக்கக் கருதிய இராவணன்

நெடும்பொழுது பாடியும இளகாத கருங்கல் மீண்டும் அகத்தியனார் பாடியபொழுது நெகிழ்ந்து யாழைக் கை விட்ட தென்றும் பழங்கதை யொன்று வழங்குகின்றது. இத னால் உயிரற்ற பொருள்களையும் உருக்கும் திறம் வாய்ந்த இன்னிசையில், இலங்கை வேந்தன் முத்தமிழ் முனிவர் ஒரு வரைத்தவிர, மற்றைய முனிவர்க்கும், தேவர்க்கும் மேலவனாக விளங்கிய தன்மை இனிதுணரப்படும். இத்தகைய இலங்கை வேந்தன் அரசுபுரிந்த நகரில் எந்நாளும் இன்னொலியே எழுந்து இன்பம் பயந்ததென்றும், அவ்வேந்தன் தங்கை மான பங்கம் அடைந்து இலங்கையிற் புகுந்த நாளிலேயே அழுகுரல் பிறந்ததென்றும் கம்பர் அமைத்துள்ள நயம் சால அழகியதாகும்.

> " முழவினில் வீணையில் முரளி யாழினில்
> தழுவிய குழலினில் சங்கில் தாரையில்
> எழுகுர லின்றியே என்று மில்லதோர்
> அழுகுரல் பிறந்ததவ் விலங்கைக்(கு) அன்றரோ"

என்பது கம்பரது அருங்கவியாகும்.

இவ்வாறு ஏனைய செல்வங்களோடு இசைச் செல்வமும் இனிதுபெற்று, அச்செல்வத்தை மற்றைய செல்வங்களினும் மாண்புடையதாகக் கருதி மகிழ்ந்த இலங்கை மன்னன், உலகலெலாம் புகழும் ஓங்கிய கொடியில் வீணையை எழுதிய தன்மை வியப்பாகுமோ? இத்தகைய மன்னன் இசை யால் உலகாண்டான் என்று கருதல் இழுக்குடையதாகு மோ? இலங்கை வேந்தனைப் போன்று திருந்திய இசை வல் லார் பலர் இவ்வுலகில் இருந்திருப்பினும், அக்கலையில் அள விறந்த ஆர்வமுற்று இறைக்கொடியில் இசைக் கருவியை எழுதியமைத்த பெருமை அவ்வீரனுக்கே உரியதாகும். இன்றளவும் இத்துறையில் அவ்வீரனை வென்றார் எவரு மிலர். இசைக்கொடியோடு இலங்கையை ஆண்ட இராவ ணன், தன் இசைக்கொடியை இவ்வுலகில் எவரும் அசைக்க இயலாதவாறு நிலைநிறுத்தினன்.

# 14. நாலந்தாப் பல்கலைக் கழகம்

## வித்துவான் மு. வரதராசனர் அவர்கள்

[திரு. வரதராசனர் அவர்கள், வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூரில், முனிசாமி முதலியார்க்கும், அம்மாக்கண்ணம்மையார்க்கும் புதல்வராய்ப் பிறந்தார். இவர் தமிழ்மரபினர். திருப்பத்தூர் பேராசிரியர் ஆ. கு. முருகைய முதலியாரவர்களிடம் தமிழ் பயின்றவர். இவர் தமிழில் வித்துவான் தேர்வில் மாகாணத்தின் முதல்வராகத் தேறி அதற்கென ஆண்டுதோறும் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபரால் கொடுக்கப்பட்டுவரும் ஆயிர ரூபாய்ப் பரிசினை 1935-ஆம் ஆண்டில் பெற்றார். இவர் ஆங்கிலத்தோடு அருந் தமிழையும் கற்று B. O. L. பட்டமும் பெற்றுள்ளார். சிறிது காலம் திருப்பத்தூர் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருந்து, இப்பொழுது சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருக்கின்றார். இவர் பல இனிய கட்டுரைகளை எழுதியுள்ளார்.]

உயர்தனிச் செம்மொழிகள் பலவும் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே கலைவளம் நிறைந்து விளங்கின. இந்தியாவில் அத்தகைய சிறப்புடன் விளங்கிய மொழிகள் தமிழும் வடமொழியுமே ஆகும். அவற்றுள், இயற்கையாய்த் தோன்றிய தொன்மையும், பேச்சுவழக்கு என்னும் நன்மையும் வாய்ந்தது தமிழ் மொழியே. ஆயினும், ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பண்டைத் தமிழ்ச் செய்யுட்களும் மொழியியல் ஆராய்ச்சியுமே அல்லாமல், தமிழ்க்கலையின் தொன்மையை விளக்கத் தக்க சான்று பிறிதொன்றில்லை எனச் சிலர் குறை கூறுவர். பழமைக்குப் பெயர் பெற்ற தமிழ் நிலத்தில் (கடல் கொண்ட நாடுகளும் ஆறுகளும் மலைகளும் நீங்க எஞ்சி நின்ற) பல இடங்களில் புதைபொருளாராய்ச்சியாளர் தம் கடமையைச் செய்ய முன்வருவரேல், பிற சான்றுகள் கிடைத்தல் அரிதன்று. வடநாட்டில் மொஹெஞ்சொதாரோ, ஹரப்பா என்னும் இடங்களில்

தோண்டி எடுத்த பொருள்களால் உண்மைகள் பல விளங் கலாயின அல்லவோ? வட நாட்டில் அங்ஙனம் ஆராய்ச்சி செய்யப் பெற்ற இடங்கள் பலவற்றுள் பாட்னுவுக்கு அரு கிலுள்ள **நாலந்தா** ஒன்று. நாலந்தா ஆராய்ச்சியால், பௌத்த சமயம் பண்டைக்காலத்தே உற்றிருந்த உயர்நிலை யும், அச் சமயம் கலைவளர்ச்சிக்கு ஆற்றிய அரிய உதவி யும் விளங்கலாயின.

புத்தர் பெருமான் அருளால் தோன்றிய அற நிலையங் கள் கலைவளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு அளவிடற் பால தன்று. கலையறிவு ஓங்கியதொரு காலத்தில் கலைக் கழகங் கள் தோற்றங்கொள்ளுதல் இயற்கை. ஆயினும், அவற்றின் தோற்றத்திற்கும் விளக்கத்திற்கும் இடையூறாக நாட்டின் கண் வறுமையும் குழப்பமும் இருத்தல் ஆகாதன்றோ? ஆதலின், அறவழிப்பட்ட நல்லரசு நிலவிய ஐந்தாம் நூற் றாண்டில் கலைக் கழகங்கள் பல விளங்கின என்றும், அவற் றுள் தலையானது நாலந்தா கலைக்கழகம் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

வடநாட்டைச் சமுத்திரகுப்த மன்னனும் அவன் வழிவந்தோரும் ஆண்டுவந்த காலத்தில், சமய உணர்வும் நல்லொழுக்கமும் மக்களிடையே நிறைந்திருந்தன; சமயத் தின் பெயரால் நிகழும் போர்கள் இல்லை. அம்மன்னர் கலை ஞரைப் போற்றி ஊக்கமளித்தனர்; வகுப்பு வேற்றுமையும் சமய வேற்றுமையும் கருதாது புலவர் அனைவரையும் போற் றினர். இக்காரணங்களால், முதலில் பௌத்த சமயச் சார்பாக நிறுவப்பெற்ற நாலந்தாச் சங்கம், பெரியதொரு பல்கலைக் கழகமாய் வியக்கத்தக்க முறையில் மேன்மேலும் ஓங்குவதாயிற்று. குப்த மன்னரும் தம் செல்வத்தைப் பயன்படுத்தும் வழி இதுவே எனக்கருதி அந் நிலையத்திற்குப் பெருங்கொடை அளித்து வந்தனர்.

நாலாந்தாப் பல்கலைக் கழகத்தில் சில திங்கள் தங்கிப் பயின்ற ஹியூன் சியாங் என்ற சீனர், அக் கழகக் கட்ட டங்களைப்பற்றி எழுதியுள்ள குறிப்புக்களால், அங்கு ஆறு

கல்லூரிகள் இருந்தன என்பது அறியப்படும். புதை பொருள் ஆராய்ச்சியாலும் அஃது உண்மை என்பது வெளியாயிற்று. அவற்றுள் பல, மூன்று அல்லது நான்கு அடுக்கு மாடம் கொண்டவையாம்.

திபேத்தில் கிடைக்கும் பௌத்த நூற் குறிப்புக்களால், நாலந்தாவில் பெரிய நூல் நிலையம் இருந்தது என்பதும், அதனைத் தருமகஞ்சம் என வழங்கினர் என்பதும், நூல் நிலையக் கட்டடங்கள் மூன்று என்பதும், அவற்றை இரத்தின சாகரம், இரத்திநோததி, இரத்தின ரஞ்சம் என்னும் பெயர்களால் வழங்கினர் என்பதும், இரத்திநோததி என்ற கட்டடம் ஒன்பது அடுக்குக் கொண்ட மாடம் என்பதும் அறியப்படும்.

அக்காலத்தே வேறு பல இடங்களிலும் சிறந்த கலைக் கழகங்கள் விளங்கின. அவற்றில் பல்லாண்டு பயின்ற மாணவர், மேலும் தேர்ச்சிபெறக் கருதி நாலந்தாவிற்கு வந்து பயின்று பயன்பெற்றுச் சென்றனர். பிற கழகங்களில் எவ்வளவு கற்றபோதிலும், நாலந்தா தந்த பயிற்சி இல்லையேல், அஃது எவர்க்கும் குறையாகவே இருந்து வந்ததாம். இதனைக் கருதுமிடத்து, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் என்னும் ஆங்கிலப் பல்கலைக் கழகங்களின் நினைவு வருகின்றது அன்றோ?

நாலந்தாவில் அளிக்கப்பெற்ற பயிற்சி முறைகள் எவை? நூற்றுக்கணக்கான மாணவர் குழுமியிருக்கும் கூட்டத்தில் ஆசிரியர் தோன்றிச் சொற்பொழிவாற்றிவிட்டுச் செல்லும் முறை அருகியிருந்தது. மாணவர் நிலையினைத் தனித்தனியாக அறிந்து அவரவர் உளங்கொளக் கூறும் முறையே பெருகி யிருந்தது. அன்றியும், ஒரு கருத்தினை ஒட்டியும் வெட்டியும் நிகழும் சொற்போர்கள் காலைமுதல் இரவுவரை இருந்து வந்தன. அவற்றைக் கேட்டறிதலாலும், அவற்றில் கலந்துபேசிப் பயிறலாலும் மாணவர் பயன்பெற்றனர். சமயத்துறையில் நீண்ட சொற்பொழிவுகள் நடைபெற்றன. மாணவர் மேற்கொண்ட எழுத்துப் பயிற்சி ஒன்றே;

அஃதாவது, சுவடிகளைப் பெயர்த்தெழுதலே என்பர் ஆராய்ச்சியாளர்.

சைனு, திபேத் முதலான நாடுகளிலிருந்தும் பலர் அங்கு வந்து கற்றனர். இங்ஙனம் இந்தியாவின் அகத்தும் புறத்தும் உள்ள பல நாடுகளிலிருந்தும் வந்து பயின்ற மாணவர் தொகை ஒரு காலத்தில் ஏறக்குறைய நாலாயிரமாக இருந்ததாம். ஹர்ஷமன்னன் அருங்கலை விநோதனுய்க் கூட்டியதோர் அவையின்கண் நாலந்தாவிலிருந்து புலவர் ஆயிரவர் வந்திருந்தனர் எனின், அதன் பெருமையை என்னென்பது? அக்காலத்தே, ஜாவா, சுமத்திரா என்னும் தீவுகளை ஆண்ட அரசன் ஒருவன் நாலந்தாவின் பெருமையைக் கேள்வியுற்றுத் தனது தொண்டாக விளங்குமாறு அங்கே (நாலந்தாவில்) ஓர் அறநிலையம் நிறுவினன் என்பர்.

நாலந்தா, மாணவர் மாண்புறக் கற்கும் கலைக்கழகமாகவும், துறவிகள் தூயராய் வாழும் அருட்கோயிலாகவும், பழஞ் சுவடிகள் பலவும் பாதுகாக்கப்பெறும் நூல்நிலையமாகவும், பிணியாளர்க்கு மருந்தும் இரவலர்க்குப் பொருளும் வறிஞர்க்கு வாழ்வும் அருளவல்ல அறநிலையமாகவும் விளங்கியதெனக் கல்வெட்டு ஒன்று கூறுவதும் கருத்திருத்தற்பாலது.

இங்ஙனம் பல நூற்றுண்டுகளாக உலகிற்குப் பயனளித்துவந்த நாலந்தாப் பல்கலைக் கழகத்திற்கும் முடிவு நேர்ந்தது. பதின்மூன்ரும் நூற்றுண்டின் தொடக்கத்தில் முகம்மதியர் படையெடுத்துச் சென்று வானுற ஓங்கிய கட்டடங்களை அழித்து, மாணுறக் கற்ற துறவிகளை அலைத்தனராம். பௌத்த சமயம் புத்தமதம் செல்வாக்கு இழந்தமைக்குக் காரணம் பலவும் நாலந்தா புத்துயிர் பெருமைக்கும் காரணமாயின.

# 15. கப்பலோட்டிய தமிழன்

### த. சே. உமாபதி

**கா**லத்திற்கேற்ற கொள்கைகளைக் கைவிட்டுக் கடந்த காலக் கோட்பாடுகளைக் கொண்டொழுகுவோரைச் 'சுத்தக் கர்நாடகம்' என எள்ளி இகழ்வதும், எதிர்காலத்திற்கேற்றவையும் தம்காலத்திற்கு ஒவ்வாதவையுமான செய்கைகளில் ஈடுபடுவோரைச் 'சுத்தப் பைத்தியம்' என்று கூறிப் புறக்கணிப்பதும் உலக இயல்பு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களும், சி. சுப்பிரமணிய பாரதியாரும் பின்னர்க் குறித்த வகையினரெனல் பொருந்தும். ஏன்? அவர்தம் செயல் முறைகளைச் சிந்திக்க! அவர்தம் வாழ்நாட்களில் தாழ்ந்திருந்தமைக்குக் காரணம், தமிழ் மக்கள் அன்னாரின் அரும்பெரும் செயல்களின் ஆழ்ந்த நோக்கங்களை அன்றே அறிந்து போற்றாமையே அன்றோ?

**வ. உ. சிதம்பரம் பிள்ளை**யவர்கள் 1873-ஆம் ஆண்டில், திருநெல்வேலி ஜில்லா, தூத்துக்குடியை அடுத்த **ஓட்டபிடாரத்தில், உலகநாத பிள்ளை**யின் தவத்தால் உதித்தார். அவர் தொடக்கத்தில் கல்வி பயின்றது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமே. 'விளையும்பயிர் முளையிலே' என்பதுபோல இளமையிலேயே பிள்ளையவர்களின் இதயத்தில் இன்றமிழ் வித்து ஆழ்ந்து பதிந்து வளர்வதாயிற்று. செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பாடசாலையில் ஆங்கிலம் பயின்று 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையிலும், பின்னர் வழக்கறிஞர் பரீட்சையிலும் (Pleadership Examination) தேர்ச்சிபெற்றார். பிள்ளையவர்கள் தமது வழக்கறிஞர் தொழிலை ஓட்டபிடாரத்திலேயே துவங்கினாரேனும், நண்பர்களின் வேண்டுதலுக்கிணங்கி தூத்துக்குடிக்குச் செல்லவேண்டியதாயிற்று. இவர் வயதில் இளைஞராயிருந்தும், பிற வழக்கறிஞர் இவரைக் கண்டு பொறாமை கொள்ளும் வண்ணம், தொழிலைத் திறம்பட நடத்திவந்தார்.

இவர் தாய் நாட்டின்மீது தம் நாட்டம் செலுத்த ஆரம்பித்த காலம் இதுவே. ஆக்க வேலைகளில் ஊக்கம் செலுத்த ஆரம்பித்த காலமும் இதுவே. இவரது தமிழ்த்தொண்டு 'விவேகபானு' என்ற திங்கள் வெளியீட்டின்மூலம் தலை காட்டத் தொடங்கியது. இதற்குத் துணை செய்தவர் **சுவாமி வள்ளிநாயகம்** அவர்கள். இவ்வெளியீட்டின் மூலம் ஆசார சீர்திருத்தம், மதுவிலக்கு முதலிய சமூக முன்னேற்ற வேலைகளைச் செய்து வரலானார்.

வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி தொடங்கி வலுத்த அக்காலத்தில், மக்களிடையே நாட்டுப் பற்றும், பிற நாட்டுப் பண்டவிலக்கு எண்ணமும் பெருகின. இப் புத்துணர்ச்சிகள் பிள்ளையவர்களின் உள்ளத்தையும் கொள்ளைகொண்டன. அவர்தம் நாட்டுப் பற்றாகியதீ எழுநாவிட்டு எரியத் தொடங்கியது. தம்மிடமிருந்த அந்நிய ஆடை, பொருள் ஆகியவற்றை அழற்கடவுளுக்கு அர்ப்பணம் செய்யுமாறு அன்றே கல்கத்தாவிற்கு அனுப்பிவைத்தார். அதுமுதல் அந்நியப் பொருள் எதுவும் அவர் வீட்டில் இருந்ததில்லை. அதிகம் அறைவானேன்? அந்நியக்கத்தி வைத்துள்ள நாவிதனிடம் அவர் சவரம் செய்துகொள்வதில்லை. இது சிலருக்குப் பைத்தியக்காரச் செயலாகத் தோற்றலாம். ஆனால் அது நாட்டுப் பைத்தியமன்றோ!

பிள்ளையவர்களின் இத்தகைய மனப்பான்மை பெருகி வளர்தற்குப் பிறிதொரு வாய்ப்பும் நேரிட்டது. அதாவது, தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் இடையே வணிகப் பண்டங்களை 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யின் கப்பல்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. இக்கம்பெனி ஆங்கிலர் கையிலிருந்தது. நாட்டில் தோன்றிய சுதேசி இயக்கத்தை அவர் வெறுத்தனர். அவர் இந்திய வியாபாரிகட்குப் போதிய வசதி அளிக்கவில்லை என்ற எண்ணம் வியாபாரிகளிடையே பரவியது. எனவே, தூத்துக்குடி வணிகர் தாமே கப்பலோட்டத் துணிந்து அதை ஈடேற்றுவிக்க பிள்ளையவர்களின் துணை

யை நாடினர். 1906-ஆம் ஆண்டில் பிள்ளையவர்களின் பெரு முயற்சியால் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' தோன்றியது. அன்றுமுதல் இச்சங்கத்திற்குப் பங்காளிகள் சேர்க்கும் பணியில் பிள்ளையவர்கள் பாரதநாடு முற்றிலும் பவனி வந்தார். ஆங்காங்கு மக்களிடையே உணர்ச்சி ததும்பப் பேசினர்; மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். இந்தியாவின் ஆக்கத்திற்குக் கைத்தொழிலும், வாணிக வளர்ச்சியும் இன்றியமையாதன என மக்கள் உணரத் தலைப்பட்டார்கள்.

பிள்ளையவர்களின் ஊக்கத்தாலும், உலையா உழைப்பாலும் இரண்டாண்டுகள் கப்பற் கம்பெனி இனிது நடைபெறுவதாயிற்று. 1908-ஆம் ஆண்டில் 'சூரத் காங்கிரஸ்' கூடியது. நெல்லையில் பிள்ளையவர்களால் 'தேசாபிமானச் சங்கம்' காணப்பட்டது. பழம் பெரு வீரரான சுப்பிரமணிய சிவாவும், பிள்ளையவர்களும் பல கூட்டங்களில் பேசி மக்களிடையே பெரும் புத்துணர்ச்சியை உண்டாக்கினர். பல்வகையான அல்லல்களுக்கு ஆளாகியிருந்த பருத்தி ஆலைத் தொழிலாளர்களிடையே இவர்களின் பேச்சுக்கள் புரட்சியை உண்டாக்கின. தங்கள் உரிமை கோரி அத்தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அக்காலத்தில் ஏழைத் தொழிலாளர்க்குப் பிள்ளையவர்கள் உணவு அளித்ததுமன்றி, தொழிலாளர் சார்பாக ஆலை முதலாளிகளிடம் பேசி அமைதி நாட்ட முயன்றார். ஆனால் முதலாளிகளோ, இவைகட்கெல்லாம் பிள்ளையும், சிவாவுமே காரணமென அரசியலாரிடம் முறையிட்டனர். இச் சமயத்தில்தான் சிறையிலிருந்த வீரத்தியாகி விபின சந்திர பாலர் விடுதலை அடைந்தார். அவரை வரவேற்கத் தூத்துக்குடியில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதிற் பிள்ளையவர்கள் கலந்து கொள்ளலாகாதென அரசியலார் தடை செய்ததுடன், கூட்டமும் நடத்தலாகாதெனத் தடுத்தனர். சுதேசிக் கப்பற் கம்பெனி நிர்வாக உறுப்பினரும் அக்கூட்டத்திற் கலந்துகொள்ளவேண்டாமெனப் பிள்ளையவர்களை வேண்டினர். பிள்ளையவர்கள் இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தின

ரில்லை. ஊர்வலம் நடத்திச் சென்று, கூட்டத்தில் சொற்பொழிவாற்றியதன் பயனாக அவரும், சிவாவும் சிறை செய்யப்பட்டனர்.

ஜில்லா நீதிபதி பின்ஹோ துரை முன் வழக்கு விசாரணை நடைபெற்றது. அரசநிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டுப் பிள்ளையவர்கள் ஆயுள்வரை அந்தமான் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். சென்னை உயர் நீதிமன்ற மறுவழக்கில் ஆயுள் தண்டனை ஆறு ஆண்டளவாகக் குறைக்கப்பட்டதே யன்றி நாடுகடத்தல் தண்டனை மாறவில்லை. பின்னர் பிள்ளையவர்களிடம் பேரன்புடையவர்களின் முயற்சியால் 'இங்கிலாந்து விசாரணை' (Privy Council) நடைபெற்றதில் 'நாடு கடத்தல்' நீங்கி ஆறாண்டு கடுங்காவல் தண்டனை மட்டும் அனுபவிக்க நேர்ந்தது.

பிள்ளையவர்கள் கோயமுத்தூரிலும், கண்ணனூரிலுமாகத் தமது சிறை வாழ்க்கையைக் கழித்தார். அக்காலத்தில் சிறை வாழ்க்கை என்பது மிகக் கடுமையானது. இன்றுள்ளனபோல் வகுப்பு முறைகளும், பிற வசதிகளும் அன்றில்லை. அரசியல் கைதிகட்கெனத் தனி உரிமைகள் எதுவும் வழங்கப்படவில்லை. பிற குற்றவாளிகளுடன் சிறிதும் வேற்றுமையின்றி, அரசியல் குற்றவாளிகளும் கடுமையாக நடத்தப்பட்டனர். பிள்ளையவர்களின் கைகள் செக்கிழுத்தன! கற்களை உடைத்தன! அக்காலத்தும் அவர், தாய் நாட்டையும் அதன் மக்களையும் சற்றும் மறந்தாரில்லை. கிடைத்த ஓய்வு நேரங்களை வீணேபோக்காமல் பல அரிய நூல்களை இயற்றினார். அகமே புறம், மனம்போல வாழ்வு என்ற சிறந்த நூல்களும், திருக்குறள்-அறத்துப்பால்-ஆங்கில மொழிபெயர்ப்பும் கோயமுத்தூர் சிறையில் தோன்றின. கண்ணனூர் சிறையில் 'மெய்யறிவு' இயற்றப்பட்டது.

1912-ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் விடுதலைபெற்றார். சென்னை மயிலாப்பூரிலும், பெரம்பூரிலும் சில ஆண்டுகளைக் கழித்தார். அக்காலத்தில்தான் தொல்காப்பிய எழுத்ததி

காரம்-இளம்பூரணம்போன்ற பண்டைய நூல்களை அரிதின் முயன்று தேடிப் பதிப்பித்தார். அரச நிந்தனைக் குற்றத் தின்போது பிடுங்கப்பட்ட 'வழக்கறிஞர் சன்னத்து' சென்னை நீதிபதி இ. எஸ்.வால்ஸ் என்பவரின் பேருதவி யால் திரும்பக் கிடைத்தது. பின்னர் சிலகாலம் கோயில்பட் டியில் தங்கி, மீண்டும் தூத்துக்குடியை அடைந்து, திருச் செந்தூர் சுப்பிரமணியர் கோவிலின் தருமகர்த்தா கந்த சாமி ரெட்டியார் ஆதரவில் இருந்துவந்தார்.

திரு. பிள்ளையவர்கள் சிறையிலிருந்தகாலையில், அவரது குடும்பத்திற்குப் பால கங்காதர திலகரும், ஆப்பிரிக்காவி லிருந்த வேதியப் பிள்ளையவர்களும் திங்கள்தோறும் தலைக்கு ரூபாய் ஐம்பது அனுப்பிவந்தனர். பிள்ளையவர் கள் தூத்துக்குடியில் சிறப்பாக வாழ்ந்தகாலையில் புது வீடு ஒன்று கட்டிப் புதுமனைபுகுவிழா நடத்தினர். இவருக்குச் சிறந்த நண்பராயிருந்த சுப்பிரமணிய பாரதியாரவர்கள் 'காணிநிலம் வேண்டும்' என்ற பாடலை அப்பொழுதுதான் பாடினர். பிள்ளையவர்கட்குப் பாரதியாரின் பாடல்களில் விருப்பம் அதிகம். அவற்றை அவர் தம் இறுதிக் காலத் திலும் இடையறாது கேட்டு மகிழ்ந்தார்.

இத்தகைய தேசத் தியாகியை, தந்நலமற்றவரை, இறு திக் காலத்தில் எவரும் கவனித்தாரில்லை. பிள்ளையவர் கள் நொந்த நிலையில், வெந்த உள்ளத்தினராய்ச் சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து 63-ஆம் வயதில் தமது பூத உடலை நீத்துப் புகழுடம்பை நிறுத்தினர்.

**பிள்ளையவர்களின் அரிய குணங்கள் :** அன்பும் அருளும், உழைப்பும் ஊக்கமும், வீரமும் கொடையும் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. நம் நாடு விடுதலை பெறவேண் டின், உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யச் சிலரேனும் முன்வரவேண்டுமென்பதைச் சொல்லள வில்மட்டும் கூறாது செயலிலும் காட்டியவர் பிள்ளையவர்கள்.

**கொள்கை மாறாக் கோமான் :** 'வறுமையை நீக்கு' 'உரி மைக்குப் போராடு' 'சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே' என்

பின் அவர்தம் சீரிய கொள்கைளாம். 'சுயராஜ்யமே நமது பிறப்புரிமை' என்று சுதந்திர முழக்கம் செய்த திலகரைப் பின்பற்றியவர் பிள்ளைவயர்கள். எனவே திலகரின் சீடர் என்வும் கூறப்பட்டார். காந்தியடிகள் ஆதிக்கம் காங்கிரசில் வலுத்தபிறகு, கருத்து வேறுபாட்டால் விலகி அஞ்ஞாதவாசம் புரிந்தாரேயன்றி அந்நியக்கட்சி எதிலும் சேர்ந்தாரில்லை. தம் கட்சியையும் எதிர்த்தாரில்லை. ஏன்? அவர் விரும்பியதெல்லாம் நாட்டு விடுதலை ஒன்றே!

**கடமையை உணர்ந்தவர்:** வாணிகம், கைத்தொழில் இரண்டுமே நாட்டிற்கு உரிமை நல்கும் என்பதை உறுதியாக நம்பினர். அவற்றின் முன்னேற்றத்திற்கு உழைப்பதையே தமது முதற் பணியாகவும் கொண்டார். 'தமிழரிடம் மீண்டும் கடல் தாவு கலையைக் கற்றுக்கொடுப்பேன்' எனக் கங்கணம் கட்டினர்; கப்பற் கம்பெனியைக் கண்டார். 'என் மனைவியையும் புத்திரனையும் கடவுளிடம் ஒப்படைத்துள்ளேன்; எங்களுக்கு எது நன்மை என்பதை என்னை விட அவர் நன்குணர்ந்தவர்' எனப் பம்பாயிலிருந்து தூத்துக்குடியிலிருந்த தமது நண்பர் ஒருவருக்கு எழுதினர், அவர்கள் நோயுற்றிருக்கின்றனர் எனக் கேட்டஞான்று! கடமையில் அவருக்கிருந்த கவலையை விளக்க இதைவிட வேறு என்ன காட்டு வேண்டும்?

**தன்னலங் கருதாத் தறுகணாளர்:** தன்னல மறுத்தலும் பிறர் நலம் பேணுதலும் பிள்ளையவர்களின் பிறவிக்குணம். அரச் நிந்தனைக் குற்றத்திற்காக அரசியலார் சிறைசெய்த காலையில் தம்முடன் சிறைப்பட்ட சிவா அவர்கட்கும் ஜாமீன் கொடுத்தால்தான் தாமும் ஜாமீனில் வர உடன்படுவதாய்த் தமக்கு ஜாமீன் கொடுத்து மீட்கவந்த நண்பர்களிடம் சாற்றினர். சுதேசிக் கப்பல் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டால் லக்ஷம் ரூபாய் தருவதாய்ச் சிலர்கூறியதையும் சுத்தவீரரான பிள்ளையவர்கள் மறுத்தார் என்றால் எதனல்? தந்நலமற்ற தன்மையாலன்றோ!

**நன்றி மறவா நன்னெறியாளர்:** நன்றி மறவாமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினர் இவர். சுதேசிக் கப்பல்

கம்பெனி வேலையில் ஊக்கங்காட்டி உதவிய ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார் தமது 'சன்னத்'தைத் திரும்ப வாங்கிக்கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது மற்றொரு பிள்ளைக்கு வாலீஸ்வரன் என்ற பெயரை இட்டார். வேதியப் பிள்ளையின் ஞாபகமாகத் தமது மகளுக்கு வேதவல்லி என்று பெயர் சூட்டினர். இவ்வாறு பல்லாற்றாலும் உதவி புரிந்த பலருக்கும் தமது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

**தமிழ் மாண்பு கண்ட தகைசால் வீரர் :** *பிள்ளையவர்கள் தமிழில் சிறந்த பயிற்சி உடையவர்; பண்பு மிக்க பத்திராசிரியர்; நுண்ணறிவுள்ள நூலாசிரியர்; பரந்த நோக்குடைப் பதிப்பாசிரியர்; செய்யுள் வல்ல செந்தமிழ்ப் புலவர்; இரு மொழி வல்ல மொழிபெயர்ப்பாளர். இவரது புலமை, பூவை-கலியாணசுந்தர அடிகள், திருமணம்-செல்வக்கேசவராய முதலியார்போன்ற புலவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளதெனின் வேறென்ன வேண்டும்?*

**வெள்ளையர் நடுக்குறு வீர வாழ்க்கையர் :** *துப்பாக்கி பிடித்த சிப்பாயைக் கண்டால் 'அப்பா' என்றோடித் தப்பாது தலை மறைத்துக்கொள்ளும் இயல்புள்ள காலத்தில்— 'அடி, அம்மா! வெள்ளைக்காரனுக்கு விரோதமாமே!' என்று விதிர்விதிர்க்கும் காலத்தில், பிள்ளையவர்கள் பெயர் ஒன்று மட்டுமே வெள்ளையரிடையே பேரச்சத்தை உண்டாக்கிற்று. 'பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணமும் உயிர்த்தெழும்; அடிமைப் பட்ட தேசம் ஐந்து நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்' என, இவரைத் தண்டித்த பின்ஹே துரை கூறினரென்றால் இவரது வீரத்தை விளக்க வேறென்ன வேண்டும்?*

**முக்கால மூணர்ந்த மூதறிஞர் :** *பிள்ளையவர்கள் இவ்வுலகைப் பிரியும் தருவாயில், அதாவது 1936-ஆம் ஆண்டிலேயே, 'கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்தியா சுதந்திரம்பெறுவது திண்ணம்' எனக்கூறிப்*

போந்தார். அவரது ஆழ்ந்த அரசியலறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது! அவர்தம் வாக்குப் பொய்க்காதிருக்க இறைவன் அருளுவானாக!

**முடிவு:** பிள்ளையவர்களை வடநாட்டார் அறிந்துவைத்த அளவு தமிழ் நாட்டார் தெரிந்துவைக்கவில்லை எனத் துணிந்து கூறலாம். திலகர், லஜபதிராய் ஆகியோரின் நன்மதிப்பிற்குரியவராய் வாழ்ந்தார் நம்பிள்ளையவர்கள். மேலும், 1935-ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் இராஜேந்திர பிரசாத் தூத்துக்குடிக்குச் சென்றிருந்தகாலையில், நோய்வாய்ப் பட்டிருந்த பிள்ளையவர்களை வீட்டிற் சென்று கண்டார். 'சிதம்பரம் பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும்பாக்கியம் எனக்குக் கிடைத்தது ; அவர் சிறை சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்துத் தேசாபிமான ஆர்வத்தால் உந்தப் பட்டவர்களில் யானும் ஒருவன்' என்று பிரசாத் அன்று கூறினார்.

இனி ஆங்கிலேயன் ஒருவன் ஒரு தேசபக்தனிடம் கூறுவதாகப் பாரதியார் இயற்றிய,

"கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய்"

என்ற பாடற்பகுதி, பிள்ளையவர்களின் செயலை மனத்தி லுன்னியே எழுந்தது என்று கூறுவதில் என்ன பிழையுளது? 'கப்பலோட்டிய தமிழன்' என்று இவரைப் புகழ்வது ஏன் பொருந்தாது?

# 16. கிராமம்: பண்டும் இன்றும்

**வித்துவான் அன்பு. கணபதி**

'கிராமத்திற்குப் போ' என்ற கூச்சல் இன்று நகரங்களில் கேட்கின்றது. கிராமமாவது யாது? கிராமத்தின் பண்டைய நிலை என்ன? அஃது இன்றெவ்வாறுள்ளது? என்பனவற்றிற்கு விடை காண்டல் இன்றியமையாததாகின்றது.

கிராமம் என்பது பண்டு, ஊர் என்று அழைக்கப்பட்டு வந்தது. ஏன்? இன்றும் பல விடங்களிலும் ஊர் எனவே வழங்கக் காண்கின்றோம். ஊர் என்பது தனித் தமிழ்ச் சொல்.

**பண்டைய கிராமம்:** பல நாடுகள் சேர்ந்த ஒன்றிற்கு உலகம் என்பது பெயர். சேர சோழ பாண்டி நாடுகள் சேர்ந்த நிலப்பரப்புத் தமிழுலகம் என வழங்கப்படுகிறதன்றே! 'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என்ற பனம்பாரனாரின் வாக்கு இதனை வலியுறுத்துகின்றது காண்க. இனி, அந்நாடுகள் பல வளநாடுகளாகவும், கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன; அக்கோட்டங்கள் பேரூர்களெனவும், சிற்றூர்களெனவும் பிரிக்கப்பட்டிருந்தன; அவ்வூர்கள் பல வட்டாரங்களாகப் (Ward) பிரிக்கப்பட்டிருந்தன எனவும் அறிகின்றோம். ஆதியில் வீடுகளும், அரண்மனைகளும் நகர் என்ற பெயரால் அழைக்கப்பட்டன. பின்னரே, நாடுகளின் தலைநகரங்கள் பெரும்பாலும் நகர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தன என எண்ணுதல் ஏற்புடைத்து.

'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்றாங்குப் பெயரளவில் ஊர் என்றிருந்தாலும், எல்லாவற்றையும் அக்கால மக்கள் ஊரென அழைத்தார்களில்லை. 'ஊரெனப் படுவது உறையூர்' என்ற தொடரை உன்னுக.

நிற்க, அன்றைய ஊர், அதாவது கிராமம் எவ்வாறிருந்தது என்பதைச் சற்று நுணுகி ஆராய்வோம். கிராமமே அன்றைய நாட்டின் உயிர் நாடியாக இருந்தது.

'விசும்பில் துளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

என்று எவ்வாறு வள்ளுவனார் நாட்டு நலத்திற்கு மழை இன்றியமையாததென்கின்றாரோ, அவ்வாறே நாட்டு முன்னேற்றத்திற்குக் கிராம வளப்பமும் இன்றியமையாததாக விருந்தது; இருக்கின்றது. உழவே இத்தகைய கிராம மக்களின் பண்டைய தொழிலாக இருந்தது. உழவுக்கருவிகள், ஆடைகள், அணிகலன்கள் செய்வதற்கெனத் தச்சன், கொல்லன், சேணியன், தட்டான் முதலிய தொழிலாளரும் கிராமத்தில் வாழ்ந்துவந்தனர். மேலும் தலையாரி, வெட்டியான், நீராணிக்காரன், காவற்காரன் முதலிய பணியாளர்களும் அவண் வதிந்தனர்.

ஒவ்வோர் ஊரிலும் ஐந்து பேர்கள் கூடிய பஞ்சாயத்து சபை அல்லது ஊராண்மைக் கழகம் என்ற ஒரு கழகம் இருந்தது. ஊரின் நன்மைக்கான பணிகளை, அதாவது வாய்க்கால் வெட்டுதல், வழக்குகளை விசாரித்தல், திருவிழாக்களை நடத்துதல் முதலிய காரியங்களை இவர்கள் கவனித்து வந்தார்கள். இவர்கட்கு நாட்டாண்மைக்காரர் என்பது பெயர். இவர்களைப் பொது மக்களே தேர்ந்தெடுப்பர். 'குடவோலை எடுத்தல்' என்ற தொடர், இக்காலத்தேபோல் அன்றும் தேர்தல் உண்டு என்பதைவலியுறுத்துகின்றது. அன்று கிராமங்கள் பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்று கூறினேம். ஒவ்வொரு வட்டத்திலும் நாட்டாண்மைத் தேர்தலுக்கு நிற்க விழைபவர்களின் பெயர்களை எல்லாம் வருவித்து, அவைகளை ஓலை நறுக்குகளில் தனித் தனியாய் எழுதி ஒரு குடத்தில் பெய்து அதனை மூடிப் பொறியிட்டு வைப்பர். பின்னர் ஒரு நாள் எல்லா மக்களும் கூடி ஒரு சபையிலே, ஊரறிஞர்களின் முன்னிலையில் அக்குடத்தின் வாயினை அவிழ்த்து, ஒரு சிறுவனை விளித்துக் குடத்திற்குள் கையைவிட்டு ஓலைகளை எடுக்கச் சொல்வர்.

முன்னதாக எடுக்கப்பெறும் ஐந்து ஓலைகளில் வரையப்பட்டுள்ள பெயர்கள் உடையவர்களை நாட்டாண்மைக்காரர்களாக அனைவரும் ஒப்புக்கொள்வர். இந் நாட்டாண்மை, பரம்பரையாக வரக்கூடியது. எனவே, அடிக்கடித் தேர்தல் எங்ஙனம் நிகழும் என்ற வினா எழலாம். சந்ததி அற்றுப் போகும் காலத்தில் தேர்தல் நிகழ வேண்டியதுதானே முறை? மேலும் மேற்கூறிய நாட்டாண்மைக்காரர்களில் எவரேனும் கையூட்டுப் பெற்றார் என்று தெரிந்தால், அவர்களின் நாட்டாண்மை உரிமை பறிக்கப்பெறும்.

இந்த ஐவரும் தனித்தனியே ஒவ்வொரு காரியங்களைப் பார்ப்பார்கள். தோட்டவாரியம், நீர் வாரியம், பொன் வாரியம் என்று பல வேலைகளாகப் பிரித்துக் கொண்டு, ஒருவர் நிலத்தை அளப்பது வரி வாங்குவது முதலிய காரியங்களைக் கவனிப்பார்; வேறொருவர் நிலத்திற்கு நீர் பாய்ச்சுவது போன்ற காரியங்களைக் கவனிப்பார் ; பிறிதொருவர் நாணயங்கள் சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்பார் ; வழக்குகளை விசாரித்தல் ஒருவர் கடமை ; ஏனையவர் வாணிகம் சம்பந்தமான அளவுக் கருவிகளைச் சோதித்துவருவார்.

முக்கியமாக, அந்நாளில் கிராமம் கிராமத்தார் கையிலிருந்தது; கிராமம் கிராமத்தாரின் தனிச் சொத்தாக இருந்தது. நாட்டை யார் ஆண்டாலும், எந்த அரசன் வந்தாலும் சென்றாலும் கிராமத்தார் அது பற்றிக் கவலை கொள்ளவில்லை. எந்த ஆட்சியும், நாட்டுக் குழப்பங்களும் கிராமத்தை ஒரு சிறிதும் அசைக்கவில்லை. கிராமம், கல்வி, வாணிகம், கைத்தொழில், உழவு ஆகிய எவ்வாற்றானும் தலை சிறந்து விளங்கியது.

**இன்றைய கிராமம் :** ஆனால் கிராமத்தின் இன்றைய நிலை யாது? நினைக்குங்கால் நெஞ்சம் கலங்குகின்றது. ஆங்கில ஆட்சி வந்த பின்னர் கிராமச் சபைகள் மறைந்தன. நவ நாகரிகத் துறைகளிலே மக்கள் சிந்தை செல்வதாயிற்று. உழவுத் தொழிலைச் செய்வதே கேவலம் என மக்கள் எண்ணத் தொடங்கினர். தாய்மொழியில் பேசுதல் தன் மதிப்

பிறர்கேற்றதல்ல என்று கருதும் சழக்கர்களுக்குப் பின்னிட்டார்களில்லை இவர்கள். இவ்வெண்ணம் என்று மாறும்? கிராமம் கிராமமாகும்?

இன்றைய கிராம மக்களிற் பெரும்பாலோர் சோம்பேறிகளாய் உழவு முதலிய தொழிலை மறந்து திண்ணைகளிலமர்ந்து ஊர்வம்பு பேசித் திரிகின்றனர். வீண் வழக்குகளுக்காக வீணே நீதிமன்றங்களுக்குச் சென்று தங்கள் மூதாதையர் தேடிய செல்வத்தைப் பலவழிகளிலும் பாழ்ப்படுத்துகின்றனர். இம்மட்டோ? நடை உடை பாவனைகளிலும் பெரிதும் மாற்றமுடையவர்களாய் நவநாகரிகத்திற் சிக்கி நலிகின்றனர்.

மேலும், திருமணம் முதலிய சடங்குகட்காக ஏராளமாகச் செலவிடுகின்றனர். கையில் பணமில்லாதவர்கள் கூட, கௌரவத்திற்காக என்று ஆயிரக்கணக்காகக் கடன் வாங்கிச் செலவுசெய்துவிட்டு, பின்னர் அக்கடனைத் திருப்பி அடைக்க முடியாது அல்லலுறுகின்றனர். தங்கள் முன்னோர் தேடிய சொத்துக்களை விற்று ஒட்டாண்டியாகின்றனர். வருவாய்க்குத் தக்க செலவு செய்தால் இத்தகைய வருத்தங்கள் நேரிடாதல்லவோ? பின்னும், கல்வியில் கிராமத்தார் கருத்துச் செல்வதில்லை. செல்வமிருக்கும் போது படிப்பு எதற்கு என்று நினைக்கின்றனர். கல்வியில்லாதவர் கண்ணிருந்தும் இல்லாதவர் என்பதை இவர்கள் உணர்ந்தார்களில்லை. ஆனால் ஆடை அணிகலன்களிலோ அளவுக்கு மீறிச் செலவிடுகின்றனர். அதிலும் நாட்டுத் துணிகளையும், நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களையும் இவர்கள் வாங்குகின்றார்களில்லை. பிறநாட்டுப் பொருள்களின் மீதே மோகம் கொள்ளுகின்றனர். இதனால் நாட்டுக் கைத்தொழில் நாடோறும் நசித்துவருகிறது.

**முடிவு:** ஆக, பண்டைய கிராம நிலையையும், இன்றைய நிலையையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இன்றைய கிராமத்தின் சீர்கேட்டிற்கு உரிய காரணங்களில் கருத்தூன்றி, சீர்கேடுகளைக் களைதற்குரிய துறைகளில் உடனே முயல

வேண்டும். முயன்று அவைகளை இன்னே நீக்க வேண்டும். கிராமம் கிராமத்திற்குப்பொதுவானது என்ற நிலையை மீண்டும் கொணர்தல் வேண்டும். இப்பொழுதுதான் ஆங்கில ஆட்சியினரும் பழைய பஞ்சாயத்து முறையின் சிறப்பை உணரத் தலைப்பட்டிருக்கின்றனர். கிராமச் சுகாதாரம், தெருக்களுக்கு விளக்குப்போடல், சாலைகளைச் செப்பனிடல் முதலியவற்றை எல்லாம் கிராம மக்களே பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் அரசியலாரை எதிர்பார்த்தல் என்பது முடியாது.

முடிவாக, கிராம மக்களிடை உள்ள காழ்ப்பு, பொறாமை முதலிய நீங்கி ஒற்றுமை எண்ணங்கொண்டு உழைத்தால் கிராமம் கிராமமாகும். மக்கள் மகிழ்ச்சி பொங்கிப் பலவாற்றானும் சிறப்புறுவர்.